# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, ஓகத்து மாதம் 11 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 204.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்**

[*2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 38/2019*

***குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக்கூறுவதற்கும்; அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளையும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும்; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவிக்கானதும் பாதுகாப்புத் தொடர்பானதுமான தோதான சர்வதேச மரபுகளுக்கும், நியமங்களுக்கும், மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் பயன்கொடுப்பதற்கும்; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு அத்துடன் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியம் என்பவற்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

**1.** (1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

2-PL 013767 - 877 (2023/05)

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இச்சட்டத்தில், ‘‘நியமனத் தேதி’’ எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான) அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், எத்தேதியன்று சட்டமூலத்தின்மீது சபாநாயகரின் சான்றுரை இடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பாகம் I

**சட்டத்தின் குறிக்கோள்கள்**

*சட்டத்தின் குறிக்கோள்கள்*

**2**. இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக்கூறுதல்;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் போற்றிக்காப்பதில், மேம்படுத்துவதில் மற்றும் பாதுகாப்பதில் அரசினதும், நீதித்துறை அலுவலர்களினதும், பகிரங்க அலுவலர்களினதும் கடமைகளையும் பொறுப்புக்களையும் எடுத்துக்கூறுதல்;

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு எதிரான தவறுகளை அமைத்துருவாக்குகின்ற நடத்தையை விதித்தல்;

(ஈ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்குதல்;

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரும் சாட்சிகளும் அவர்களின் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் பிரயோகித்து வலுவுறுத்தி பரிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இயல்விக்கும் பொறிமுறையொன்றை வழங்குதல்;

(ஊ) நட்டஈடு, மீட்டளிப்பு, இழப்புக்கான எதிரீடு மற்றும் புனர்வாழ்வு என்பவனவுட்பட, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான நிவர்த்திப்பை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்;

(எ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபை ஒன்றையும் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு ஒன்றையும் தாபித்தல்;

(ஏ) சமகால கட்புல-செவிப்புல முறைகளுக்கூடாகச் சான்றளிப்பதற்கான ஏற்பாடுகளை குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்காகச் செய்தல்; அத்துடன்

(ஐ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மிகச்சிறந்த செயல்முறைகளை அங்கீகரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

## பாகம் II

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளும் உரித்துடைமைகளும்

*நியாயமான முறையில் நடாத்தப் படுவதற்கு குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப் பட்டவர்களின் உரிமைகள்*

**3.** (1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் பின்வருவனவற்றுக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சமத்துவத்துடனும், நியாயமான முறையிலும் மற்றும் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வரின் கௌரவத்துக்கும் அந்தரங்கத்தன்மைக்குமான மரியாதையுடனும் நடாத்தப்படுவதற்கும்;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவராக உறப்பட்ட ஏதேனும் ஊறு, சேதம் அல்லது இழப்புக்கு நிகரானதாகவுள்ள இழப்புக்கான எதிரீடு மற்றும் மீட்டளிப்பு என்பனவுட்பட, உடனடியான, போதியள வான மற்றும் நியாயமான நிவர்த்திப்பைப் பெறு வதற்கும்;

(இ) அச்சுறுத்தல்கள், மிரட்டல், பழிவாங்கல் அல்லது எதிர்த்தாக்குதல் என்பனவுட்பட, ஏதேனும் ஊறி லிருந்து அல்லது நிகழும் சாத்தியமுள்ள ஊறிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கும்;

(ஈ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவராக உறப்பட்ட பாதிப்பு அல்லது இயலாமை உட்பட, ஏதேனும் உடல்ரீதியான, உளவியல்ரீதியான, உணர்ச்சிரீதியான அல்லது உளரீதியான தீங்குக்காக சிகிச்சையளிக்கப் படுவதற்கும்;

(உ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் ஒரு பிள்ளையாக இருக்குமிடத்து, அத்தகைய பிள்ளையின் மிகச்சிறந்த நலனை உறுதிப்படுத்து மொரு முறையில் நடாத்தப்படுவதற்கும்;

(ஊ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் மருத்துவரீதியில் பரிசோதிக்கப்படவேண்டிய ஒரு பெண்ணாக இருக்குமிடத்து, மருத்துவ உயர்தொழில் சார் பெண்ணொருவரினால் அவ்வாறு பரிசோதிக்கப் படுவதற்கான கோரிக்கையொன்றைச் செய்வதற்கும்; அத்துடன்

(எ) தவறானது பாலியல் தன்மையினதாக இருக்குமிடத்து, அத்தவறு பற்றிய புலனாய்வை அல்லது விசார ணையை நிறைவேற்றும் அலுவலரின் பால்நிலையைக் குறித்துரைப்பதற்கும்.

(2) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழான அல்லது (எ) என்னும் பந்தியின்கீழான உரிமையைப் பிரயோகிக்கையில், மருத்துவ உயர்தொழில்சார் பெண்ணொருவரினால் பரிசோதிக்கப்படுவ தற்கான கோரிக்கையொன்றைச் செய்கின்ற அல்லது, புலனாய்வை அல்லது விசாரணையை நிறைவேற்றும் அலுவலரின் பால்நிலை யைக் குறித்துரைக்கின்ற போதிலெல்லாம், விடயத்துக்கேற்ப, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் கோரப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட பால்நிலையையுடைய மருத்துவ உயர்தொழிலர் ஒருவரினால் அல்லது புலனாய்வு அல்லது விசாரணை அலுவலர் ஒருவரினால் அத்தகைய மருத்துவப் பரிசோதனை அல்லது புலனாய்வு அல்லது விசாரணை நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்தல் அரசின் கடமையாதல் வேண்டும்.

குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய உதவி, பாதுகாப்பு மற்றும் பரிகாரங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு அவருக்குள்ள உரிமை

**4.** குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் வேண்டுகோள் ஒன்றின்மீது -

(அ) (i) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவருக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள பாதுகாப்பின் அளவுகள் பற்றி அதிகாரியினால் அல்லது பாதுகாப்புப் பிரிவி னால் அல்லது எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் அறிவிக்கப்படுவதற்கும்;

(ii) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவரினால் உறப்பட்ட ஏதேனும் ஊறை நிவர்த்தி செய்வதற்காகக் கிடைக்கக்கூடியன வாகவுள்ள தீங்கியல்சார் பரிகாரங்கள் உட்பட,

சட்டரீதியான பரிகாரங்கள் பற்றி அதிகாரியினால் அல்லது பாதுகாப்புப் பிரிவினால் அல்லது எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் அறிவிக்கப்படுவதற்கும்; அத்துடன்

(iii) சட்டரீதியான பரிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தக் காலப்பகுதிகளினுள் சட்ட நடவடிக்கை தொடுக்கப்படவேண்டுமோ அந்தக் காலப்பகுதிகள் பற்றி அதிகாரியினால் அல்லது பாதுகாப்புப் பிரிவினால் அல்லது எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் அறிவிக்கப்படுவதற்கும்,

உரிமையுடையவராதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் தீங்குக்கான சிகிச்சையளிப்புக்காகக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள மருத்துவ சேவைகள், சமூக சேவைகள் மற்றும் வேறு உதவி அத்துடன் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு உதவுவதற்கு கிடைக்கக்கூடியனவாகவுள்ள எவையேனும் வசதிகள் என்பன பற்றி அதிகாரியினால் அல்லது பாதுகாப்புப் பிரிவினால் அறிவிக்கப்படுவதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு முறைப்பாடுகள், விசாரணைகள், புலனாய்வுகள் முதலியன தொடர்பிலுள்ள உரிமை

**5**. (1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் பின்வருவனவற்றுக்கு உரிமையுடையவராக இருத்தல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், இச்சட்டத்தின்கீழான தவறொன்றை அமைத்துருவாக்கும் ஏதேனும் நடத்தை தொடர்பில் முறைப்பாடொன்றைச் செய்வதற்கு அல்லது முறைப்பாடொன்று செய்யப்படுவதனைச் செய்விப்பதற்கு மற்றும் அத்தகைய முறைப்பாடு சட்டத்துக்கிணங்க பதியப்படுவதற்கும் புலனாய்வு செய்யப்படுவதற்கும்;

(ஆ) நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனும் புலனாய்வுக்கு அல்லது விசாரணைக்குப் பங்கமின்றி, அவர் தானாக அல்லது சட்டத்தரணியொருவர் ஊடாக புலனாய்வு

அதிகாரிக்கு அல்லது விசாரணை அதிகாரிக்கு முறையீடுகளைச் செய்வதற்கும் மற்றும் ஒரு நியாயமான காலப்பகுதியினுள் பதிலொன்றைப் பெறுவதற்கும்;

(இ) குற்றவழக்குத்தொடுப்பதற்குப் பங்கமின்றியும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும், நீதிமன்ற மொன்றின் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்ன ரான எவையேனும் வழக்குநடவடிக்கைகளின் எந்தக் கட்டத்திலும் சட்டத்தரணியொருவர் மூலம் பிரதிநிதித் துவப் படுத்தப்படுவதற்கும்;

(ஈ) அவசியமெனில், அரசினால் சட்ட உதவி வழங்கப் படுவதற்கான கோரிக்கையொன்றைச் செய்வதற்கும்;

(உ) தவறாளருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேலும் மற்றும் தண்டனைத்தீர்ப்பு தீர்மானிக்கப்பட முன்னரும், ஒன்றில் தனிப்பட்ட முறையில் அல்லது சட்டத்தரணி ஒருவருக்கூடாக, 8 ஆம் பிரிவுக்கிணங்க பலியாக்கப் பட்டவர் பற்றிய தாக்கக் கூற்றொன்றை நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஊ) தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு மன்னிப்பளிப்பதனை அல்லது விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பைக் குறைப்பதனை அதிகாரத்தி லுள்ள எவரேனுமாள் கவனத்திற்கொள்ளும் பட்சத்தில் அதுபற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கும் மற்றும் புரியப்பட்ட தவறானது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவர்மீது எந்த முறையில் உடல்ரீதியாக, உணர்ச்சி ரீதியாக, உளவியல்ரீதியாக, நிதிரீதியாக, உயர்தொழில் ரீதியாக தாக்கம் செலுத்தியுள்ளதோ அந்த முறையில் அல்லது வேறு ஏதேனும் முறையில், அத்தகைய மன்னிப்பை அல்லது குறைப்பை அளிக்கும் ஆளுக்கு அதிகாரிக்கூடாகச் சமர்ப்பிப்பதற்கும்;

(எ) புலனாய்வின், விசாரணையின் அல்லது வழக்கு நடவடிக்கையின் ஏதேனும் கட்டத்தில், தவறானது குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்மீது எந்த முறையில் தாக்கம் செலுத்தியுள்ளதோ அந்த முறை தொடர்பாக, சட்டத்தரணியொருவர் ஊடாக அல்லது அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் எழுத்துமூலமாக சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு முறையீடுகளைச் செய்வதற்கும்;

(ஏ) புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்டுள்ள தவறு தொடர்பில் நீதிமன்றமொன்றின் அல்லது ஆணைக்குழு வொன்றின் முன்னருள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்குச் சமுகமளிப்பதனை மற்றும் அவற்றில் பங்குபற்றுவதனை வசதிப்படுத்துகின்ற ஏதேனும் இயைபான தகவலை மற்றும் உதவியை அதிகாரசபையிடமிருந்து பெறுவதற்கும் ; அத்துடன்

(ஐ) சுருக்கமுறையற்ற விசாரணைகள், விளக்கங்கள், மேன்முறையீடுகள் மற்றும் மீளாய்விலான எவையேனும் விண்ணப்பங்கள் என்பவற்றில் உட்பட, தவறொன்று தொடர்பான எவையேனும் குடியியல் அல்லது குற்ற வியல், நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளிலும், அத்தகைய வழக்குநடவடிக்கை களில் வேறு சான்றை அவர் கேட்டால் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் எதிர்காலச் சான்று முக்கியமான வகையில் பாதிக்கப்படக்கூடுமென அல்லது அத்தகைய வழக்குநடவடிக்கைகளின் குறித்தசில பாகங்கள் கேட்கப்படும்போது அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் சமுகமாக விருப்பதனைத் தவிர்ப்பதன்மூலம் மட்டுமே நீதியின் முறையான நிறைவேற்றுகையைப் பெறமுடியுமெனப் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது வேறு நியாயசபை தீர்மானித்தா லொழிய, சமுகமாகவிருப்பதற்கும்.

(2) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் செய்யப்பட்ட கோரிக்கை ஒன்றின்மேல் பின்வருவனவற்றுக்கு உரிமையுடையவராதல் வேண்டும் –

(அ) இயைபான பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் அல்லது சார்த்தப்பட்ட தவறு பற்றிய புலனாய்வை அல்லது விசாரணையை நடாத்திவருகின்ற வேறு அதிகாரியினால், புலனாய்வின் அல்லது விசாரணையின் முன்னேற்றம் பற்றி அறிவிக்கப்படுவதற்கும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தகவல்களை வெளியிடுதல் நீதிமுறைப்படுத்தக்கூடிய காரணங்களுக்காகப் பிடித்துவைத்திருக்கப்படலாம்:

(ஆ) சார்த்தப்பட்ட தவறு தொடர்பாக வழக்கை கேட்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிகள் அல்லது நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றம் அல்லது அவற்றைக் கேட்டுத்தீர்மானித்தல் பற்றியும் மற்றும் அத்தகைய நீதிமுறை வழக்குநடவடிக்கைகள் தொடர்பாகக் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் உரிமைகளும் உரித்துடைமைகளும் பற்றியும், விடயத்துக்கேற்ப, இயைபான பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால், சார்த்தப்பட்ட தவறு பற்றிய புலனாய்வை அல்லது விசாரணையை நடாத்திவருகின்ற வேறு அதிகாரியினால், சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது இயைபான நீதிமன்றப் பதிவாளரினால் அறிவிக்கப்படுவதற்கும்;

(இ) பின்வருவனவற்றுள் எவை தொடர்பாகவும் வழக்கு நடவடிக்கைகள் எத்தேதியன்று அடுத்து அட்டவணைப் படுத்தப்படுகின்றனவோ அத்தேதிபற்றி, விடயத்துக் கேற்ப, இயைபான பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால், சார்த்தப்பட்ட தவறு பற்றிய

புலனாய்வை அல்லது விசாரணையை நடாத்திவருகின்ற வேறு அதிகாரியினால், சட்டத்துறைத் தலைமையதிபதியினால், இயைபான நீதிமன்றப் பதிவாளரினால் அல்லது மறியற்சாலைகள் கண்காணிப்பாளரினால் அறிவிக்கப்படுவதற்கும்:-

(i) சந்தேகநபரை பிணையில் விடுதல் அல்லது விட்டுவிடுதல்;

(ii) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தல்;

(iii) விடயத்துக்கேற்ப, சந்தேகநபருக்கு அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் குற்றத்தீர்ப்பளித்தல், அவரை விடுதலை செய்தல், விட்டுவிடுதல் அல்லது தண்டனைத் தீர்ப்பளித்தல்; அல்லது

(iv) சந்தேகநபரை அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளை மறியற்சாலையிலிருந்து விடுவித்தல்.

(3) (அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், சந்தேகநபரை அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் அல்லது வேறு வகையில் விடுவித்தமை தொடர்பான நீதிமன்றக் கட்டளையின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து நீதிமன்றப் பதிவாளருக்கு கோரிக்கை ஒன்றைச் செய்யலாம்.

(ஆ) பந்தி (அ) இன்கீழான கோரிக்கையொன்றைப் பெற்றதன்மேல், நீதிமன்றப் பதிவாளர், அத்தகைய கோரிக்கைபற்றி துரிதமான முறையொன்றில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மன்னிப்பளிப்பை அல்லது தண்டனைத்தீர்ப்புக் குறைப்பைக் கவனத்திற்கொள்கின்ற அதிகாரத்திலுள்ள ஆள் சனாதிபதியாக இருக்கும் பட்சத்தில், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அதுபற்றிய அறிவித்தலைக் கொடுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய நிகழ்வுபற்றி அதிகாரசபைக்கு அறிவிக்கும் கடமை சனாதிபதியின் செயலாளர்மீதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அதிகாரத்திலுள்ள ஆள் மாகாணமொன்றின் ஆளுநராக இருக்கும் பட்சத்தில், அத்தகைய கடமையானது அத்தகைய மாகாண ஆளுநரின் செயலாளர்மீதாதலும் வேண்டும்.

குறித்தசில ஆவணங்களின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்குள்ள உரிமை

**6.** (1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் அல்லது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் சார்பில் வேறு ஆள், புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறு பற்றிய புலனாய்வு, விசாரணை அல்லது விளக்கம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஆணைக்குழுவில் கோப்பிடப்பட்டிருக்கக்கூடிய பின்வருவனவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன்மீதும் அத்தகைய நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு உரிமையுள்ளவராதல் வேண்டும் -

(அ) இறப்புக்கான காரணப் படிவம்;

(ஆ) பிரேதப் பரிசோதனை அறிக்கை;

(இ) சட்ட மருத்துவ அறிக்கை;

(ஈ) கைவிரலடையாளப் பதிவாளரின் அறிக்கை;

(உ) அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கை; அல்லது

(ஊ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு பயன்படக்கூடிய வேறு ஏதேனும் அறிக்கை.

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, அதுபற்றிய அறிவித்தலொன்றும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெறுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றம் அல்லது ஆணைக்குழுவானது -

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அத்தகைய படிவத்தின் அல்லது அறிக்கையின் அவசியத்தன்மை பற்றி அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் திருப்திக்கு எண்பித்தால், அத்தகைய படிவத்தை அல்லது அறிக்கையை வழங்குதல் வேண்டும்;

(ஆ) அதன் அபிப்பிராயத்தில், அத்தகைய படிவத்தை அல்லது அறிக்கையை வழங்குவதானது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏதேனும் புலனாய்வுக்கு, விசாரணைக்கு, விளக்கத்துக்கு அல்லது வழக்குநடவடிக்கைக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடும் என்றிருப்பின், அதனை வழங்குதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் படிவத்தை அல்லது அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான அவசியத்தன்மையை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற ஆளின்மீதாதல் வேண்டும்.

*நிதி உதவியைப் பெறுவதற்கு குற்றச்செயல் களுக்கு பலியாக்கப்பட்ட ஒருவருக்குள்ள உரித்துடைமை கள்*

**7.** (1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், பின்வருவனவற்றின் விளைவொன்றாக உறப்பட்ட செலவினங்களின் பிரதிபயனாக, நிதி உதவியின் கிடைக்கக்கூடியதன்மைக்கு இணங்க, அதிகாரசபையிடமிருந்து நியாயமான அத்தகைய நிதி உதவியைக் கோருவதற்கும் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும் -

(அ) புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறின்; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறு தொடர்பில் ஒரு நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முன்னரான எவையேனும் வழக்குநடவடிக்கைகளிலான அவரது பங்குபற்றுகையின்.

(2) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவராக இருப்பதன் விளைவாக அவரினால் உறப்பட்ட ஏதேனும் தீங்கு தொடர்பில் தோதான மருத்துவ சேவைகள், மருந்துகள் மற்றும் வேறு மருத்துவ வசதிகள் அல்லது உளவியல் அல்லது சமூக உதவி என்பனவுட்பட, ஏதேனும் மருத்துவச் சிகிச்சைக்காக அரசிடம் கோருவதற்கும் அவற்றைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், சமூகமட்ட ஒழுங்கமைப்புக்களுக்கூடாக உட்பட, எவையேனும் முறைகளுக் கூடாக அவசியமான உளவளத்துணை மற்றும் புனர்வாழ்வுச் சேவைகளை அரசிடம் கோருவதற்கும் அவற்றைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இரண்டாம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் மருத்துவ சிகிச்சைக்கான, சேவைகளுக்கான, வசதிகளுக்கான அல்லது உதவிக்கான கோரிக்கையொன்று விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபைக்குச் செய்யப்படலாம் என்பதுடன் அதிகாரசபையானது அத்தகைய கோரிக்கையை மேற்கொண்டு முன்னெடுத்து, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய தோதான சிகிச்சை, சேவைகள், வசதிகள் அல்லது உதவி என்பவற்றை துரிதமான முறையில் செய்தல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கோரிக்கை தொடர்பில், இச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின்கீழான இடைக்கால அளிப்பொன்றை வழங்குதல் பற்றிக் கவனத்துட் கொள்ளலாம்.

*பலியாக்கப் பட்டவர் பற்றிய தாக்கக்கூற்று*

**8**. *(1)* குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறு எந்த முறையில் அவர்மீது உடல்ரீதியாக, உணர்ச்சிரீதியாக, உளவியல்ரீதியாக, நிதிரீதியாக, உயர்தொழில்ரீதியாக அல்லது வேறு ஏதேனும் முறையில் தாக்கம் செலுத்தியுள்ளதோ, அந்த முறையை விபரிப்பதற்கு (இச்சட்டத்தில் "பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக்கூற்று" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) எழுத்திலான கூற்றொன்றை நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு அளிப்பதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

*(2)* எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு ஏற்றுக்கொள்ளப் படற்பாலதான ஏதேனும் காரணத்துக்காக அத்தகைய பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக்கூற்றை அளிப்பதற்கு இயலாதுள்ளவராக அல்லது அளிக்கும் ஆற்றலில்லாதவராக இருக்குமிடத்து, நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் அனுமதிக்கப் படக்கூடியவாறாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் சார்பில் வேறு எவரேனுமாள் அத்தகைய கூற்றை அளிக்கலாம்.

*(3)* பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக்கூற்று பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் -

(அ) பலியாக்கப்பட்டவரின் தனிப்பட்ட கூற்றொன்று; அத்துடன்

(ஆ) பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்க அறிக்கையொன்று.

*(4)* மூன்றாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பலியாக்கப்பட்டவரின் தனிப்பட்ட கூற்றானது -

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் மீதான தவறின் உடல்ரீதியான, உணர்ச்சிரீதியான, உளவியல்ரீதியான, நிதிரீதியான, உயர்தொழில்ரீதியான அல்லது வேறு தாக்கத்தை எடுத்துக்கூறுதல் வேண்டும்;

(ஆ) ஏற்புடையற்பாலதாக இருக்குமிடத்து, தவறானது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் வயது, பால்நிலை, இனம், மதநம்பிக்கை, சமயம், பாலுணர்வியல் அல்லது இயலாமையினால் உந்தப்பட்டிருந்ததா எனும் கூற்றொன்றை உள்ளடக்கலாம்;

(இ) பலியாக்கப்பட்டவர், இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான நட்டஈட்டை உரிமை கோருவதற்கு விரும்புகின்றாரா அல்லது வேறு உதவியை தேவைப்படுத்துகின்றாரா என்பது பற்றிக் கூறலாம்.

(5) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்க அறிக்கையொன்று மருத்துவ நிபுணரொருவரினால் அல்லது உளவியலாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட அறிக்கையொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருத்தலும் வேண்டும் –

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் மீதான தவறின் உள அதிர்ச்சித் தாக்கம் பற்றிய ஓர் அபிப்பிராயம்; அத்துடன்

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் மீதான தவறின் தாக்கத்தின் விளைவாக, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் தேவைகள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையொன்று.

(6) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரினால் அல்லது அவர் சார்பில் எவரேனும் வேறு ஆளினால் ஒரு நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட பலியாக்கப்பட்டவர் பற்றிய தனிப்பட்ட கூற்று மற்றும் பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்க அறிக்கை என்பன எதிர்த்தரப்பினருக்குக் கிடைக்கக்கூடியனவாக ஆக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது அத்தகைய கூற்றை அளித்த வேறு ஆள் அல்லது பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்க அறிக்கையை வழங்கிய மருத்துவ நிபுணர் அல்லது உளவியலாளர் அத்தகைய

நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முன்னரான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் சான்றளிப்பதற்கென அழைப்பாணை விடுக்கலாம்.

(7) நீதிமன்றமொன்று அல்லது ஆணைக்குழுவொன்று, வழக்கு நடவடிக்கைகளின் ஏதேனும் கட்டத்திலும் மற்றும் எதிர்த் தரப்பினருக்கான அறிவித்தலுடனும், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரிடமிருந்து அல்லது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் சார்பில் வேறு எவரேனும் ஆளிடமிருந்து பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக்கூற்றொன்றைக் கோரலாம் என்பதுடன் அத்தகைய பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக் கூற்று தொடர்பில் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*சாட்சி ஒருவரின் உரிமைகளும் உரித்துடைமைகளும்*

**9**. (1) சாட்சியொருவர், எல்லா சூழ்நிலைகளிலும் நியாயமாகவுள்ள முறையொன்றில் அவரது கௌரவத்துக்கும் அந்தரங்கத்தன்மைக்குமான மரியாதையுடன் எப்போதும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) சாட்சி ஒவ்வொருவரும் பாதுகாப்புக்கு உரித்தடையவராவார் என்பதுடன் அத்தகைய பாதுகாப்பை வழங்குவது அரசின் கடமையாதலும் வேண்டும்.

(3) (அ) சாட்சியொருவர், தவறொன்றின் சார்த்தப்பட்ட புரிகை அல்லது ஏதேனும் அடிப்படை உரிமை மீறுகை அல்லது கு.அ.உ.ச.உ. சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமையின்மீறல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்துக்கு, ஆணைக்குழுவுக்கு அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் ஏதேனும் தகவலை வழங்குவதற்கு அல்லது கூற்றொன்றை அளிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ஆ) சான்றுச் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமையவும் மற்றும் சாட்சியொருவருக்கு நீதிமன்றமொன்றின் அல்லது ஆணைக்குழுவொன்றின் தற்றுணிபில் அழைப்

பாணைகள் சேர்ப்பிக்கப்படுவதற்கு அமையவும், சாட்சியொருவர் ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முன்னர் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் சான்றளிப்பதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

(4) புலனாய்வொன்றுக்கு அல்லது விசாரணையொன்றுக்கு முன்னர் அல்லது அதன்போது அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஆணைக்குழுவில் எவையேனும் வழக்குநடவடிக்கைகள் முடிவுறாதிருக்கும்போது சாட்சியொருவரின் பங்குபற்றுகை தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய சாட்சி, இச்சட்டத்தில் தரப்பட்ட அவரது உரிமைகளும் உரித்துடைமைகளும் மீறப்படுகின்ற முறையொன்றில் தொல்லைக்குட்படுத்தப்படுதல், மிரட்டப்படுதல், வலுக்கட்டாயப்படுத்தப்படுதல் அல்லது நடாத்தப்படுதல் ஆகாது.

(5) சாட்சியொருவர், எவரேனுமாளினால் தவறொன்று புரியப்பட்டமை தொடர்பாக அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையொன்றின் மீறுகைக்காக அல்லது கு.அ.உ.ச.உ. சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமையின் மீறலுக்காக-

(அ) தகவல் அல்லது தொடர்பாடல் வழங்கியுள்ளதன் அல்லது முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்துள்ளதன் விளைவாக;

(ஆ) புலனாய்வொன்றின்போது அல்லது விசாரணை ஒன்றின்போது எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்குக் கூற்றொன்றை அளித்துள்ளதன் அல்லது சத்தியக் கடதாசியொன்றைச் சமர்ப்பித்துள்ளதன் விளைவாக;

(இ) ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஏதேனும் ஆணைக்குழுவின் முன்னிலையில் ஏதேனும் சாட்சியத்தை வழங்கியதன் அல்லது ஏதேனும் சான்றை அளித்துள்ளதன் விளைவாக;

(ஈ) பகிரங்க அலுவலராகவிருந்து, நீதிநிருவாகத்தில் ஏதேனும் முறையில் ஈடுபட்டுள்ளதன் விளைவாக; அல்லது

(உ) சட்ட வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்ததன் விளைவாக,

அத்தகைய சாட்சி, ஏதேனும் உண்மையான அல்லது நிகழக்கூடிய தீங்கு, அச்சுறுத்தல், மிரட்டுதல், பழிவாங்குதல் அல்லது எதிர்த்தாக் குதல் என்பவற்றுக்கெதிரான பாதுகாப்புக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப் பட்டவரின் அல்லது சாட்சிகளின் உரிமைகள் மீறப்படுதல் அல்லது உரித்துடை மைகள் மறுக்கப்படுதல் தொடர்பாக முறைப் பாடுகளைச் செய்தல்

**10**. (1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் அல்லது சாட்சியொருவர் அல்லது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் சார்பில் அல்லது சாட்சியொருவர் சார்பில் வேறு எவரேனுமாள், இச்சட்டத்தின் இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடை மையின் மீறுகை அல்லது மறுப்பு, அல்லது உடனிகழக்கூடிய மீறுகை அல்லது மறுப்பு தொடர்பில், அத்தகைய உரிமையின் அல்லது உரித்துடைமையின் சார்த்தப்பட்ட மீறுகை அல்லது மறுப்பு, அல்லது உடனிகழக்கூடிய மீறுகை அல்லது மறுப்பு இடம்பெற்ற தேதியி லிருந்து முப்பது நாட்களுக்குள், ஒன்றில் வாய்மொழிமூலமாக அல்லது எழுத்தில், அதிகாரசபைக்கு முறைப்பாடொன்றைச் செய்ய லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான முறைப்பாடொன்று வாய்மொழிமூலமாகச் செய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய முறைப்பாட்டைப் பெறுகின்ற அலுவலரினால் அது உடனடியாக எழுத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் பெறப்பட்ட ஏதேனும் முறைப்பாடு பற்றிய புலனாய்வுக்கு அல்லது விசாரணைக்கு ஏற்புடையற்பாலதான நடவடிக்கைமுறை இச்சட்டத் தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

**11.** இச்சட்டத்தின் இப்பாகத்தில் தரப்பட்டுள்ள குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமை களையும் உரித்துடைமைகளையும் ஏற்றங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் என்பன, ஒவ்வொரு நீதித்துறை அலுவலர், ஆயுதந்தாங்கிய படைகளின் ஒவ்வோர் உறுப்பினர் மற்றும் பொலிசுப் படை உட்பட, ஒவ்வொரு பகிரங்க அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

*குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப் பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமை களுக்கு மதிப்பளிப்ப தற்கு பகிரங்க அலுவலர் களுக்குள்ள கடமை*

**12.** இச்சட்டத்தின் இப்பாகத்திலுள்ள எதுவும் -

*உரிமைகளி னதும் உரித்துடைமை களினதும் வரையறைகள்*

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தரப்பட்ட குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளின தும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகள் தொடர்பில் குறிப்பான செலவினங்களை உறுவதற்கு பகிரங்க அதிகாரசபையொன்றைத் தேவைப்படுத்துவதற்கான உரிமையொன்றை எவரேனும் ஆளுக்குக் கொடுப்பதாக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தரப்பட்ட குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகள் தொடர்பில் செலவினங்களை உறுவதற்கு பகிரங்க அதிகாரசபை யொன்றைத் தேவைப்படுத்துவதாக,

பொருளமைத்துக் கொள்ளப்படுதலாகாது.

**13.** (1) அதிகாரசபையானது, அவ்வதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான, அத்தகைய படிவத்திலும் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் தொடர்பான அத்தகைய தகவல்களை உள்ளடக்கியும், "பலியாக்கப்பட்டவர் பற்றிய இடாப்பு" எனவழைக்கப்படும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

*பலியாக்கப் பட்டவர் பற்றிய தகவல் இடாப்பு*

(2) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், அவரினாலோ அல்லது சட்டத்தரணியொருவர் ஊடாகவோ செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகவல்களை வழங்குவதன்மூலம் பலியாக்கப்பட்டவர் பற்றிய தகவல் இடாப்பில் அவரையும் பதிவுசெய்யுமாறு அதிகாரசபையைக் கோரலாம்.

(3) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், பலியாக்கப்பட்டவர் பற்றிய தகவல் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட பின்னர், அதிகாரசபைக்குச் செய்யப்பட்ட கோரிக்கையொன் றின்மேல், தவறாளர் தொடர்பில் பின்வரும் எவையேனும் கருமங் கள் பற்றிய தகவல்களை அதிகாரசபையிடமிருந்து பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) தவறாளர்மீது விதிக்கப்பட்ட தண்டனை;

(ஆ) தவறாளர் கட்டுக்காப்பிலிருந்து தப்பிச்சென்று மீளப்பிடிக்கப்பட்ட ஏதேனும் சந்தர்ப்பம் எதுவுமிருப்பின், அச்சந்தர்ப்பம்;

(இ) தவறாளர் எந்த எதிர்வரும் தேதிகளில் கட்டுக்காப்பி லிருந்து விடுவிக்கப்படவுள்ளாரோ அந்த எதிர்வரும் தேதிகள்; அல்லது

(ஈ) தவறாளரின் குற்றத்தீர்ப்புக்கும் தண்டனைத்தீர்ப்புக்கும் எதிரான மேன்முறையீடுகள் எவையேனும் இருப்பின் அம்மேன்முறையீடுகள் பற்றிய விபரங்கள்.

(4) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவரினால் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கோரப்பட்ட தகவல்களை தாமதமின்றி எழுத்தில் வழங்குவது அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, பலியாக்கப்பட்டோர் பற்றிய தகவல் இடாப்பில் உள்ளடக்கப்பட்ட குற்றச்செல்களுக்குப் பலியாக்கப் பட்டோர் மற்றும் சாட்சிகள் தொடர்பான தகவல்கள் தொடர்பில் இரகசியத்தன்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், சட்டத் தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகத் தவிர, அத்தகைய எவையேனும் தகவல்களைப் பகிர்தலும் ஆகாது.

பாகம் III

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் எதிரான தவறுகள்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்ட ஒருவரை அல்லது சாட்சி ஒருவரை மிரட்டுதல்

**14.** குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சி ஒருவரை அவரது உடலுக்கு, புகழுக்கு அல்லது ஆதனத்திற்கு, அல்லது அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி எந்த வேறெவரேனும் ஆளில் அக்கறைகொண்டுள்ளாரோ அந்த வேறெவரேனும் ஆளின் உடலுக்கு, புகழுக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறுபாடு ஏற்படுத்தப்போவதாக -

(அ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு அச்சம் விளைவிக்கும் உட்கருத்துடன்;

(ஆ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை -

(i) ஒரு சட்ட வலுவுறுத்தல் அதிகாரியிடம் அத்தகைய ஆளுக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்யாது தவிர்ப்பதனை; அல்லது

(ii) அத்தகைய ஆளுக்கெதிரான எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்காது தவிர்ப்பதனைச்,

செய்விக்கும் உட்கருத்துடன்; அல்லது

(இ) அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அல்லது தொடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையொன்றை மீளப்பெறும்படி அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை வலுக்கட்டாயப்படுத்தும் உட்கருத்துடன்,

அச்சுறுத்துகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை

விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும். மேலதிகமாக, ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றை நட்டஈடாகச் செலுத்துமாறு அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடப்படலாம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்கு காயம் விளைவித்தல்

**15.** குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு -

(அ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை -

(i) ஒரு சட்ட வலுவுறுத்தல் அதிகாரியிடம் அத்தகைய ஆளுக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்யாது தவிர்ப்பதனைச்; அல்லது

(ii) அத்தகைய ஆளுக்கெதிரான எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்காது தவிர்ப்பதனைச்,

செய்விக்கும் உட்கருத்துடன்; அல்லது

(ஆ) அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அல்லது தொடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையொன்றை மீளப்பெறும்படி அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை வலுக்கட்டாயப்படுத்தும் உட்கருத்துடன்; அல்லது

(இ) அத்தகைய ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஏதேனும் ஆணைக்குழுவின் முன்னிலையில் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட

வரினால் அல்லது சாட்சியினால் செய்யப்பட்டவொரு கூற்றுக்கான அல்லது வழங்கப்பட்ட சாட்சியத்துக்கான பதிலடி கொடுக்கும் உட்கருத்துடன்,

தன்னிச்சையாக காயம் அல்லது கடுங்காயம் விளைவிக்கின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சி ஒருவரைத் தடுத்து வைத்தல்

**16.** குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரை -

(அ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை -

(i) ஒரு சட்ட வலுவுறுத்தல் அதிகாரியிடம் அத்தகைய ஆளுக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்வதிலிருந்து தடுக்கின்ற; அல்லது

(ii) அத்தகைய ஆளுக்கெதிரான எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிப்பதிலிருந்து தடுக்கின்ற,

உட்கருத்துடன்;

(ஆ) அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அல்லது தொடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையொன்றை மீளப்பெறும்படி அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை வலுக்கட்டாயப்படுத்தும் உட்கருத்துடன்; அல்லது

(இ) அத்தகைய ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஏதேனும் ஆணைக்குழுவின் முன்னிலையில் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் அளிக்கப்பட்டவொரு கூற்றுக்கான அல்லது வழங்கப்பட்ட சாட்சியத்துக்கான பதிலடி கொடுக்கும் உட்கருத்துடன்,

பிழையான முறையில் தடுத்துவைக்கின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சி ஒருவரை ஏதேனும் இடத்தை விட்டுச் செல்லும்படி வலுக்கட்டாயப் படுத்தல், அல்லது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சி ஒருவரின் ஆதனத்துக்கு இழப்பு அல்லது சேதம் விளைவித்தல்

**17**. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட எவரையும் அல்லது சாட்சியொருவரை, ஆளொருவருக்கு எதிராகச் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு முறைப்பாடொன்றைச் செய்வதனை அல்லது ஏதேனும் கூற்றை அளிப்பதனைத் தடுக்கும் அல்லது எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்குநடவடிக்கைகளில் அத்தகைய ஆளுக்கெதிராகச் சாட்சியமளிப்பதனைத் தடுக்கும் உட்கருத்துடன் அல்லது அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு அத்தகைய ஆளுக்கெதிராக அளிக்கப்பட்டவொரு கூற்றுக்கு அல்லது எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய ஆளுக்கெதிராக வழங்கப்பட்ட சாட்சியம் காரணமாக பதிலடியாக -

(அ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை ஏதேனும் இடத்தை விட்டுச்செல்லும்படி வலுக்கட்டாயப்படுத்துகின்ற அல்லது ஏமாற்றும் வழிவகைகளின் செயல்முறைமூலம் அல்லது அதிகாரத் துஷ்பிரயோகம்மூலம் அல்லது வேறு எவையேனும் சட்டமுரணான செயல்முறைசார் வழிவகைகள்மூலம் தூண்டுகின்ற அல்லது வலோற்காரப்படுத்துகின்ற; அல்லது

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர் எந்தவோர் ஆதனத்தில் சட்டமுறையான அக்கறையொன்றைக் கொண்டுள்ளாரோ அந்தவோர் ஆதனத்துக்கு வேண்டுமென்று அல்லது அறிந்து கொண்டு ஏதேனும் இழப்பை, சேதத்தை அல்லது அழிவை விளைவிக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதி யொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும். மேலதிகமாக, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஆதனத்துக்கு அத்தகைய ஆளினால் விளைவிக்கப்பட்ட இழப்பு, சேதம் அல்லது அழிவு தொடர்பில் செலுத்துமாறு அவருக்கு நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டைச் செலுத்துவதற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

தொழிலிடத்தில் ஆளொரு வருக்குத் தொல்லை கொடுத்தல்

**18**. எவரேனுமாள், அத்தகைய ஆளினால் தவறொன்று புரியப்பட்டமை தொடர்பில் அல்லது ஏதேனும் அடிப்படை உரிமை மீறுகை தொடர்பில் அல்லது கு.அ.உ.ச.உ. சட்டத்தின்கீழான ஏதேனும் உரிமைமீறல் தொடர்பில், வேறோர் ஆள் –

(அ) ஏதேனும் தகவலை வழங்கியுள்ளதன் அல்லது முறைப் பாடொன்றைச் செய்துள்ளதன் விளைவாக;

(ஆ) எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு, ஏதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு கூற் றொன்றை அளித்துள்ளதன் விளைவாக;

(இ) ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஏதேனும் ஆணைக் குழுவின் முன்னர் ஏதேனும் சாட்சியம் வழங்கியுள்ளதன் விளைவாக; அல்லது

(ஈ) சட்ட வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்துள்ளதன் விளைவாக,

அத்தகைய வேறோர் ஆளின் தொழிலிடத்தில் ஏதேனும் தொல்லையை, பலவந்தப்படுத்தலை, உடல்ரீதியான அல்லது உளரீதியான இன்னலை அல்லது தொழில் நிபந்தனைகளுக்குப் பாதகமான மாற்றமொன்றை விளைவிக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகை யிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

சட்ட வழக்கு நடவடிக்கைகள் முதலியவற்றைத் தடுப்பதற்கு அவாநிறைவு வழங்குதல்

**19**. தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்டவராக, சந்தேகிக்கப்பட்டவராக அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவராக இருந்து -

(அ) அத்தகைய தவறைப் புரிந்தமைக்காக அத்தகைய முதற்குறிப்பிடப்பட்ட ஆளுக்கெதிராகச் சட்ட வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு உட்கருதுகின்ற அல்லது ஆயத்தஞ்செய்கின்ற; அல்லது

(ஆ) எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு, ஏதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு அத்தகைய முதற்குறிப்பிடப்பட்ட ஆளுக்கெதிராகத் தகவலை அல்லது சாட்சியத்தை வழங்கக்கூடிய சாத்தியங்கொண்ட வராக இருக்கின்ற,

வேறெவரேனுமாளுக்கு, அத்தகைய முதற்குறிப்பிடப்பட்ட ஆளுக்கெதிராகச் சட்டவழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கா திருப்பதற்கு அல்லது உண்மையான தகவலை அல்லது சாட்சியத்தை வழங்காதிருப்பதற்கு அத்தகைய வேறு ஆளைத் தடுக்கும், ஊக்கமிழக்கச்செய்யும் அல்லது செய்யாதிருக்கும்படி வற்புறுத்தும் நோக்குடன் ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற, வழங்குகின்ற

அல்லது கொடுக்கின்ற அந்த எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதி மன்றத்தால் குற்றத்தீப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந் தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகை யிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

தகவல்களை வெளிப் படுத்தல்

**20.** (அ) சார்த்தப்பட்ட தவறொன்று பற்றிய புலனாய் வொன்றை அல்லது விசாரணையொன்றைத் தொடங்கும் அல்லது நடாத்தும் நோக்கத்துக்காக வழங்கப்பட்ட ஏதேனும் தகவலைப் பெற்றுள்ளவரும்;

(ஆ) சார்த்தப்பட்ட தவறு பற்றிய புலனாய்வொன்றின் அல்லது விசாரணையொன்றின்போது ஏதேனும் தகவலைச் சேகரித்துள்ளவரும்; அல்லது

(இ) பந்திகள் (அ) அல்லது (ஆ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தகவலை வேறு ஆளிடமிருந்து பெற்றுள்ளவரும்,

குறிப்பாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின், சாட்சியின் அல்லது தகவலளிப்பவரின் ஆளடையாளம் தொடர்பாக அத்தகைய ஏதேனும் தகவலை அல்லது அதன் பாகத்தை மூன்றாம் ஆளொரு வருக்கு அளிக்கின்ற, வழங்குகின்ற அல்லது கொடுக்கின்ற, வெளியிடுகின்ற அல்லது வேறுவகையில் பரப்புகின்றவரும், அதன்மூலம் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவரின், சாட்சியின் அல்லது தகவலளிப்பவரின் உயிரை ஆபத்துக்குட்படுத்துகின்றவருமான எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது

ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், தகவலை நல்லெண்ணத்துடனும் -

(i) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது நடவடிக்கைமுறைக்கு;

(ii) நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு; அல்லது

(iii) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்கு உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு,

இணங்கவும் அல்லது இணங்கியொழுகியும் அளிப்பது, வழங்குவது அல்லது கொடுப்பது, வெளியிடுவது அல்லது பரப்புவது தவறொன்றாதலாகாது.

பொய்யான தகவல்களை வழங்குதல்

**21.** அதிகாரசபையிடமிருந்து, பாதுகாப்புப் பிரிவு உட்பட பொலிசிடமிருந்து, நீதிமன்றமொன்றிடம் அல்லது ஆணைக்குழுவிடமிருந்து ஏதேனும் உதவியை அல்லது பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளும் உட்கருத்துடன், ஏதேனும் தகவல் பொய்யானதென அறிந்துகொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான ஏதுக்களுடன் அத்தகைய தகவலை வழங்குகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல்நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

பாதுகாப்பளிக்கும் ஆளொருவரினால் தகவல் வெளிப்படுத்தப்படுதல்

**22.** (அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு பொறுப்பாகவுள்ள அல்லது அவருக்கு பாதுகாப்பை வழங்குகின்ற அல்லது பாதுகாப்பை வழங்குவதில் உதவுகின்ற வரும்; அல்லது

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு அளிக்கப்படுகின்ற பாதுகாப்பு தொடர்பில் ஏதேனும் தகவலை வேறு வகையில் உடைமையில் வைத்துள்ளவரும்,

அத்தகைய தகவலை வேறு ஆளுக்கு அளிக்கின்ற, வழங்குகின்ற அல்லது கொடுக்கின்றவரும், அதன்மூலம் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின், அல்லது சாட்சியின் உயிரை ஆபத்துக்குட்படுத்துகின்றவருமான எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல்நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், தகவலை நல்லெண்ணத்துடனும் –

(i) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது நடவடிக்கைமுறைக்கு;

(ii) நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு; அல்லது

(iii) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்கு உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு,

இணங்கவும் அல்லது இணங்கியொழுகியும் அளிப்பது, வழங்குவது அல்லது கொடுப்பது தவறொன்றாதலாகாது.

*தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்தல், தூண்டுதல், உதவுதல் முதலியன*

**23.** பிரிவு 14, 15, 16, 17, 18, 19, 20, 21 அல்லது 22 என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதற்கு எத்தனிக் கின்ற, தூண்டுகின்ற அல்லது வேண்டுமென்று எவரேனும் வேறு ஆளுக்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, அப்பிரிவி னால் அத்தவறுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அதே தண்டனைத் தீர்ப்புக்குப் பொறுப் பாதலும் வேண்டும்.

*14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22 அல்லது 23 ஆம் பிரிவின்கீழான தவறொன்று, பிடியாணை யின்றி கைது செய்தகு மற்றும் பிணையில் விடத்தகு தவறொன்றாதல்*

**24.** (1) (அ) பிரிவு 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22 அல்லது 23 இன்கீழான தவறொன்று, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றி கைதுசெய்தகு தவறொன்றாதலும் மற்றும் 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிணையில் விடத்தகு தவறொன்றாதலும் வேண்டும்.

(ஆ) ஆளொருவரைப் பிணையில் விடும்போது, குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவருடன் அல்லது சாட்சியுடன் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆளுடன் அவர் தொடர்புகொள்வதை அல்லது நெருக்கமாக அண்மிப்பதைத் தடைசெய்கின்ற அத்தகைய கட்டளையிலான நிபந்தனையொன்றை விதிப்பதற்கு நீதிவான் நீதிமன்றம் தத்துவ முடையதாதல் வேண்டும்.

(2) பிரிவு 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22 அல்லது 23 இன்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொரு வருக்கு எதிரான விளக்கமொன்று, அந்நீதிமன்றத்தினால் வேறேதேனும் அலுவல்களுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அன்றாட அடிப்படையில் நடாத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன் அது, குறிப்பாகப் பதியப்படவேண்டிய தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாகவன்றி, அத்தகைய விளக்கத்தின்போது பிற்போடப்படுதலுமாகாது.

(3) நீதிமன்றமொன்றினாலான விசாரணையின் பின்னர், ஆளொருவரினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பில் இயைபான காலத்தில் பிணையிலிருந்த அவ்வாள், இச்சட்டத்தின் பிரிவு 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22 அல்லது 23 இன்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளாரென முடிவு செய்வதற்கு முதற்றோற்றளவிலான எண்பிப்புச் சான்றுகள் உள்ளனவெனக் காணப்படின், அத்தகைய ஆளுக்கு பிணை வழங்கிய நீதிமன்றம், அத்தகைய பிணையை இல்லாதாக்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள், அத்தகைய நீதிமன்றத்தினால் நியாயமானதெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு விளக்கமறியலில் இடப்படுதலும் வேண்டும்.

தண்டனைத் தீர்ப்பைத் தீர்மானித்தல்

**25.** (1) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறொன்றுக்கு தோதான தண்டனைத் தீர்ப்பைத் தீர்மானிப்பதில், நீதிமன்றமானது, தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் அத்தகைய தவறுக்காக விதித்துரைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பையும் மற்றும் தண்டனைகளை விதித்தல் பற்றிய தண்டனைத்தீர்ப்புக் கொள்கைகள் தொடர்பாக மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றங்களினால் விதிக்கப்பட்ட முடிபுகளையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு தவறு தொடர்பாக தீவிரநிலையடையும் மற்றும் தணிக்கும் சூழ்நிலைகளுக்கும் உரிய கவனம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) நீதிச்சேவை ஆணைக்குழு, தண்டனைத்தீர்ப்பளித்தற் கொள்கை தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்.

இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான தவறுகள் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்தல்

**26.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறொன்று தொடர்பிலான முறைப்பாடொன்று விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் –

(அ) பாதுகாப்புப் பிரிவுக்கு;

(ஆ) அதிகாரசபைக்கு; அல்லது

(இ) ஏதேனும் நீதிமன்றத்துக்கு, ஆணைக்குழுவுக்கு அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் பந்தி (ஆ) அல்லது பந்தி (இ) என்பதன்கீழ் ஏதேனும் முறைப்பாடு, அதிகாரசபையினால் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தினால், ஆணைக்குழுவினால் அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் பெறப்படுகின்றவிடத்து, அத்தகைய முறைப்பாடு புலனாய்வுக்காக அல்லது விசாரணைக்காக பாதுகாப்புப் பிரிவுக்கு உடனடியாக ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

பாகம் IV

## பாதுகாப்பை நாடுவதற்கு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவருக்கு அல்லது சாட்சிக்குமுள்ள உரித்துடைமை

பாதுகாப்பை நாடுவதற்குள்ள உரித்துடைமை

**27**. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் அல்லது சாட்சியொருவர் அல்லது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் அல்லது சாட்சியொருவர் சார்பில் வேறு எவரேனும் ஆள், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவராக அல்லது சாட்சியொருவராக அவர் இருப்பது தொடர்பிலான சூழ்நிலைகளின் விளைவொன்றாக, ஏதேனும் தீங்குக்கு, ஊறுக்கு, அச்சுறுத்தலுக்கு, பழிவாங்குதலுக்கு அல்லது எதிர்த்தாக்குதலுக்கு உட்படலாம் என அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி அல்லது வேறு ஆள் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி பாதுகாப்புக்காக விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவார்.

குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரினால் அல்லது சாட்சி ஒருவரினால் நாடப்படக்கூடிய பாதுகாப்பின் தன்மை

**28.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் எவரேனும் குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்படக் கூடிய பாதுகாப்பின் தன்மையினுள் பின்வருவனவும் உள்ளடங்க லாம் –

(அ) ஆளுக்கான அல்லது ஆதனத்துக்கான பாதுகாப்பை வழங்குதல்;

(ஆ) உணவுப் பொருட்களுக்கான வசதிகள் உட்பட, தற்காலிக தங்குமிடத்துக்கான ஏற்பாடு;

(இ) விடயத்திற்கேற்ப, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வரின் அல்லது சாட்சியின் சம்மதத்துடன் நிரந்தர அல்லது தற்காலிக மீளமர்த்துகை;

(ஈ) வழக்கு நடவடிக்கைகள் முழுவதையும் அல்லது அதன் பாகத்தை இரகசியமாக நடாத்துதல்;

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஆளடையாளத்தை மறைத்தல்;

(ஊ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவரொருவ ரின் அல்லது சிறுவர் சாட்சியொருவரின் விடயத்தில், அவரின் அதிசிறந்த நலன்களை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் கல்விக்கான உரிமையுட்பட, அவரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் விசேட வழிமுறைகளைக் கடைப் பிடித்தல்;

(எ) விளக்கம், புலனாய்வு அல்லது விசாரணை நடைபெறும் இடத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரை எதிர்கொள்வதன் மூலம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொல்லைக்குட்படுத்தப்படுவதை, அச்சுறுத்தப் படுவதை, பலவந்தப்படுத்தப்படுவதை அல்லது செல் வாக்குச்செலுத்தப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான வழிமுறைகளைக் கடைப்பிடித்தல்;

(ஏ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஆளடையாளம் மற்றும் பின்னணித் தகவல்கள், அச்சு ஊடகம் அல்லது இலத்திரனியல் ஊடகம் என்பவற்றிலுட்பட, வெளிப்படுத்தப்படுவதனைத் தடுத்தல்;

(ஐ) விளக்கத்துக்கு முன்னரான வெளிப்படுத்துகை நோக்கங்களுக்காக சட்டத்தில் அனுமதிக்கப்பட்டவாறு தவிர, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் வழங்கப்படக்கூடிய சான்றுகளின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்கு தோதான வழிமுறைகளைக் கடைப்பிடித்தல்;

(ஒ) தோதானவிடத்து, தற்காலிக அல்லது நிரந்தர தொழிலை வழங்குதல்; அத்துடன்

(ஓ) நீதிமன்றம், ஆணைக்குழு, அதிகாரசபை அல்லது பாதுகாப்புப் பிரிவு அவசியமானதெனக் கருதக்கூடிய வேறு ஏதேனும் வழிமுறையைக் கடைப்பிடித்தல்.

(2) அதிகாரசபை அல்லது பாதுகாப்புப் பிரிவானது, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கென அல்லது சாட்சியொருவருக்கென (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பாதுகாப்பு அல்லது உதவி பற்றிய ஏதேனும் வழிமுறையை ஏற்பாடு செய்வதில் பகிரங்க அதிகாரசபையொன்றிடமிருந்து அல்லது பகிரங்க அலுவலரிடமிருந்து உதவி கோரலாமென்பதுடன், அத்தகைய கோரிக்கை செய்யப்படுமிடத்து, குறிப்பிடப்படவேண்டிய காரணங்களுக்காக அத்தகைய பகிரங்க அதிகாரசபைக்கு அல்லது பகிரங்க அலுவலருக்கு அவ்வாறு செய்வதற்கு இயலாதிருந்தாலொழிய, கோரப்பட்டவாறு அதிகாரசபைக்கு அல்லது பாதுகாப்புப் பிரிவுக்கு உதவுவது அத்தகைய பகிரங்க அதிகாரசபையின் அல்லது பகிரங்க அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

*பாதுகாப்புக் கான விண்ணப்பம்*

**29.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பாதுகாப்பை நாடுகின்ற குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சி யொருவர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத் திலும் முறையிலும் –

(அ) அதிகாரசபைக்கு;

(ஆ) பாதுகாப்புப் பிரிவுக்கு;

(இ) ஏதேனும் பொலிசு நிலையத்துக்கு;

(ஈ) ஏதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு; அல்லது

(உ) எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு அல்லது பகிரங்க அலுவலருக்கு,

கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்து ரைக்கப்பட்ட தவறொன்று தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (இ), (ஈ) அல்லது (உ) இன்கீழ் பாதுகாப்புக்கான கோரிக்கை பெறப்பட்டவிடத்து, அத்தகைய கோரிக்கை அதிகாரசபைக்கு, அல்லது பாதுகாப்புப் பிரிவுக்கு தாமதமின்றி ஆற்றுப்படுத்தப் படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக் கப்படாத தவறொன்று தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ), (ஆ), (ஈ) அல்லது (உ) இன்கீழ் பாதுகாப்புக்கான கோரிக்கை பெறப்பட்டவிடத்து, அத்தகைய கோரிக்கை இயைபான பொலிசு நிலையத்துக்கு தாமதமின்றி ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

*இரண்டாம் அட்டவணை யில் குறித்துரைக் கப்பட்ட தவறுகள் தொடர்பில் அச்சுறுத்தல் பற்றிய மதிப்பீடு*

**30.** (1) இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்து ரைக்கப்பட்ட தவறொன்று தொடர்பில், 29 ஆம் பிரிவின்கீழ் பாதுகாப்புக்கான கோரிக்கையொன்று பெறப்படுவதன் அல்லது ஆற்றுப்படுவதன்மேல் –

(அ) அத்தகைய கோரிக்கை அதிகாரசபையினால் பெறப்பட்டுள்ளவிடத்து அல்லது அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, அதிகாரசபை குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொடர்பில் செய்யப்பட வேண்டிய அச்சுறுத்தல் பற்றிய மதிப்பீடொன்றைச் செய்விப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன்; அல்லது

(ஆ) அத்தகைய கோரிக்கை பாதுகாப்புப் பிரிவினால் பெறப்பட்டுள்ளவிடத்து அல்லது அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, பாதுகாப்புப் பிரிவு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொடர்பிலான அச்சுறுத்தல் பற்றிய மதிப்பீடொன்றைச் செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன்,

அத்தகைய அச்சுறுத்தல் பற்றிய மதிப்பீட்டின் கண்டறிதல்களின் அடிப்படையில், விடயத்துக்கேற்ப அதிகாரசபை அல்லது பாதுகாப்புப் பிரிவு, அவசியமான பாதுகாப்பை வழங்குவதற்கு தோதான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் செய்யப்பட்ட பாதுகாப்புக்கான கோரிக்கையெதுவும் அந்தரங்கமானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படாத தவறுகள் தொடர்பிலான பாதுகாப்பு

**31.** (1) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படாத தவறொன்றின் விடயத்தில், 29 ஆம் பிரிவின்கீழ் பாதுகாப்புக்கான கோரிக்கையொன்று பொலிசு நிலையமொன்றினால் பெறப்பட்டுள்ளவிடத்து அல்லது அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, 38 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய பொலிசு நிலையத்திற்குக் குறித்தளிக்கப்பட்ட பாதுகாப்பு அலுவலர் அச்சுறுத்தல் பற்றிய மதிப்பீடொன்றை உடனடியாக நடாத்துதல் வேண்டுமென்பதுடன், அச்சுறுத்தல் பற்றிய மதிப்பீட்டின் கண்டறிதல்களின் அடிப்படையிலும் மற்றும் அப்பிரதேசத்தின் பொலிசுக் கண்காணிப்பாளரின் ஒருப்பாட்டுடனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதலும் வேண்டும்.

(2) (அ) இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படாத தவறொன்று தொடர்பில் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்கு பாரதூரமான அச்சுறுத்தலொன்று உள்ளதென அதிகாரசபை, பாதுகாப்புப் பிரிவு அல்லது பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அபிப்பிராயப்படுகின்ற பட்சத்தில்; அல்லது

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி பாரபட்சம் காட்டப்படுவதாக பிரதேசத்தின் பொலிசு நிலையத்துக்கெதிராக சார்த்துரைக்கின்ற பட்சத்தில்,

பாதுகாப்புப் பிரிவானது, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு தோதான பாதுகாப்பை வழங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் நீதிமன்றத்தின் அல்லது ஆணைக் குழுவின் கடமைகள்

**32.** (1) ஒரு நீதிமன்றம் அல்லது ஓர் ஆணைக்குழு, எவையேனும் சட்டவழக்கு நடவடிக்கைகளிலுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்கு அத்தகைய சட்ட வழக்குநடவடிக்கைகளுக்குச் சமுகமளிப்பதற்கும் மற்றும் அவற்றில் பங்குபற்றுவதற்கும் ஊறு, அச்சுறுத்தல், பழிவாங்குதல் அல்லது எதிர்த்தாக்குதல் என்பவற்றிலிருந்தான பாதுகாப்பு அல்லது உதவி தேவைப்படுகின்றதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளபோதெல்லாம், அத்தகைய நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு அத்தகைய பாதுகாப்பை வழங்குவதற்கு அல்லது வழங்கச்செய்விப்பதற்கு அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுக்குமாறு அதிகாரசபையை, பாதுகாப்புப் பிரிவை, பொலிசு நிலையமொன்றை அல்லது வேறு சட்ட வலுவுறுத்தல் அதிகாரியைப் பணிக்கலாம் என்பதுடன், அந்த அதிகாரசபை, பாதுகாப்புப் பிரிவு, அத்தகைய பொலிசு நிலையம் அல்லது அத்தகைய சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அத்தகைய பணிப்புக்கு தாமதமின்றி இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றமொன்றினால் அல்லது ஆணைக்குழுவொன்றினால் வழங்கப்பட்ட பணிப்பொன்றுடன் இணங்கியொழுகுவதில், அதிகாரசபை, பாதுகாப்பு பிரிவு, பொலிசு நிலையம் அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் தேவைப்படுத்தப்பட்ட பாதுகாப்புப் பற்றிய பூர்வாங்க தேவை மதிப்பீடொன்றைச் செய்யலாமென்பதுடன் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பாதுகாப்பையும் வழங்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான பாதுகாப்பு வழங்கப்பட்ட பின்னர், 36 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பை முடிவுறுத்துவதற்கு ஏதேனும் ஏது காணப்படுகின்றதென்று அதிகாரசபை, பாதுகாப்புப் பிரிவு, பொலிசு நிலையம் அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அபிப்பிராயப்படுகின்ற போதெல்லாம், விடயத்திற்கேற்ப, அவ்வதிகாரசபை, பாதுகாப்பு பிரிவு, பொலிசு நிலையம் அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அத்தகைய நிகழ்வைக் காரணங் களுடன் அத்தகைய நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுதல் வேண்டும் என்பதுடன் அதன்மேல் அத்தகைய நீதிமன்றம் அல்லது ஆணைக்குழுவானது அவ்வாறு வழங்கப்பட்ட பாதுகாப்பின் முடிவுறுத்துகைக்குக் கட்டளையிடலாம்.

(4) ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முன்னரான எவையேனும் சட்ட வழக்குநடவடிக்கைகளை நடாத்துவதற்கு முன்னரோ, அவற்றின்போதோ அல்லது அவை நடாத்தப்பட்ட பின்னரோ எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி ஏதேனும் தீங்கிற்கு, ஊறுக்கு, தொல்லைக்கு, மிரட்டலுக்கு அல்லது எதிர்த்தாக்குதலுக்கு உட்படுவதற்கான சாத்தியமுள்ளதென அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரிடமிருந்து அல்லது சாட்சியிடமிருந்து ஏதேனும் தகவலை அல்லது கோரிக்கையை அல்லது முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்டதன்மேல் உடனடியாக, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு அவசியமான பாதுகாப்பை அதிகாரசபை, பாதுகாப்புப் பிரிவு, பொலிசு நிலையமொன்று அல்லது வேறு சட்ட வலுவுறுத்தல் அதிகாரி வழங்கலாம்.

*சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளினாலும் பகிரங்க அலுவலர்களினாலும் வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு*

**33.** (1) எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அல்லது பகிரங்க அலுவலர், ஏதேனும் சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்குச் சமுகமளிப்பதிலும் பங்குபற்றுவதிலும் ஏதேனும் சாத்தியமான ஊறு, மிரட்டல், பழிவாங்கல் அல்லது எதிர்த்தாக்குதலிலிருந்தான பாதுகாப்பை குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் அல்லது சாட்சியொருவர் தேவைப் படுத்துகின்றாரென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை கொண் டுள்ளவிடத்து, அத்தகைய சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அல்லது பகிரங்க அலுவலர் அப்பொருள்பட்ட தொடர்பாடலொன்றை அதிகாரசபைக்கு அல்லது பாதுகாப்புப் பிரிவுக்கு உடனடியாக வழங்குதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 29, 30 மற்றும் 31 இன் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் பாதுகாப்பை வழங்குவதற்கு மற்றும் அது தொடர்பில், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்

*பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட வர்களுக்கு அல்லது சாட்சிகளுக்கு மான விசேட வழிமுறைகள்*

**34.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு நீதிமன்றம் அல்லது ஓர் ஆணைக்குழு, எவரேனும் பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அத்தகைய குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் பாது காப்பிற்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் விசேட வழிமுறைகளை அளிக்குமாறு அதிகாரசபைக்கு அல்லது பாதுகாப்புப் பிரிவுக்குக் கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக விசேட வழிமுறைகள் விதித்துரைக்கப்படும்போது, அமைச்சர் அதிகாரசபையின் விதப்புரைகளை நாடுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் எவையேனும் விசேட வழிமுறைகளை அளிப்பதற்குக் கட்டளையிடுகையில், நீதிமன்றம் அல்லது ஆணைக் குழு, அதன் வழக்குநடவடிக்கைகளில் நியாயமான விளக்கம் பற்றிய நெறிமுறைகள் போற்றிக்காக்கப்படுகின்றன என்பதை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

(4) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் பாதிக்கப்படத்தகு தன்மையைத் தீர்மானிப்பதில் பின்வரும் காரணிகளும்கூட கவனத்திற்கொள்ளப்படலாம்:-

(அ) புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறின் தன்மையும் அதனுடன் ஒன்றிய சூழ்நிலைகளும்;

(ஆ) கொடுப்பதற்கு அல்லது அளிப்பதற்கு சாட்சி எதிர்பார்க்கின்ற சான்றின் அல்லது கூற்றின் தன்மை;

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆகியோருக்கிடையேயான ஏதேனும் உறவுமுறை;

(ஈ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் வயது மற்றும் புரிதல் மட்டம்;

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது இணையாளிகள் அல்லது அவருடன் நெருங்கிய உறவுமுறையைக் கொண்டுள்ள வேறு எவரேனுமாள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் நடத்தை அல்லது மனப்பாங்குகள் உட்பட, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் நடத்தை அல்லது மனப்பாங்குகள்; அத்துடன்

(ஊ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் இன, சமூக மற்றும் கலாசார ரீதியான பின்னணி, மாற்றுப்பால்நிலை உட்பட பால்நிலை, பாலியல் நாட்டம், சமூக விளிம்புநிலைப்படுத்துகைக்கு உட்படுவதற்கான சாத்தியம், வீட்டு அல்லது தொழில் சூழ்நிலைகள், சமய அல்லது அரசியல் நம்பிக்கைகள் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி துயருறுகின்ற ஏதேனும் உடல்ரீதியான இயலாமை அல்லது பாதிப்பு என்பனவுட்பட வேறேதேனும் இயைபான கருமம்.

(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு நீதிமன்றம் அல்லது ஓர் ஆணைக்குழு -

(அ) பாலியல் தவறுகள் அல்லது வன்முறைகள் தொடர்பான வழக்குநடவடிக்கைகளில், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவரொருவரை அல்லது சிறுவர் சாட்சியொருவரை அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முன்னர் நேரடியாக சமுகமளிக்குமாறு தேவைப்படுத்தாது, ஒரு தொலைவிடத்திலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக சான்றினைக் கொடுப்பதற்கு அல்லது கூற்றொன்றை அளிப்பதற்கு அனுமதிக்கலாம்; அல்லது

(ஆ) எவரேனும் பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி சத்தியமொன்றின் அல்லது உறுதியுரையொன்றின் தன்மையை விளங்கிக்கொள்வதற்கு இயலாதிருக்கின்றாரெனத் திருப்தியுறுவதன்மீது, சத்தியம் அல்லது உறுதியுரையொன்று எடுத்தோதுவிக்கப்படாமல் சான்று கொடுப்பதற்கு அல்லது கூற்றொன்றை அளிப்பதற்கு அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சியை அனுமதிக்கலாம் என்பதுடன் குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சான்று அல்லது கூற்று எவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பானதோ அவ்வெல்லாக் கருமங்கள் பற்றியும் அவர் உண்மையைக் கூறுவதற்குப் பிணிக்கப்பட்டுள்ளார் என்று அவருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(6) இப்பிரிவில், "பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர்" என்பது பின்வருவோரையும் உள்ளடக்குகின்றது:-

(அ) பதினெட்டு வயதுக்குக்கீழான குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர்;

(ஆ) குறிப்பிடத்தக்க புத்திக்கூர்மை மற்றும் சமூக ஊடாட்ட பாதிப்பினால் துயருறுகின்ற ஆளொருவர்;

(இ) ஏதேனும் பாலியல் தவறுக்கு பலியாக்கப்பட்ட ஒருவர்;

(ஈ) இயலாமையிலுள்ள ஆளொருவர்;

(உ) தண்டனைச் சட்டக்கோவையின் 360இ என்னும் பிரிவின் கீழான விலைப்படுத்துதலுக்குப் பலியாக்கப்பட்ட அல்லது 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான குடும்ப வன்முறைச் செயலுக்குப் பலியாக்கப்பட்ட ஆளொருவர்;

(ஊ) எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி அல்லது அவர்சார்பில் வழக்குரைஞரொருவர் நீதிமன்றமொன்றுக்கு அல்லது ஆணைக்குழுவொன்றுக்கு விண்ணப்பமொன்றைச் செய்து, பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவராக அல்லது சாட்சியொருவராக அவர் நடாத்தப்படவேண்டுமென்று அத்தகைய நீதிமன்றத்தை அல்லது ஆணைக்குழுவை திருப்திப்படுத்துவதன்மேல், பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவராக அல்லது சாட்சியொருவராக இருப்பதாக அத்தகைய நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர்; அத்துடன்

(எ) பதியப்பட்ட காரணங்களுக்காக எந்த எவரேனும் வேறு ஆள் பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவராக அல்லது சாட்சியொருவராக இருப்பதாக ஒரு நீதிமன்றம் அல்லது ஓர் ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடுமோ, அந்த எவரேனும் வேறு ஆள்.

பாதுகாப்பு அலுவலரினால் தொடர்ச்சியான தேவைகள் பற்றிய மதிப்பீடு செய்யப் படுதலும் பாதுகாப்பு ஒழுங்கேற் பாடுகளை வேறுபடுத்து தலும்

**35.** (1) அதிகாரசபை அல்லது பாதுகாப்புப் பிரிவானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பாதுகாப்பைப் பெற்றுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பற்றி தொடர்ச்சியான தேவைகள் பற்றிய மதிப்பீடொன்றை நடாத்துமாறு பாதுகாப்பு அலுவலரொருவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) பாதுகாப்பு அலுவலர், எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொடர்பில் செய்யப்பட்ட ஏதேனும் பாதுகாப்பு ஒழுங்கேற்பாடு வேறுபடுத்தப்பட வேண்டுமென அவர் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய பாதுகாப்பு ஒழுங்கேற்பாட்டை வேறுபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய நிகழ்வை, அதற்கான காரணங்களுடன் சேர்த்து, இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கூடாக பாதுகாப்புப் பிரிவுக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஏதேனும் பாதுகாப்பு ஒழுங்கேற்பாடு வேறுபடுத்தப்பட வேண்டுமா எனத் தீர்மானிப்பதில், பின்வருவன குறித்து குறிப்பிட்ட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் காப்புக்கான ஆபத்தின் தன்மையும் அளவும்;

(ஆ) புதிய ஒழுங்கேற்பாடுகளிலுள்ள செயல்முறை அம்சங்கள் மற்றும் அவற்றுக்கான ஆகுசெலவுகள்; அத்துடன்

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு அல்லது அவருடன் இணைந்த வேறு எவரேனும் ஆளுக்கு அத்தகைய வேறுபடுத்துகையிலிருந்து எழும் சூழ்நிலைகளிலான மாற்றங்களைக் கடைப்பிடிப்பதற்குள்ள இயலுமை.

(4) ஏதேனும் பொலிசுப் பிரிவிலுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரை பாதுகாப்பதற்கான அவசரத் தேவையொன்று உள்ளவிடத்து, பாதுகாப்பு அலுவலரொருவர், அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்

பட்டவருக்கு அல்லது சாட்சிக்கான அத்தகைய அவசரப் பாது காப்பை வழங்கும் நோக்கத்துக்காக தோதானதென்று அவர் கருதுகின்றவாறான அத்தகைய ஒழுங்கேற்பாட்டைச் செய்தல் வேண்டும்.

*பாதுகாப்பை இல்லா தொழித்தல்*

**36.** (1) பிரிவு 32 இன் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அதிகாரசபை, பாதுகாப்புப் பிரிவு அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாதுகாப்பு அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழ் எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை முடிவுறுத்துவதற் கான காரணங்களைப் பதிந்த பின்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் அதனை முடிவுறுத்தலாம் -

(அ) அத்தகைய பாதுகாப்புக்கான தேவை இனிமேலும் இல்லாதிருக்கும்போது; அல்லது

(ஆ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி -

(i) அத்தகைய பாதுகாப்பு முடிவுறுத்தப்படுதல் வேண்டுமெனக் கோரும்போது;

(ii) அத்தகைய பாதுகாப்பைப் பெற மறுக்கும்போது;

(iii) வழங்கப்பட்ட பாதுகாப்பைத் துஷ்பிரயோகம் செய்யும்போது;

(iv) உடன்பட்ட எவையேனும் நிபந்தனைகளை மீறும்போது;

(v) பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அதிகாரசபைக்கு, பாதுகாப்புப் பிரிவுக்கு, ஏதேனும் நீதிமன்றத்துக்கு, ஆணைக்குழுவுக்கு, பொலிசு நிலையத்துக்கு அல்லது சட்ட வலு வுறுத்தல் அதிகாரிக்கு ஏதேனும் பொய்யான

தகவலை, கூற்றை, முறைப்பாட்டை அல்லது சாட்சியத்தை வழங்கியுள்ளாரெனக் கண்டறியப் படும் போது; அல்லது

(vi) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டு, அத்தகைய பாதுகாப்பைத் தொடர்ச்சியாகப் பெறும் பொருட்டு அதிகாரசபைக்கு, பாதுகாப்புப் பிரிவுக்கு, ஏதேனும் நீதிமன்றத்துக்கு, ஆணைக் குழுவுக்கு, பொலிசு நிலையத்துக்கு அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு ஏதேனும் பொய்யான தகவலை, கூற்றை, முறைப்பாட்டை அல்லது சாட்சியத்தை வழங்குகின்றபோது.

(2) பாதுகாப்பு அலுவலரொருவர், பாதுகாப்புப் பிரிவின் தலைவரினது ஒருப்பாட்டுடன்தவிர, ஏதேனும் பாதுகாப்பு ஒழுங்கேற்பாட்டை முடிவுறுத்துதலாகாது.

(3) எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர், அவருக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை முடிவுறுத்துவதற்கான முடிபுடன் திருப்தியுறாதவிடத்து, அவர் -

(அ) அத்தகைய முடிபு பாதுகாப்பு அலுவலரினால் அல்லது பாதுகாப்புப் பிரிவினால் எடுக்கப்பட்டிருப்பின், அத்தகைய முடிபுக்கு எதிராக அதிகாரசபைக்கு மேன்முறையீடு செய்யலாம்; அல்லது

(ஆ) அத்தகைய முடிபு அதிகாரசபையினால் எடுக்கப்பட்டிருப்பின், அத்தகைய முடிபுக்கெதிராக 74 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட மதியுரைச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) விடயத்துக்கேற்ப, அதிகாரசபை அல்லது மதியுரைச்சபை, அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்களைக் கவனத்திற்கொண்ட பின்னர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முடிபை தோதான முறையொன்றில் வேறுபடுத்தலாம் அல்லது உறுதிப்படுத்தலாம்.

(5) இப்பிரிவின்கீழ் ஏதேனும் பாதுகாப்பு ஒழுங்கேற்பாடு முடிவுறுத்தப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதில், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் காப்புக்கான ஆபத்தின் தன்மை மற்றும் அளவு குறித்து குறிப்பிட்ட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*உதவி மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வருக்கும் சாட்சிக்கும் உள்ள கடமைகள்*

**37.** (1) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் உதவியை அல்லது பாதுகாப்பைப் பெற்றுள்ள எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சியொருவர் -

(அ) அத்தகைய உதவியை அல்லது பாதுகாப்பை துஷ்பிரயோகம் செய்தலாகாது;

(ஆ) அதிகாரசபைக்கு, பாதுகாப்புப் பிரிவுக்கு, நீதிமன்றமொன்றுக்கு, ஆணைக்குழுவுக்கு, பொலிசு நிலையத்துக்கு அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு பொய்யான தகவலை அல்லது சாட்சியத்தை வழங்குதலாகாது; அல்லது

(இ) அதிகாரசபையுடன் அல்லது பாதுகாப்புப் பிரிவுடன் உடன்பட்டுக்கொண்ட எழுத்திலான மதியுரைக்கு அல்லது நியதிநிபந்தனைகளுக்கு முரணாகச் செயற்படுதலாகாது.

(2) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர் (1) ஆம் உட்பிரிவை மீறுகின்ற முறையொன்றில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார் என்பதற்கு நம்பகமான தகவல் உள்ளவிடத்து, அதிகாரசபை அல்லது பாதுகாப்புப் பிரிவு விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விசாரணையின் கண்டறிதல்கள் நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்படுதலும் வேண்டும். நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு மேலதிக விசாரணையொன்றின் பின்னர், அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்பட்டுள்ள உதவி அல்லது பாதுகாப்புத் தொடர்பில் தோதான கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

*பலியாக்கப் பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பற்றிய பாதுகாப்பு அலுவலர்கள்*

**38.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து (இச்சட்டத்தில் "பாதுகாப்பு அலுவலர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பலியாக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பற்றிய பாதுகாப்பு அலுவலர்களாகப் பெயர்குறிக்கப்படவேண்டிய அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான பொலிசு அலுவலர்களை ஒவ்வொரு பொலிசு நிலையத்துக்கும் குறித்தளித்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அலுவலர்களுள் ஆகக் குறைந்தது ஒருவர் ஒரு பெண் அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் பொலிசு நிலையத்துக்கு குறித்தளிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதில், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியானவர், பொலிசுப் பிரிவில் காணப்படுகின்ற சனத்தொகை, அந்த பொலிசுப் பிரிவில் பாரதூரமான குற்றச்செயல்களின் நிலவுகை மற்றும் சிறுவர்கள், பெண்கள் அல்லது இயலாமைக்குட்பட்ட ஆட்கள் உள்ளடங்கலாக விசேட வகுதிகளைச் சேர்ந்த ஆட்களின் உணரப்பட்ட பாதிக்கப் படத்தகுதன்மை அத்துடன் அந்த பொலிசுப் பிரிவு தொடர்பான வேறு இயைபான தரவுகளும் புள்ளிவிபரங் களும் என்பவற்றைக் கவனத்திலெடுத்தல் வேண்டும்.

(3) (அ) பாதுகாப்புப் பிரிவின் தலைவர், அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, பாதுகாப்பு அலுவலர்களினால் அவர்களது கடமைகள் புரியப்படுவதிலும் பணிகள் ஆற்றப்படுவதிலும் அவர்களால் பின்பற்றப்படவேண்டிய பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும் என்பதுடன், அவசியமானவிடத்து அத்தகைய பணிப்புரைகள், வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இரகசியமானவையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஆ) பாதுகாப்பு அலுவலர்களின் தகுதியை மேம்படுத்தும் நோக்கத்துக்காக அதிகாரசபை விசேட பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத் துதல் வேண்டும்.

(4) பாதுகாப்பு அலுவலரொருவர், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு இச்சட்டத்தின்கீழ் பாதுகாப்பை வழங்குவதில் அவர் எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையையும் பற்றிய இரகசியமான பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

பாகம் V

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையைத் தாபித்தல்

*குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப் பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக் கான தேசிய அதிகாரசபை*

**39.** (1) (இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப் படும்) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சி களினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை என அழைக்கப் படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரில் இடையறாவழியுரிமையும் ஒரு பொது இலச்சினையுமுடைய கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அது அப்பெயரில் வழக்குத் தொடுக்கலாம்; அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*அதிகாரசபை யின் கடமைகளும் பணிகளும்*

**40.** (1) அதிகாரசபையின் கடமைகளும் பணிகளும் பின்வருவன வாதல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சி களினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகளுக்கான மதிப்பளித்தலைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும் மற்றும் அவற்றை ஏற்றங்கீகரித்தலும்;

(ஆ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகளின் ஏதேனும்

சார்த்தப்பட்ட மீறல் அல்லது மறுப்பு, அல்லது உடனிகழக் கூடிய மீறல் அல்லது மறுப்பு தொடர்பாக அதிகாரசபை யினால் பெறப்பட்ட ஏதேனும் முறைப்பாடு அல்லது தகவல் பற்றி புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும்,

மற்றும் இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகளின் பாதுகாப்பையும் ஊக்குவிப்பையும் உறுதிப் படுத்துகின்ற –

(i) திருத்த வழிமுறைகளை எடுப்பதற்கு எவரேனும் ஆளுக்கு அல்லது அதிகாரசபைக்கு பணிப்புக் களைக் கொடுத்தல் அல்லது விதப்புரைகளைச் செய்தல்;

(ii) அத்தகைய நிதிசார் அல்லது வேறு உதவிகளை அளித்தல்; அல்லது

(iii) எவையேனும் வேறு தோதான வழிமுறைகளை எடுத்தல்.

(இ) அவசியமான மருத்துவச் சிகிச்சை, உளவளத்துணை அல் லது புனர்வாழ்வுச் சேவைகள், அல்லது இழப்புக்கான எதிரீடு அல்லது மீட்டளிப்பு வழிமுறைகளுக்கான ஏற்பாட்டை வழங்குவதன்மூலம் அல்லது ஒழுங்கேற்பாடு செய்வதன்மூலம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோரினதும் சாட்சிகளினதும் காப்பையும் பாதுகாப் பையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை களை எடுத்தல்;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பாதுகாப்பு நிதியத்தி லிருந்து குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் களுக்கான எவையேனும் இடைக்கால அளிப்புக்களை வழங்கும் நோக்கத்துக்கான திட்டமொன்றை வகுத்

தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் இச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்கீழ் மதியுரைச்சபையினால் விதந்துரைக்கப்பட்டவாறு அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால அளிப்புக்களை வழங்குதலும்;

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகள் பற்றியும் இச்சட்டத்தின்கீழ் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியனவான நிவாரணம் அல்லது பரிகாரங்கள் பற்றியும் பொது மக்களுக்கிடையே விழிப்புணர்வை உருவாக்குதல்;

(ஊ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகளுக்கு பயன்கொடுப்பதற்கு, அவற்றைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்கு நடைமுறைப் படுத்தப்படவேண்டிய வழிமுறைகள் பற்றி பொலிசுத் திணைக்களத்திற்கும், வேறேதேனும் அரசாங்கத் திணைக்களம் அல்லது நியதிச்சட்ட நிறுவனத்திற்கும் மற்றும் பகிரங்க அலுவலர்களுக்கும் மதியுரை வழங்கி விதப்புரைகளைச் செய்தல்;

(எ) ஏலவேயுள்ள சட்டவாக்கத்தையும் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பாக இயைபான நிறுவனங்களினால் ஏற்புச்செய்யப்பட்டு பின்பற்றப்படும் கொள்கைகள், செயல்முறைகள் அல்லது நடவடிக்கைமுறைகளையும் மீளாய்வு செய்தல் மற்றும் அத்தகைய சட்டவாக்கம், கொள்கைகள், செயல்முறைகள் அல்லது நடவடிக்கை முறைகள் தொடர்பில் புதிதாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நியமங்களுக்கும் மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் அவை இசைந்திருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவற்றைத் திருத்துவதற்கு அல்லது இற்றைப் படுத்துவதற்கான விதப்புரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைச் செய்தல்;

(ஏ) ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழு வினால் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல், தொலைவிட மொன்றிலிருந்து குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் சான்றை அல்லது கூற்றைப் பதிவதற்காக சமகால கட்புல-செவிப்புல இணைப்பொன்றைத் தாபிப்பதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல்;

(ஐ) வேறு இயைபான அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் மிகச்சிறந்த நலனை உறுதிப்படுத்து கின்ற வழிகாட்டுநெறிகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் என்பவற்றை உருவாக்குதலும் வழங்குதலும்;

(ஒ) பாதுகாப்புப் பிரிவின் சுயாதீன பணியாற்றுகை தொடர் பாக வழிகாட்டுநெறிகளை வழங்குதல்;

(ஓ) அரசாங்க மருத்துவ அலுவலர்கள், இலங்கைப் பொலிசு அலுவலர்கள், மறியற்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர்கள் அல்லது நன்னடத்தை மற்றும் சமூக சேவைகளுடன் இணைப்புச்செய்யப்பட்ட பகிரங்க அலுவலர்கள் ஆகியோருட்பட, பகிரங்க அலுவலர்களை -

(i) எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட் டோரினதும் சாட்சிகளினதும் தேவைகள் பற்றி; அல்லது

(ii) அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஏதேனும் குறிப்பான வகுதியைச் சேர்ந்த குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் எவையேனும் விசேட தேவைகள் பற்றி,

கூருணர்வுமயப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்தல்;

(ஔ) எந்த வழிகளுக்கும் முறைகளுக்கும் ஊடாக-

(i) குற்றச்செயல் நிகழும்நிலை குறைக்கப்படக் கூடுமோ;

(ii) பலியாக்கப்பட்டவர்கள்மீது குறிப்பான குற்றச் செயல்களின் தாக்கம் குறைக்கப்படக்கூடுமோ அல்லது தடுக்கப்படக்கூடுமோ;

(iii) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் களுக்குப் பயனுறுதியுடன் சிகிச்சையளிக்கப்பட, புனர்வாழ்வளிக்கப்பட, உளவளத்துணை யளிக்கப்பட, உதவியளிக்கப்பட, நட்டஈடு அளிக்கப்பட மற்றும் பாதுகாப்பளிக்கப்படக் கூடுமோ;

(iv) கிடைக்கக்கூடியனவான குற்றவியல் நீதி பொறி முறைகளுக்கூடான நிவர்த்திப்பை அல்லது நிவாரணத்தை குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்டோர் அல்லது சாட்சிகள் நாடுவதிலிருந்து அவர்களைத் தடுக்கும் காரணிகள் அடையாளம் காணப்படக்கூடுமோ அல்லது இல்லாதொழிக் கப்படக்கூடுமோ; அத்துடன்

(v) சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு முன்னிலை யில் கூற்றுக்களை அளிப்பதற்கான அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழு வின் முன்னரான எவையேனும் வழக்குநட வடிக்கைகளில் அச்சமின்றி சான்றளிப்பதற்கான உகந்த சூழலொன்று சாட்சிகளுக்காக உருவாக் கப்படக்கூடுமோ,

அந்த வழிகளும் முறைகளும் பற்றி ஆராய்ச்சி நடாத்துதலும் ஆராய்ச்சி நடாத்தப்படுவதை ஊக்குவித்தலும்;

(க) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகளின் பாதுகாப்பு தொடர்பாகவுள்ள நடத்தைக்கோவைகளும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளும் மிகச்சிறந்த செயல்முறைகளும் நீதிமன்றங்களினால், ஆணைக்குழுக் களினால், வேறு எவையேனும் நியாயசபைகளினால், பகிரங்க அலுவலர்களினால் மற்றும் இலங்கை பொலிசு அலுவலர்கள், மறியற்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர்கள், அரசாங்க மருத்துவ அலுவலர்கள் அத்து டன் அரசாங்க சமூகசேவை நிறுவனங்களின் அலுவலர் கள் ஆகியோர் உட்பட சட்ட வலுவுறுத்தலில் ஈடுபட்டுள்ள நியதிச்சட்டக் குழுக்களின் ஊழியர்களினால் பிரயோகிக் கப்படுவதையும் கடைப்பிடிக்கப்படுவதையும் ஊக்குவித் தல்;

(ங) பின்வருவனவற்றை மேம்படுத்தல், கடைப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் பற்றி அரசாங்கத்துக்கும் மற்றும் வேறு தோதான அதிகாரிகளுக்கும் விதப்புரைகளைச் செய்தல் -

(i) பலிக்குட்படுத்துகை நிகழும் நிலையைக் குறைக் கும் பொருட்டு குற்றத்தடுப்புக்கொள்கைகள்;

(ii) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் மீட்டளிப்பு பற்றிய வழிமுறைகள்; அத்துடன்

(iii) தண்டனைத் தீர்ப்பளித்தலுக்கான விருப்பத்தெரி வொன்றாக மீளளிக்கும் நீதிவழிமுறைகள்;

(ச) ஏலவேயுள்ள நிதி ஒழுங்குவிதிகளைக் கவனத்திற் கொண்டு, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் களுக்கும் சாட்சிகளுக்கும் நிதியுதவி அளிப்பதற்கான நடவடிக்கைமுறையையும் கட்டளைக்கற்களையும் விதித் தல்;

(ஞ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவர்களின் அல்லது சிறுவர் சாட்சிகளின் சிகிச்சை பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் எவையேனும் விசேட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் பன்படுத்தப்படக் கூடிய தகைமைபெற்ற ஆளணியினரையும் உரிய நடவடிக்கைமுறைகளையும் அடையாளம் காணுதல்;

(ட) குற்றவியல் நீதிமுறைமையில் தண்டனைத்தீர்ப்பளிப் பதற்கான விருப்பத்தெரிவொன்றாகக் குற்றச்செயல்களுக் குப் பலியாக்கப்பட்டோருக்கான மீட்டளிப்பு வழிமுறைகள் அபிவிருத்தி செய்யப்படுவதை, கடைப்பிடிக்கப்படுவதை மற்றும் நடைமுறைப்படுத்தப்படுவதை ஊக்குவித்தல்; அத்துடன்

(ண) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசிய மாகக்கூடிய வேறு ஏதேனும் கடமையை அல்லது பணியைப் புரிதல் அல்லது நிறைவேற்றுதல்.

(2) அதிகாரசபையானது, எவரேனுமாளுக்கு அல்லது அதிகாரிக்கு ஏதேனும் பணிப்புரையை வழங்குமிடத்து அல்லது ஏதேனும் விதப்புரையைச் செய்யுமிடத்து அல்லது (1) ஆம் உட்பிரி வின்கீழான ஏதேனும் வழிமுறையை நிறைவேற்றுமாறு எவரேனும் ஆளை அல்லது அதிகாரியைத் தேவைப்படுத்துகின்றவிடத்து –

(அ) அத்தகைய பணிப்புரைக்கு அல்லது விதப்புரைகளுக்கு பயன்கொடுப்பது அல்லது அத்தகைய வழிமுறையை நிறைவேற்றுவது மற்றும் அத்தகைய நிகழ்வு பற்றி அதிகாரசபைக்கு மீள அறிக்கையிடுவது; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் அல்லது அதிகாரி அத்தகைய பணிப் புரைக்கு அல்லது விதப்புரைக்கு பயன்கொடுப்பதற்கு அல்லது வழிமுறையை நிறைவேற்றுவதற்கு இயலாத வராகவுள்ளவிடத்து, அதற்கான காரணங்களைக் கொடுத்து அத்தகைய இயலாமை பற்றி அதிகாரசபைக்கு மீள அறிக்கையிடுவது,

அத்தகைய ஆளின் அல்லது அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

*(3)* அதிகாரசபை, அத்தகைய ஆளிடமிருந்து, அதிகாரியிடமிருந்து அல்லது வேறு எவரேனும் இயைபான அதிகாரியிடமிருந்து பருவகால அறிக்கைகளைக் கோருவதன்மூலம் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணிப்புரையின் அல்லது விதப்புரைகளின் நடைமுறைப்படுத்துகையை அல்லது வழிமுறைகள் நிறைவேற்றப் படுவதைக் கண்காணித்தல் வேண்டும்.

*அதிகாரசபையின் தத்துவங்கள்*

**41.** (1) அதிகாரசபை பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்தின்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் ஏதேனும் சார்த்தப்பட்ட மீறல் அல்லது மறுப்பு, அல்லது உடனிகழ வுள்ள மீறல் அல்லது மறுப்பு பற்றிய ஏதேனும் முறைப்பாட்டை அல்லது தகவலைப் பெறுதல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் ஏதேனும் சார்த்தப்பட்ட மீறல் அல்லது மறுப்பு அல்லது உடனிகழ வுள்ள மீறல் அல்லது மறுப்பு பற்றிய ஒரு புலனாய்வை அல்லது விசாரணையை நடாத்தும் நோக்கத்துக்காக -

(i) நீதித்துறை அலுவலரொருவர் அல்லது ஆணைக் குழுவொன்றின் ஆணையாளர் ஒருவரல்லாத வேறு எவரேனும் ஆளை அதிகாரசபையின் முன்னர் தோன்றுமாறும் மற்றும் அத்தகைய புலனாய்வில் அல்லது விசாரணையில் பங்கு பற்றுமாறும் தேவைப்படுத்துதல்;

(ii) நீதிமன்றமொன்று அல்லது ஆணைக்குழு வொன்று அல்லாத வேறு எவரேனும் ஆளை, புலனாய்வு அல்லது விசாரணை பற்றிய ஏதேனும் அறிக்கை, தகவல் புத்தகமொன்றின் பிரித்

தெடுப்பொன்று மற்றும் பொலிசு அலுவலர்களின் வருகைப் புத்தகத்தின் பிரித்தெடுப்பு என்பன உட்பட, ஏதேனும் ஆவணத்தை, ஏதேனும் ஆவணத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது அத்தகைய ஆளின் உடைமையிலுள்ள அல்லது கட்டுக்காப்பிலுள்ள வேறேதேனும் பொருளை பரிசோதனைக்காகவும் அவற்றின் பிரதிகளை எடுப்பதற்காகவும் அதிகாரசபையின் முன்னர் காண்பிக்குமாறு தேவைப்படுத்துதல்;

(iii) நீதிமன்றமொன்று அல்லது ஆணைக்குழுவொன்று அல்லாத வேறு எவரேனும் ஆளை, அத்தகைய ஆளின் உடைமையிலுள்ள ஏதேனும் தகவலை அதிகாரசபைக்கு எழுத்தில் வழங்குமாறு தேவைப்படுத்துதல்:

ஆயின் எவ்வாறாயினும், ஏதேனும் தகவலின் வெளிப்படுத்துகை தேசியப் பாதுகாப்புக்குக் கேடுவிளைவிப்பதாக இருப்பின், அத்தகைய ஆள் அத்தகைய தகவலை வழங்குமாறு தேவைப் படுத்தப்படுதலாகாது என்பதுடன் அத்தகவல் இரகசியமானது என்பதை எண்பிக்கும் பொறுப்பு அவ்வாறு உரிமைகோரும் ஆளைச் சார்ந்ததாதல் வேண்டும்;

(iv) நீதித்துறை அலுவலரொருவர் அல்லது ஏதேனும் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவரல்லாத வேறு எவரேனும் ஆளை நேர்காணலும் அவரது வாக்குமூலமொன்றைப் பதிவுசெய்தலும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்போது கூறப்பட்ட எதுவும், தவறொன்று தொடர்பிலான ஏதேனும் குற்றச்சாட்டு அல்லது குற்றப்பகர்வு பற்றிய அடுத்துப்பின்னரான விளக்கம் எதிலும் அத்தகைய ஆளுக்கெதிராக பயன்படுத்தப்படுதலாகாது;

(v) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு எதிராகச் சார்த்தப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பிலான அல்லது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் ஏதேனும் சார்த்தப்பட்ட மீறல் அல்லது மறுப்பு, அல்லது உடனிகழ்வுள்ள மீறல் அல்லது மறுப்பு, தொடர்பிலான எவையேனும் வழக்குநடவடிக்கைகளினது பதிவேடுகளின், ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் ஏதேனும் நீதிமன்றத்தில் பதிவேட்டிலிடப்பட்ட வேறு ஏதேனும் பொருளையும் எதுவித கட்டணமும் செலுத்தாமல் அதிகாரசபைக்கு வழங்குமாறு அத்தகைய நீதிமன்றத்தை அல்லது ஆணைக் குழுவைக் கோருதல்; ஆயின், அத்தகைய கோரிக்கைக்கான போதிய நியாயப்படுத்துகை காட்டப்படுதல் வேண்டும்; அத்துடன்

(vi) இயைபான அதிகாரிகளின் முன்னங்கீகாரத்துக் கமைய, ஒரு புலனாய்வு, விசாரணை, விளக்கம் அல்லது வேறு வழக்குநடவடிக்கை உட்பட, ஏதேனும் இடத்தினுள் அல்லது அமைவிடத் தினுள் பிரவேசித்தல், அதனைச் சோதனையிடல் அல்லது பரிசோதனை செய்தல் அல்லது ஏதேனும் இடத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனும் நிகழ்வை அல்லது செயன்முறையை அவதானித்தலும் பதிவுசெய்தலும்;

(இ) எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு நிவர்த்திப்பை வழங்கும் நோக்கத் துக்காக -

(i) இச்சட்டத்தின் கீழ் எவரேனும் குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் உரிமைகள் மீறப்பட்டதன் அல்லது

உரித்துடைமைகள் மறுக்கப்பட்டதன் விளைவொன்றாக ஏற்பட்ட ஏதேனும் சேதத்திற்கு பரிகாரமளிப்பதற்கான அல்லது நிவாரணம் வழங்குவதற்கான அல்லது திருத்த வழிமுறைகளை எடுப்பதற்கான தோதான கட்டளையொன்றை ஆக்குதல்;

(ii) இச்சட்டத்தின்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் உரிமைகளினதும் உரித்துடைமைகளினதும் மேம்பாட்டுக்காக அல்லது பாதுகாப்புக்காக தோதான வழிமுறையைக் கடைப்பிடிக்குமாறு இயைபான அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தல், மதியுரை வழங்குதல் அல்லது விதப்புரைசெய்தல்;

(iii) கிடைக்கக்கூடியனவாகவுள்ள வேறு சட்டப் பொறிமுறைகளுக்கு மேலதிகமாக இணக்கம் மற்றும் மத்தியஸ்தம் உட்பட, பொறிமுறைகளைப் பயன்படுத்தல்;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் ஏதேனும் சார்த்தப்பட்ட மீறல் அல்லது மறுப்பு அல்லது உடனிகழவுள்ள மீறல் அல்லது மறுப்பு பற்றிய ஏதேனும் புலனாய்வின் அல்லது விசாரணையின் அடிப்படையில் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் அதிகாரிக்கு முறையீடுகளைச் செய்தல்;

(உ) பிரிவு 56 இன் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு பற்றிய புலனாய்வொன்றை அல்லது விசாரணையொன்றைக் கையேற்குமாறு பாதுகாப்புப் பிரிவைப் பணித்தல்;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல்;

(எ) அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்தல்;

(ஏ) பாதுகாப்பு நிதியத்தின் வரவிலிருக்கும் பணங்களைத் தோதானதும் பாதுகாப்பானதுமான முறையொன்றில் முதலீடு செய்தலும் வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பீட்டுக் கணக்குகளைத் திறத்தலும் மற்றும் பேணுதலும்;

(ஐ) அதன் கடமைகளையும் பணிகளையும் தகுந்தவாறு புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறாக அதிகாரசபையின் அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும், ஆலோசகர்களையும் அத்துடன் மதியுரைஞர்களையும் நியமித்தல், பதவிநீக்குதல் மற்றும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்;

(ஒ) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கையினுள்ளே அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகளையும், கொடைகளையும், விருப்பாவணக்கொடைகளையும் அத்துடன் மானியக்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதலும் பெற்றுக்கொள்ளுதலும் மற்றும் அதன் கடமைகளையும் பணிகளையும் தகுந்தவாறு புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவற்றைப் பயன்படுத்துதலும்; அத்துடன்

(ஓ) இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் தகுந்தவாறு புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லா விடயங்களையும் செய்தல்.

(2) அதிகாரசபை அல்லது பாதுகாப்புப் பிரிவானது, வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் முன்னங்கீகாரமின்றி, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு உதவி அல்லது பாதுகாப்பு வழங்குவதில் ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து, அல்லது வெளிநாட்டு அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பிடமிருந்து ஏதேனும் உதவியைப் பெறுதலாகாது.

(3) இப்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன், பணிப்புடன் அல்லது கட்டளையுடன் நியாயப்படுத்தத்தகு காரணமின்றி இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

*அதிகாரசபையின் முகாமைச் சபை*

**42.** (1) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவலர்களை நிருவகிக்கும் மற்றும் முகாமைசெய்யும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*(3) சபையானது -*

*(அ)* (i) *நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;*

(ii) *பொலிசுத் திணைக்களம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;*

(iii) *மகளிர் விவகாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;*

(iv) *சிறுவர்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;*

(v) *1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அத்தகைய ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர்;*

(vi) 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சட்ட உதவிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சட்ட உதவி ஆணைக் குழுவின் தவிசாளர் அல்லது ஆணையாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாத, அத்தகைய தவிசாளரின் நியமத்தர் ஒருவர்;

(vii) மறியற்சாலைகள் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஆணையாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாத, அத்தகைய ஆணையாளர் தலைமை யதிபதியின் நியமத்தர் ஒருவர்;

(viii) சட்டத்துறைத் தலைமையதிபதியின் நியமத்தர் ஒருவர்; அத்துடன்

(ix) சிரேட்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதி பதி ஒருவரின் பதவிவரிசையை வகிக்கின்றவரான, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் நியமத் தர் ஒருவர்,

ஆகிய பதவிவழி உறுப்பினர்களையும்:

ஆயின் எவ்வாறாயினும், இப்பந்தியின் (i), (ii), (iii) அல்லது (iv) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடயங்கள் தனியோர் அமைச்சுக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளவிடத்து, அதிகாரசபைக் கான அவ்வமைச்சின் உறுப்பினரொருவரின் பெயர் நியமன மானது, அவ்விடயங்கள் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினாலானதாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சட்டம், குற்றவியல், மனித உரிமைகள் அல்லது மருத்துவம் எனும் துறையில் அல்லது சமூக சேவையில் அல்லது குடிமைச் சமூகச் செயற்பாடுகளில் கல்விரீதியில் அல்லது உயர்தொழில்ரீதியில் தகைமைபெற்றவர்களாகவும் அனுபவம் பெற்றவர்களாகவும் உள்ள, சனாதிபதியால்

நியமிக்கப்பட்ட (இச்சட்டத்தில் "நியமன உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஐந்து உறுப்பினர்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

*அதிகாரசபையின் தவிசாளர்*

**43.** (1) சனாதிபதி, சபையின் உறுப்பினர் ஒருவரை சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்; அவர் அதிகாரசபையின் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் தவிசாளர், மூன்றாண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மீள்நியமனத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் தவிசாளர், எந்த நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் ஒன்றின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து பதவிவிலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகலானது சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(4) அதிகாரசபையின் தவிசாளர் சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, சனாதிபதி, அவர் இடத்திற் செயலாற்றவெனச் சபையின் வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(5) சனாதிபதி, குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளர் பதவியிலிருந்து அதிகாரசபையின் தவிசாளரைப் பதவிநீக்கலாம்.

*சபையின் ஓர் உறுப்பினராக இருப்பதற்கான தகைமையீனங்கள்*

**44.** ஆளொருவர் -

(அ) பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினராக விருப்பின் அல்லது உறுப்பினராக வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்புக்கு உட்பட்டவராகவிருப்பின் அல்லது உட்பட்டவராக இருந்திருப்பின்,

சபையின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

சபையின் நியமன உறுப்பினர்களின் பதவிவிலகல் மற்றும் பதவியகற்றல்

**45.** (1) சபையின் நியமன உறுப்பினரொருவர், எந்த நேரத்திலும், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதமொன்றின்மூலம் அவரது பதவியிலிருந்து பதவிவிலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகலானது சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி, குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், சபையின் நியமன உறுப்பினரொருவரை பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன் அத்தகைய உறுப்பினர் அத்தகைய கட்டளையானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்தும் மற்றும் அதன் பின்னரும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்.

(3) சபையின் எவரேனும் நியமன உறுப்பினரொருவர் இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சனாதிபதி, 42 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எவ்வுறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாது எஞ்சியுள்ள பதவிக்காலத்துக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(5) சபையின் எவரேனும் நியமன உறுப்பினர் சுகயீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய உறுப்பினர், அத்தகைய இயலாமை பற்றி சனாதிபதிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அதன்மேல் சனாதிபதி 42 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதிக்கு அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

*நியமன உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம்*

**46.** சபையின் ஒவ்வொரு நியமன உறுப்பினரும் அத்தகைய உறுப்பினர் இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு பதவிக்காலத்துக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் ஊதியம்*

**47.** சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசித்து சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஊதியம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

*சபையின் கூட்டங்கள்*

**48.** (1) சபையின் தவிசாளர் சமுகமளித்திருப்பின், சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அவர் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் வராதிருப்பின், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவென, சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் தம்முள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்ற தவிசாளர் அல்லது உறுப்பினர், அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

(4) சபையினால் முடிவெடுப்பதற்கான எல்லாக் கருமங்களும் சபையின் கூட்டமொன்றில் கையாளப்படுதல் வேண்டுமென்பதுடன், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மை யானோரால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(5) சபையின் கூட்டமொன்றில் கவனத்திற்கொள்ளப்பட்ட ஏதேனும் கருமம் மீதான வாக்கெடுப்பில் சமனிலையொன்று காணப்படும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்கும் உறுப்பினர் அவரது மூல வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

சபையில் வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமான ஏதேனும் செயல் செல்லுபடியற்றதாக ஆக்கப்பட மாட்டாது

**49**. சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*அதிகாரசபையின் இலச்சினை*

**50.** *(1)* அதிகாரசபையின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும் என்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

*(2)* அதிகாரசபையின் இலச்சினையானது, காலத்திற்குக்காலம் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக் காப்பில் இருத்தல் வேண்டும்.

*(3)* அதிகாரசபையின் இலச்சினையானது, சபையின் வலு வளிப்புடனும் மற்றும் சபையின் இரண்டு உறுப்பினர்களினதும் முன்னிலையிலுமன்றி எத்தகையதுமான சாதனமெதிலும் அல்லது ஆவணமெதிலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும்.

*(4)* சபையானது அதன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள சாதனங் களின் மற்றும் ஆவணங்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

பாகம் VI

## அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியையும் பணியாட்டொகுதியையும் நியமித்தல்

*அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி*

**51.** *(1)* (இச்சட்டத்தில், ''பணிப்பாளர் தலைமையதிபதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமை யதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் சட்டம், நிருவாகம் அல்லது குற்றவியல் துறைகளில் எதனிலும் ஆகக்குறைந்தது பதினைந்து ஆண்டுகள் அனுபவத்துடன் அத்தகைய துறையில் உயர்தொழில்சார் தகைமைகளைக்கொண்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையினால் நியமிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் அவர் அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(3) சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புக்களுக்கும் மேற்பார்வைக்கும் அமைய, பணிப்பாளர் தலைமையதிபதி –

(அ) பணியாட்டொகுதியின் நிருவாகம் மற்றும் கட்டுப்பாடு உட்பட, அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகத் துக்கும் முகாமைக்கும் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சபையினால் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய எல்லாக் கடமைகளினதும் பணிகளினதும் புரிகைக்கும் நிறைவேற்றுகைக்கும் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

(4) (அ) சபையானது, எழுத்திலும் மற்றும் அதன் கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் அமைவாக, அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எதனையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம் என்பதுடன், பணிப்பாளர் தலைமை யதிபதி, அத்தகைய தத்துவங்களையும், கடமைகளை யும் அல்லது பணிகளையும் அதிகாரசபையின் பெயரில் அல்லது அதன் சார்பில் பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(ஆ) சபையானது, (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும் அங்ஙனம் கையளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எதனையும் தானாகவே பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதுடன் எந்தநேரத்திலும் அத்தகைய கையளிப்பை இல்லா தொழிக்கலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அவரது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எதனையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிப்பது அவசியமானதென அவர் கருதுகின்றபோதெல்லாம் அவர் அவ்வாறு செய்யலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேட பணிப்புக்கு அமைவாக, அத்தகைய தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவிக்காலம் நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளாதல் வேண்டும் என்பதுடன் அவர், (7) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி -

(அ) அவரது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாத வராக வந்தால்;

(ஆ) சபையின் அபிப்பிராயத்தில், மோசடியான அல்லது சட்டவிரோத பண்பைக் கொண்டுள்ள அல்லது அதிகாரசபையின் அக்கறைகளுக்கு பங்கம் விளை விப்பதாயுள்ள ஏதேனும் செயலைப் புரிந்தால்; அல்லது

(இ) சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறினால்,

சபையானது பணிப்பாளர் தலைமையதிபதியை அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களைக்கூறி பதவியிலிருந்து அகற்ற லாம்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதி பதவியானது, அப்பதவியை வகிப்பவர் இறப்பதன்மேல், (7) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது அதுசார்பில் அவரினால் சபைக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் பதவிவிலகுவதன்மேல் வறிதாதல் வேண்டும்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதி பதவி வறிதாகுமிடத்து, சபையானது (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு, அத்தகைய பதவிக்கு வேறு ஆளை நியமித்தல் வேண்டும்.

(10) சபையின் உறுப்பினரொருவர் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக் கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதி*

**52.** (1) அதிகாரசபை, அதன் பணிகளின் வினைத்திறனான நிறைவேற்றுகைக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் அதிகாரசபையின் பணியாட்டொகுதியாக நியமிக்கலாம்.

(2) அதிகாரசபை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்கள் தொடர்பில்–

(அ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் பற்றிய நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்க லாம்;

(ஆ) அரசாங்கத்தின் தொடர்புடைய வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க, அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக் கும் ஊதியமளிக்கப்படவேண்டிய வீதங்களை நிர்ண யிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக் காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவிநீக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நன்மைக்காக பணியாட்டொகுதியின் நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைத் தாபிக்கலாம் என்பது டன் அத்தகைய எவையேனும் திட்டங்களுக்கு பங்களிப்பும் செய்யலாம்.

(3) சபையானது, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(4) அதிகாரசபையானது, பகிரங்க அல்லது தனியார் துறையில் எவரேனும் ஆளினால் வகிக்கப்பட்ட ஏதேனும் முன்னைய பதவியிலிருந்து பதவியகற்றப்பட்டுள்ள அத்தகைய ஆளை அதிகாரசபையின் அலுவலரொருவராக அல்லது வேறு ஊழியரொருவராக நியமித்தலாகாது.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்*

**53.** (1) அதிகாரசபையின் கோரிக்கையின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், அந்த அலுவலர் எந்த அமைச்சினால் அல்லது அமைச்சின்கீழ் தொழிலுக் கமர்த்தப்பட்டாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும் மற்றும் பொது நிருவாகம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றுக்கு அரசாங்கத்துக்குச் சேவைபுரிய உடன்படுவதாக அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளவரான ஆள் எவரையும் அதிகாரசபை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்குப் புரியப்பட்ட சேவைக் காலப்பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவ்வாளினால் அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு

*குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவைத் தாபித்தல்*

**54.** (1) இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பில் புலனாய்வுகளை அல்லது விசாரணைகளை நடாத்தும், மற்றும் இச்சட்டத்தின் கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவி மற்றும் பாதுகாப்பை வழங்கும் நோக்கத்துக்காக, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான பொலிசு அலுவலர்களைக் கொண்டுள்ள (இச்சட்டத்தில், “பாதுகாப்புப் பிரிவு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பாதுகாப்புப் பிரிவின் பொலிசு அலுவலர்கள் அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட பெயர்நியமனத்தின் மீது, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன், பாதுகாப்புப் பிரிவுக்கான பொலிசு அலுவலர்களைத் தெரிவுசெய்வதற்கான கட்டளைக்கற்களைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளைக்கற்கள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(4) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினதும் மற்றும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினதும் மேற்பார்வையின்கீழ் செயற்பட வேண்டிய சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாதவரும் பொருத்தமான முறையில் தகைமைபெற்றவருமான பொலிசு அலுவலரொருவரைப் பாதுகாப்புப் பிரிவின் தலைவராக பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(5) பாதுகாப்புப் பிரிவின் பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன தொடர்பான எல்லாக் கருமங்களும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் விதப்புரையின்மீது அரசிய லமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கருமத்தின்மீது விதப்புரைகளைச் செய்கையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அதிகாரசபை யின் கருத்துக்களை நாடலாம்.

(6) (அ) அதிகாரசபையானது, பாதுகாப்புப் பிரிவின் அலுவல்கள் பற்றிய இரகசியத்தன்மையையும் மற்றும் இச்சட்டத்தின்கீழ் பாதுகாப்புப் பிரிவின் பொலிசு அலுவலர்களுக்குள்ள கடமை களையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அவர் களின் பக்கச்சார்பின்மையையும் மற்றும் வகைகூறவேண்டிய மையையும் உறுதிப்படுத்துவதற்கான விதிகளை ஆக்குதல் வேண் டும்.

(ஆ) பாதுகாப்புப் பிரிவுக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு பொலிசு அலுவலரும், அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தொழுகுவதற்கு எழுத்தில் பொறுப்பேற்றல் வேண்டும்.

(7) (அ) அதிகாரசபையானது, இச்சட்டத்தின் ஏதேனும் இயைபான ஏற்பாட்டுக்கு அல்லது (6) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிக்கு அல்லது வழிகாட்டுநெறிக்கு ஏதேனும் வேண்டுமென்றே இணங்கி யொழுகாமை தொடர்பில் பாதுகாப்புப் பிரிவின் எவரேனும் பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டைப் பொலிசுப்

பரிசோதகர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்; அவர், அத்தகைய முறைப்பாடு பற்றி விசாரித்து, இயைபான சூழ்நிலைகளில் தோதானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

(ஆ) பாதுகாப்புப் பிரிவின் பொலிசு அலுவலரொருவர் ஏதேனும் அத்தகைய ஏற்பாட்டை அல்லது விதியை அல்லது வழிகாட்டு நெறியை மீறியுள்ளார் எனக் குறிப்பிட்டு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று, அத்தகைய பொலிசு அலுவலருக் குக்கெதிராக ஏதேனும் வழக்கை அல்லது விசாரணையைத் தொடங்கும் நோக்கத்துக்காக முதற்றோற்றளவிலான சான்றாதல் வேண்டும்.

*பாதுகாப்புப் பிரிவு தீவளாவிய நியாயாதிக் கத்தைக் கொண்டிருத்தல்*

**55.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பாதுகாப்புப் பிரிவானது -

(அ) பாதுகாப்புப் பிரிவுக்கு நேரடியாகச் செய்யப்பட்ட;

(ஆ) அதிகாரசபைக்குச் செய்யப்பட்டு பாதுகாப்புப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட; அல்லது

(இ) ஏதேனும் நீதிமன்றத்தினால், ஆணைக்குழுவினால் அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் பாதுகாப்புப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

இச்சட்டத்தின் III ஆம் பாகத்தின்கீழான தவறொன்று தொடர்பி லான ஏதேனும் முறைப்பாட்டை பெறுவதற்கு, புலனாய்வு செய்வ தற்கு அல்லது விசாரிப்பதற்கு தீவளாவிய நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் பொலிசு நிலையத்துக்கு இணைக்கப்பட்ட ஒவ்வொரு பொலிசு அலுவலரும், பாதுகாப்புப் பிரிவினால் கோரப்படும் போதெல்லாம், பாதுகாப்புப் பிரிவின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் அப்பிரிவுக்கு உதவுதல் வேண்டும்.

பாதுகாப்புப் பிரிவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**56.** (1) பாதுகாப்புப் பிரிவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் –

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பாதுகாப்புப் பிரிவினால்பெறப்பட்ட அல்லது அதிகாரசபையினால், ஏதேனும் நீதிமன்றத்தினால், ஆணைக்குழுவினால் அல்லது எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் பாதுகாப்புப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு அல்லது விசாரணை செய்தல்;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவியையும் மற்றும் பாதுகாப்பையும் வழங்குதல்;

(இ) பிரிவு 59 இல் குறிப்பீடு செய்யப்பட்ட குறிப்பான ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்குள் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரைச் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகளை விதித்தல்;

(ஈ) எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு உடனிகழவுள்ள அச்சுறுத்தலின் விடயத்தில், அவருக்கான உடனடிப் பாதுகாப்பை வழங்குதல்;

(உ) பொலிசு நிலையமொன்றினால் செய்யப்படும் கோரிக்கையின் மீது, அத்தகைய பொலிசு நிலையத்தினால் இச்சட்டத்தின்கீழான தவறொன்று பற்றிய புலனாய்வொன்றை அல்லது விசாரணையொன்றை நடாத்துதல் தொடர்பில் அவசியமான வழிகாட்டலையும் மதியுரையையும் வழங்குதல்;

(ஊ) சூழ்நிலைகளின் தீவிரத்தன்மையையும் பாரதூரத்தன்மையையும் அடிப்படையாகக்கொண்டு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பணிப்பொன்றைப் பெற்றதன் மேல், எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட

வருக்கு அல்லது சாட்சிக்கு எதிரான இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு பற்றி ஏதேனும் புலனாய்வை அல்லது விசாரணையை மேற்கொள்ளல்; அத்துடன்

(எ) பாதுகாப்புப் பிரிவானது, இச்சட்டத்தின்கீழ் சார்த்தப்பட்ட ஏதேனும் தவறின் தீவிரத்தன்மை அல்லது பாரதூரத் தன்மை அத்தகைய தவறு பற்றிய புலனாய்வை அல்லது விசாரணையை நடாத்துவதில் அதனது இடையீட்டை அனுமதிக்கின்றதென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன், அத்தகைய புலனாய்வை அல்லது விசாரணையைப் பொறுப்பேற்றல்.

(2) பாதுகாப்புப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்ட அலுவலர் கள், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரும் சாட்சிகளும் தொடர்பான கருமங்கள் தொடர்பில் இரகசியத்தன்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், சட்டத்தினால் தேவைப்படுத்தப் பட்டவாறாகத் தவிர, அத்தகைய கருமங்கள் பற்றிய ஏதேனும் தகவலைப் பகிர்ந்துகொள்ளுதலுமாகாது.

## பாகம் VIII

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

*குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப் பட்டோருக்கும் சாட்சிகளுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய பொது நிகழ்ச்சித் திட்டம்*

**57.** (1) அதிகாரசபையானது, பாதுகாப்புப் பிரிவுடனான கலந்தாலோசனையுடனும் அதிகாரசபையினால் உருவாக்கப்பட வேண்டிய வழிகாட்டுநெறிகளின் அடிப்படையிலும், (இச்சட்டத்தில் "பொது நிகழ்ச்சித்திட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவி மற்றும் பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைமுறைகளை உள்ளடக்கிய, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய பொது நிகழ்ச்சித்திட்டமொன்றை வகுத்தமைத்தல் வேண்டும்.

(2) பொது நிகழ்ச்சித்திட்டத்துக்கான வழிகாட்டுநெறிகளை உருவாக்குவதில் அதிகாரசபையானது, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவி மற்றும் பாதுகாப்பு வழங்குவதற்காகக் கருதப்பட்ட சர்வதேச விதிமுறைகள், நியமங்கள், கொள்கைகள், நடவடிக்கைமுறைகள் மற்றும் மிகச்சிறந்த செயல்முறைகள் என்பவற்றுக்கு உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

*பொது நிகழ்ச்சித் திட்டம் பற்றிய தகவல்களைப் பகிர்வதற்கு அதிகார சபைக்குள்ள கடமை*

**58.** (1) அதிகாரசபை பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்-

(அ) பொது நிகழ்ச்சித்திட்டம் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்கிடையே பகிர்ந்துகொள்ளுதல்;

(ஆ) பின்வருவனவுட்பட, பொது நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கிடையே உருவாக்குதல்-

(i) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர் தொடர்பில் இச்சட்டத்தின் III ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு புரியப்படுகின்ற போதெல்லாம், உதவியையும் பாதுகாப்பையும் நாடுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ii) அத்தகைய பொது நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கான அல்லது சாட்சி ஒருவருக்கான உதவியையும் பாதுகாப்பையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, எவரேனும் இயைபான அதிகாரியுடன் கிடைக்கக்கூடிய எந்த முறைமைகளில் தாமதமின்றித் தொடர்புகொள்ளலாமோ, அந்த முறைமைகள்; அத்துடன்

(iii) பொது நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நாடப்படக்கூடிய உதவியினதும் பாதுகாப்பினதும் தன்மை.

(2) (அ) அதிகாரசபையானது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பொது நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்குகின்ற கைநூல் ஒன்றை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கைநூல் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கின்ற கடமை பொறுப்பிக்கப்பட்ட எல்லா இயைபான ஆட்களுக்கும், அதிகாரிகளுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் கிடைக்கக்கூடியதாக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிப்பதிலான பொது நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியொழுகுதல், அத்தகைய பொது நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பைக்கொண்டுள்ள ஒவ்வோர் ஆளினதும், அதிகாரியினதும் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றினதும் கடமையாதல் வேண்டும்.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கான அல்லது சாட்சி ஒருவருக்கான ஒரு குறிப்பான நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்புச்செய்தல்

**59**. (1) அதிகாரசபையினால் வகுத்தமைக்கப்பட்ட பொது நிகழ்ச்சித்திட்டத்தையும் மற்றும் அது சம்பந்தமாக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளையும் அடிப்படையாகக் கொண்டு, பாதுகாப்புப் பிரிவானது, எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு உதவியையும் பாதுகாப்பையும் வழங்கும் நோக்கத்துக்காக (இச்சட்டத்தில் “குறிப்பான நிகழ்ச்சித்திட்டம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரு குறிப்பான நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்புச்செய்தல் வேண்டும்.

(2) பாதுகாப்புப் பிரிவானது-

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரினால் அல்லது சாட்சியொருவரினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின்மீது;

(ஆ) அதிகாரசபையினால் செய்யப்பட்ட விதப்புரையொன்றின்மீது;

(இ) எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின்மீது; அல்லது

(ஈ) ஒரு நீதிமன்றத்திடமிருந்து அல்லது ஓர் ஆணைக்குழு விடமிருந்து பெறப்பட்ட அறிவிப்பொன்றின்மீது,

குறிப்பான நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரைச் சேர்க்கலாம்.

(3) பாதுகாப்புப் பிரிவு, குறிப்பான நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரைச் சேர்த்துக்கொள்வதற்காக இணங்கியொழுகப்பட வேண்டிய நிபந்தனைகளை விதித்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் குறிப்பான நிகழ்ச்சித் திட்டத்துக்கு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரைச் சேர்த்துக்கொள்ள முன்னர், பாதுகாப்புப் பிரிவானது, அத்தகைய குறிப்பான நிகழ்ச்சித்திட்டத் தின்கீழான பாதுகாப்பை அல்லது உதவியை தான் பயன்படுத்து வதற்கும் மற்றும் அத்தகைய குறிப்பான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் அதிகாரசபையினால் அல்லது பாதுகாப்புப் பிரிவினால் விதிக்கப் பட்ட நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுவதற்கும் அவரது எழுத்திலான சம்மதத்தை வெளிப்படுத்தும்படி அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் IX

### நட்டஈடும் இடைக்கால அளிப்புகளும்

**60.** இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு ஏதேனும் நட்டஈட்டைச் செலுத்துதல் அல்லது இடைக்கால அளிப்பொன்றைச் செய்தலானது, நீதியும் ஒப்புரவுமான அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

நட்டஈடும் இடைக்கால அளிப்புக்களும் நீதியானதும் ஒப்புர வானதுமான அடிப்படையில் செய்யப்பட வேண்டும்

*நீதிமன்றம் நட்டஈட்டுக்குக் கட்டளை யிடலாம்*

**61.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றமொன்று, குற்றஞ்சாட்டப்பட்ட வரொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, எத்தவறுக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ அத்தவறு தொடர்பில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள்மீது சுமத்தப்படக்கூடியவாறான ஏதேனும் தண்டனை வலுவளித்தலுக்கு மேலதிகமாக, இச்சட்டத்தின் கீழ், அத்தகைய நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டுத் தொகையை நீதிமன்றத்துக்குச் செலுத்துமாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்குக் கட்டளையிடலாம்.

(2) நீதிமன்றமொன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை யொன்றை ஆக்குகின்றவிடத்து, அந்நீதிமன்றம்–

(அ) அத்தகைய நட்டஈடு எந்தக் காலத்தினுள் செலுத்தப் படுதல் வேண்டுமோ, அந்தக் காலத்தைக் குறித் துரைக்கலாம்; அல்லது

(ஆ) சூழ்நிலைகளைப் பொறுத்து, நட்டஈடானது தவணை அடிப்படையில் செலுத்தப்பட வேண்டுமெனக் கட்டளை யிடலாம்.

(3) இப்பிரிவின்கீழ் செலுத்தப்பட வேண்டுமென நீதிமன்றத் தினால் கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டவொரு குற்றப்பணம் என்றாற் போன்று அறவிடப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியுள்ள நட்டஈட்டின் அறவீடு தொடர்பான ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழான நட்டஈட்டை அறவிடுவதற்கும் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(4) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் போதிய பணமில்லாதவராக அல்லது நட்டஈட்டை அறவிடுவதற்கு இழப்பிக்கப்படுவதற்கான சொத்துக்களைக் கொண்டிராதவராக இருக்குமிடத்து, நீதிமன்ற மானது, வளங்களின் கிடைக்கக்கூடியதன்மைக்கு அமையவும் இச்சட்டத்தின் அடுத்துப்பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கவும், ஒரு

மில்லியன் ரூபாவை விஞ்சாததாகவும் பலியாக்கப்பட்டமைக்கு இணையாகவுமுள்ள பணத்தொகையொன்றை நட்டஈடாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்குச் செலுத்தும்படி அதிகாரசபைக்குக் கட்டளையிடலாம்.

நட்டஈட்டைச் செலுத்துவதில் தவணை தவறுதல்

**62.** குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர், 61 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட நட்டஈட்டைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து, அவர் பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாதல் வேண்டும்–

(அ) அத்தகைய கட்டளை நீதிவான் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டிருப்பின், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு; அல்லது

(ஆ) அத்தகைய கட்டளை மேல்நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டிருப்பின், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு:

ஆயின் எவ்வாறாயினும், நீதிமன்றமானது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் நட்டஈட்டைச் செலுத்துவதற்கு அவசியமான நிதிமூலங்களைக் கொண்டிருக்கவில்லை என விசாரணையின்மேல் திருப்தியுற்றால், அந்நீதிமன்றம் சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தக் கட்டளையொன்றினை ஆக்கலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்படுகின்றவிடத்து, 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாய அடிப்படையிலான சீர்தருத்தங்கள் சட்டத்தில் அடங்கியுள்ள சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தக் கட்டளை தொடர்பான ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அக்கட்டளை தொடர்பாக ஏற்புடையனவாதலும் வேண்டும்.

நட்டஈட்டைச் செலுத்துவதற்கு கட்டளையிட முன்னர் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய கருமங்கள்

**63.** நீதிமன்றம், 61 ஆம் பிரிவின்கீழ் நட்டஈட்டைச் செலுத்தும்படி கட்டளையொன்றை ஆக்கமுன்னர், பின்வரும் கருமங்களைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்:–

(அ) தவறின் விளைவொன்றாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் துன்புறநேர்ந்த ஊறின் தன்மையுட்பட, தவறு தொடர்பான எல்லாத் தகவல்களும்;

(ஆ) எவையேனும் தீவிரப்படுத்தும் அல்லது தணிக்கும் காரணிகள்;

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரைப் பரிசோதித்துள்ள அரசாங்க மருத்துவ அலுவலரின் அறிக்கை;

(ஈ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய உளவியல்ரீதியான அல்லது உணர்ச்சிரீதியான தீங்கு பற்றிய ஏதேனும் சான்று;

(உ) ஊறின் காரணமாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் துன்புறநேர்ந்த ஏதேனும் வருமதியிழப்பு;

(ஊ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் உறப்பட்ட மருத்துவச் செலவுகள் உட்பட, எவையேனும் செலவுகள்;

(எ) பிரிவு 8 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக் கூற்று;

(ஏ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு ஏலவே செலுத்தப்பட்டுள்ள வேறேதேனும் நட்டஈடு, அல்லது ஏதேனும் வேறு நீதிமன்றத்தினால், ஆணைக்குழுவினால், குழுவினால் அல்லது ஆளினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளிடமிருந்து அறவிடப்பட்ட வேறேதேனும் நட்டஈடு, அல்லது அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு ஏலவே செய்யப்பட்டிருக்கக்கூடிய வேறேதேனும் அளிப்பு; அத்துடன்

(ஐ) தவறின் விளைவொன்றாக அத்தகைய குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவர் துன்புற்றிருக்கக்கூடிய ஊறின், சேதத்தின் அல்லது இழப்பின் தன்மையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு நீதிமன்றத்துக்கு அல்லது அதிகாரசபைக்கு உதவக்கூடிய வேறேதேனும் தகவல்.

உரிமைக் கோரிக்கையை எண்பிக்கும் பொறுப்பு

**64**. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நட்டஈட்டுக்கான உரிமைக்கோரிக்கை ஒன்றை அல்லது இடைக்கால அளிப்பொன்றை எண்பிக்கும் பொறுப்பு அந்த உரிமைக்கோரிக்கையைச் செய்கின்ற ஆளுடையதாதல் வேண்டும்.

(2) சான்று பற்றிய ஏதேனும் விதி அல்லது சான்றின் ஏல்தகவு தொடர்பிலான ஏதேனும் தடை எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான நட்டஈட்டுக்கொடுப்பனவைத் தீர்மானிக்கின்ற நீதிமன்ற மொன்று அல்லது இச்சட்டத்தின்கீழான இடைக்கால அளிப் பொன்றின் கொடுப்பனவு பற்றித் தீர்மானிக்கின்ற அதிகாரசபை குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் அல்லது வழக்குநடவடிக்கைகளுக்கு இயைபான வராகவுள்ள வேறு எவரேனும் ஆளின் ஏதேனும் கூற்றை கணக்கி லெடுக்கலாம்.

நட்டஈட்டைப் பெறுவது குடியியல் வழக்கு நடவடிக்கை களுக்குத் தடையாக இருத்தலாகாது

**65**. (1) நீதிமன்றமொன்று 61 ஆம் பிரிவின்கீழ் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்ட ஆளொருவரிடமிருந்து நட்டஈடாக ஏதேனும் தொகையை அறவிடுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றம், அவ்வாறு அறவிடப்பட்ட பணத்தின் இருபது சதவீதத்தை பாதுகாப்பு நிதியத்துக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன் எஞ்சியதொகையானது, விடயத்துக்கேற்ப, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு, அவரது கிட்டிய இரத்த உறவினருக்கு, தங்கிவாழ்வோருக்கு அல்லது மரபுரிமையாளருக்கு செலுத் தப்படுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் குற்றசெயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரினால் நட்டஈடு பெறப்படுவதானது, எவையேனும் குடியியல் வழக்குநடவடிக்கைகளில் எவையேனும் சேதவீடுகளை உரிமை

கோருவதற்கு அத்தகைய குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டவருக்குள்ள உரிமைக்கு பங்கம் விளைவித்தலாகாது; ஆயின், அளிக்கப்பட வேண்டிய சேதவீடுகளின் அளவைத் தீர்மானிக்கும்போது, அத்தகைய குடியியல் நீதிமன்றம், இப்பிரிவின்கீழ் அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் ஏலவே பெறப்பட்ட நட்டஈட்டை கவனத்திலெடுக்கலாம்.

*மேன்முறையீடுகள்*

**66.** (1) நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட நட்டஈட்டின் அளவு தொடர்பாக அல்லது நட்டஈடு மறுக்கப்பட்டமை தொடர்பாக இச்சட்டத்தின்கீழான நீதிமன்றத்தின் முடிபினால் இன்னலுற்ற எவரேனுமாள் -

(அ) அத்தகைய முடிபு நீதிவான் நீதிமன்றமொன்றினால் எடுக்கப்பட்டுள்ளவிடத்து, நியாதிக்கத்தைக் கொண்டுள்ள மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்; அல்லது

(ஆ) அத்தகைய முடிபு மேல் நீதிமன்றமொன்றினால் எடுக்கப்பட்டுள்ளவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்,

அத்தகைய முடிபு பற்றிய மீளாய்வொன்றை நாடுவதற்கான உரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் பாகம் VII இல் அடங்கியுள்ள, முடிபுகள் பற்றிய மீளாய்வை நாடுவதற்கான நடவடிக்கைமுறை தொடர்பிலான ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழ் முடிபுகள் பற்றிய மீளாய்வுக்காக விண்ணப்பங்களைக் கோப்பிடுவதற்கு, ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

*விதிவிலக்கான சூழ்நிலைகளில் அதிகாரசபை பணத்தின் இடைக்கால அளிப்பொன்றைச் செய்யலாம்*

**67.** (1) அதிகாரசபையானது, 69 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான மதியுரைச் சபையொன்றின் விதப்புரையின்மீது, பாரதூரமான தவறொன்றின் விடயத்தில், விதிவிலக்கான சூழ்நிலைகளில் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்குப் பணத்தின் இடைக்கால அளிப்பொன்றைச் செலுத்துதல் பற்றிக் கவனத்துட் கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இடைக்கால அளிப்பானது-

(அ) பிரிவு 68 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது அவர் சார்பில் வேறு எவரேனுமாளின் விண்ணப்பத்தின்மீதும்; அத்துடன்

(ஆ) புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்ட தவறு தொடர்பி லான வழக்குநடவடிக்கைகளின் இறுதி விளைவைப் பொருட்படுத்தாமலும்,

வளங்களின் கிடைக்கக்கூடிய தன்மையைப்பொறுத்து செய்யப் படலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு “பாரதூரமான தவறு” என்பது, குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமின்றி, குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் தண்டனைத் தீர்ப்பொன்றுடன் தண்டிக்கப்படற்பாலதான ஒரு தவறாகும் எனப் பொருள்படும்.

*அதிகார சபையிடமிருந்து பணத்தின் இடைக்கால அளிப்புக்காக விண்ணப்பித்தல்*

**68.** (1) (அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது அவர் சார்பில் வேறு எவரேனுமாள், அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான ஏதேனும் வேறு ஆவணத்துடன் சேர்த்து, பணத்தின் இடைக்கால அளிப்புக்காக சத்தியக் கடதாசி ஒன்றினால் ஆதாரப்படுத்தப்பட்ட விண்ணப்பமொன்றை அதிகாரசபைக்குச் செய்யலாம். சத்தியக்கடதாசியானது, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் எல்லா வருமான மூலங்கள் பற்றிய உண்மையான வெளிப்படுத்துகை ஒன்றை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம், சத்தியக்கடதாசி மற்றும் வேறு ஆவணங்கள் (அ) என்னும் பந்தியின்கீழ் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் சார்பில் வேறு

ஆளினால் சமர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அத்தகைய விண்ணப்பம், சத்தியக்கடதாசி மற்றும் வேறு ஆவணங்களை ஏன் அவரே சமர்ப்பிக்கமுடியாது என்பதற்கான காரணங்களைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் விண்ணப்பம், சத்தியக்கடதாசி மற்றும் வேறு ஆவணங்களை விதப்புரைகளுக்காக மதியுரைச் சபைக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

*மதியுரைச் சபை இடைக்கால அளிப்புக்களை வழங்குவதற்கு விதந்துரைத்தல்*

**69.** (1) பிரிவு 68 இன் (2) ஆம் உட்பிரிவின்கீழான ஆற்றுப்படுத்தலொன்று பெறப்பட்டதன்மேல், மதியுரைச் சபையானது, அவ்வாற்றுப்படுத்தலைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்-

(அ) ஒவ்வொரு விண்ணபத்தையும் நீதியும் ஒப்புரவுமான அடிப்படையில் இடைக்கால அளிப்புக்காகக் கவனத்திற் கொள்ளுதல்; அத்துடன்

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு இடைக் கால அளிப்பொன்றை வழங்குவதா என்பதுபற்றி அதிகாரசபைக்கு அதன் விதப்புரைகளைச் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று பற்றிய விதப்புரைகளைச் செய்வதில், அதிகாரசபையானது-

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு எதிராகப் புரியப்பட்ட தவறு பற்றிய எல்லா சம்பந்தப்பட்ட சூழ் நிலைகளையும் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்டவரினால் உறப்பட்ட ஊறுகளையும் கணக்கி லெடுத்தல் வேண்டும்;

(ஆ) இடைக்கால அளிப்புக்கான உரிமை கோரலின் மெய்யான தன்மையை தாபிக்கக்கூடிய இயைபான எல்லா சான்றுகளையும், ஆவணங்களையும் மற்றும் பொருட்களை யும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

(இ) புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்ட தவறு தொடர்பில், குற்றஞ்சாட்டப்பட்டவரினால் அல்லது குற்றத்தீர்ப்பளிக் கப்பட்ட ஆளினால் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவருக்கு ஏலவே செலுத்தப்பட்டுள்ள அல்லது ஏதேனும் நீதிமன்றத்தினால், ஆணைக்குழுவினால், குழுவினால் அல்லது ஆளினால் குற்றஞ்சாட்டப் பட்டவரிடமிருந்து அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட வரிடமிருந்து ஏலவே அறவிடப்பட்டுள்ள ஏதேனும் நட்டஈட்டைக் கணக்கிலெடுத்தல் வேண்டும்.

இடைக்கால அளிப்பை வழங்குதல்

**70.** (1) பிரிவு 69 இன்கீழ் மதியுரைச் சபையின் விதப்புரைகளைப் பெற்றதன்மேல், அதிகாரசபையானது, அவ்வதிகாரசபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்க குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு இடைக்கால அளிப்பொன்றைச் செய்யலாம்.

(2) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஆக்கப்பட வேண்டிய அதிகாரசபையின் கட்டளையொன்றின்மீது, இடைக்கால அளிப்பாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அளிக்கப்பட்ட பணத்தொகையானது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மீள்செலுத்துகைத் திட்டத்துக்கேற்ப அவரினால் அதிகாரசபைக்கு மீளச்செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) (அ) இடைக்கால அளிப்பின் மீள்செலுத்துகைக்காக அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அவரது சத்தியக்கடதாசியில் வெளிப்படுத்தப்பட்ட வாறான அவரின் வருமானமீட்டல் இயலுமையைப் பொறுத்தமைதல் வேண்டும்.

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் தொழி லற்றவராக அல்லது இடைக்கால அளிப்பை மீளச் செலுத்துவதற்கான வருமான வழிகளைக் கொண்டி ராதவராக இருப்பின், இடைக்கால அளிப்பின் மீள்செலுத்துகைக்கான கட்டளையொன்று ஆக்கப்படுத லாகாது.

(4) இடைக்கால அளிப்பொன்றின் மீள்செலுத்துகைக்கான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றவிடத்து, அதிகாரசபையானது, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருடன் மீள்செலுத்துகைத் திட்டமொன்றைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் வருமானமீட்டல் இயலுமையின் அளவை அவ்வப்போது மதிப்பீடு செய்யலாம் என்பதுடன் இடைக்கால அளிப்பொன்றின் மீள்செலுத்துகைக்காக ஆக்கப்பட்ட கட்டளையொன்றையும் வேறுபடுத்தலாம்.

இடைக்கால அளிப்பை மீளச் செலுத்தத் தவறுதல்

**71.** (1) ஆளொருவர், அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மீது, 70 ஆம் பிரிவின்கீழ் இடைக்கால அளிப்பாகப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையை மீளச்செலுத்தத் தவறுகின்றவிடத்து, நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றமானது–

(அ) அதிகாரசபையினால் அத்தகைய நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதும்; அத்துடன்

(ஆ) அத்தகைய பணத்தொகை மீளச்செலுத்தப்படவில்லை என அதிகாரசபையின் தவிசாளரின் கைப்பட நீதிவானுக்கு வழங்கப்பட்ட சான்றிதழொன்றின்மேல்,

அத்தகைய பணத்தொகையை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அறவிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று, அத்தகைய செலுத்தப்படாமைபற்றிய நிகழ்வு குறித்த முதற்றோற்றளவிலான சான்றாதல் வேண்டும்.

அதிகாரசபை இடைக்கால அளிப்புக்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகளை வழங்குதல்

**72.** அதிகாரசபையானது, மதியுரைச் சபையுடனான கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான இடைக்கால அளிப்புக்கள் தொடர்பாகவுள்ள பின்வரும் கருமங்கள் தொடர்பில் வழிகாட்டுநெறிகளை வழங்குதல் வேண்டும்:–

(அ) இடைக்கால அளிப்பொன்றுக்காக விண்ணப்பிக்கும் படிவமும் முறையும்;

(ஆ) இடைக்கால அளிப்பொன்றின் செலுத்துகைக்காக எந்தக் காலத்தினுள் விண்ணப்பமொன்று செய்யப்படலாமோ அந்தக்காலம்;

(இ) எந்தச் சூழ்நிலைகளின்கீழ் இடைக்கால அளிப்பொன்று செலுத்தப்படலாமோ அந்தச் சூழ்நிலைகள்;

(ஈ) இடைக்கால அளிப்பொன்றின் செலுத்துகை பற்றிய நடவடிக்கைமுறையும் முறையும்;

(உ) எந்த நிபந்தனைகளின்கீழ் இடைக்கால அளிப்பொன்று செலுத்தப்படலாமோ அந்த நிபந்தனைகள்;

(ஊ) எந்தச் சூழ்நிலைகளின்கீழ் இடைக்கால அளிப்பொன்று மீளச்செலுத்தப்படலாமோ அந்தச் சூழ்நிலைகள்;

(எ) இடைக்கால அளிப்பொன்றின் மீள்செலுத்துகைக்கான நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஏ) எந்தச் சூழ்நிலைகளின்கீழ் இடைக்கால அளிப்பொன்று பிடித்துவைக்கப்படலாமோ அல்லது அளிப்புத்தொகை குறைக்கப்படலாமோ, அந்தச் சூழ்நிலைகள்;

*நட்டஈடு அல்லது இடைக்கால அளிப்பு என்பவற்றுக் கான உரித்துடைமை யின்மை*

**73.** (1) ஆளொருவர், இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றமொன்றிட மிருந்து ஏதேனும் நட்டஈட்டைப் பெறுவதற்கு அல்லது அதிகாரசபை யிடமிருந்து ஓர் இடைக்கால அளிப்பைப் பெறுவதற்கு பின்வரும் சூழ்நிலைகளில் உரித்துடையவராதலாகாது -

(அ) (i) சார்த்தப்பட்ட தவறாக அமைகின்ற செயல் இடம்பெற வில்லையென நிலைநாட்டப்படின்;

(ii) சார்த்தப்பட்ட தவறாக அமைகின்ற செயல் குற்றவியல் சட்டத்தின்கீழ் மேவப்படவில்லையென நிலைநாட்டப் படின்; அல்லது

(iii) சார்த்தப்பட்ட தவறாக அமைகின்ற செயல் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரினால் தாக்குதல் ஒன்றுக்கு எதிரான தற்பாதுகாப்பில் புரியப்பட்டி ருப்பின்;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர், தவறு புரியப்படுகின்ற நேரத்தில் அல்லது அதன் பின்னர், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுவொன்றின் ஓர் உறுப்பினராக இருக்கின்றாரென எண்பிக்கப்படின்; அல்லது

(இ) விடயத்துக்கேற்ப, வழக்குநடவடிக்கைகளின் முடிவில் அல்லது அதன்போது, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவர் இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படின்.

(2) ஓர் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் மட்டும் இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையிடமிருந்து ஓர் இடைக்கால அளிப்புக்கான உரிமைக்கோரிக்கையொன்றைச் செய்வதற்கும் மற்றும் அதனைப் பெறுவதற்கும் தகவுடையவராவார்.

*அளிப்புக்கள் பற்றிய மதியுரைச் சபை*

**74.** (1) அமைச்சர், அதிகாரசபையுடனான கலந்தாலோசனை யுடன், 67 ஆம் பிரிவின்கீழ் பணம்பற்றிய ஏதேனும் இடைக்கால அளிப்பின் செலுத்துகைபற்றி அதிகாரசபைக்கு விதப்புரைகளைச் செய்வதற்கென (இச்சட்டத்தில் "மதியுரைச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அளிப்புக்கள் பற்றிய மதியுரைச் சபையொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) மதியுரைச் சபையானது பின்வருவோரை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்-

(அ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இளைப்பாறிய நீதித்துறை அலுவலரொருவர்;

(ஆ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவராகவும், சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி வரிசைக்குக் குறையாதவராகவும் உள்ள அத்தகைய அமைச்சின் பிரதிநிதி ஒருவர்;

(இ) நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவராகவும், சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி வரிசைக்குக் குறையாதவராகவும் உள்ள அத்தகைய அமைச்சின் பிரதிநிதி ஒருவர்;

(ஈ) கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, அவரின் பிரதிநிதி ஒருவர்; அத்துடன்

(உ) அமைச்சரினால் நியமிக்கப்பட்டவராகவும், தீங்கியல் சட்டத்துறையில் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டவராகவும் உள்ள சட்டத்தரணி ஒருவர்.

*மதியுரைச் சபையின் தவிசாளர்*

**75.** (1) அமைச்சர், 74 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இளைப்பாறிய நீதித்துறை அலுவலரை மதியுரைச் சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) மதியுரைச் சபையின் தவிசாளர், மூன்றாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் மீள்நியமனத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) மதியுரைச் சபையின் தவிசாளர், எந்த நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் ஒன்றின் மூலம் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலக லானது அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(4) மதியுரைச் சபையின் தவிசாளர் சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அமைச்சர், அவர் இடத்திற் செயலாற்றவென மதியுரைச் சபையின் வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(5) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளர் பதவியிலிருந்து மதியுரைச் சபையின் தவிசாளரைப் பதவியகற்றலாம்.

மதியுரைச் சபையின் ஓர் உறுப்பினராக இருப்பதற்கான தகைமையீனங்கள்

**76.** ஆளொருவர் -

(அ) பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினராக விருப்பின் அல்லது உறுப்பினராக வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இல்லா தொழியின்;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப் படின்; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற் றண்டனைத் தீர்ப்புக்கு உட்பட்டவராகவிருப்பின் அல்லது உட்பட்டவராக இருந்திருப்பின்,

மதியுரைச் சபையின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

மதியுரைச் சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவிவிலகல் மற்றும் பதவியகற்றல்

**77.** (1) மதியுரைச் சபையின் உறுப்பினரொருவர், எந்த நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதமொன்றின் மூலம் அவரது பதவியிலிருந்து பதவிவிலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகலானது அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) மதியுரைச் சபையின் உறுப்பினரொருவர்-

(அ) அவரது கடமையைப் புரிவதிலான துர்நடத்தைக்காக; அல்லது

(ஆ) மோசடி அல்லது நேர்மையின்மையில் ஈடுபடுகின்ற தவறொன்றுக்காக,

குற்றவாளியாகக் காணப்படின், அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், இச்சட்டத்தின் 74 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மதியுரைச் சபைக்கு அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த எவரேனுமாளுடன் கலந்தாலோசித்து, மதியுரைச் சபையின் அத்தகைய உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டவரான மதியுரைச் சபையின் உறுப்பினரொருவர், அத்தகைய கட்டளையானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் பதவியை வகிக்காது ஒழிதல் வேண்டும்.

(4) மதியுரைச் சபையின் எவரேனும் உறுப்பினர் இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர், 74 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எவ்வுறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாது எஞ்சியுள்ள பதவிக்காலத்துக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(6) மதியுரைச் சபையின் எவரேனும் உறுப்பினர் சுகயீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய உறுப்பினர், அத்தகைய இயலாமை பற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அதன்மேல் அமைச்சர், 74 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதிக்கு அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

*மதியுரைச் சபை உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம்*

**78.** மதியுரைச் சபையின் ஒவ்வோர் உறுப்பினரும் அத்தகைய உறுப்பினர் இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு பதவிக்காலத்துக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அவர் அகற்றப் பட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடைய வராதலும் வேண்டும்.

*உறுப்பினர் களின் ஊதியம்*

**79.** மதியுரைச் சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசித்து, அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில், அத்தகைய ஊதியம் அதிகாரசபையின் நிதியத்தி லிருந்து செலுத்தப்படலாம்.

*மதியுரைச் சபையின் கூட்டங்கள்*

**80.** (1) மதியுரைச் சபையின் தவிசாளர் சமுகமளித்திருப்பின் மதியுரைச்சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அவர் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் வராதிருப்பின், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவென, சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் தம்முள் ஒருவரைத் தேர்ந்தெடுத் தல் வேண்டும்.

(2) மதியுரைச் சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) மதியுரைச் சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற தவிசாளர் அல்லது உறுப்பினர், அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

(4) மதியுரைச் சபையின் முடிவெடுப்பதற்கான எல்லாக் கருமங்களும் மதியுரைச் சபையின் கூட்டமொன்றில் கையாளப்படுதல் வேண்டுமென்பதுடன், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையானோரால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(5) மதியுரைச் சபையின் கூட்டமொன்றில் கவனத்திற் கொள்ளப்பட்ட ஏதேனும் கருமம் மீதான வாக்கெடுப்பில் சமனிலையொன்று காணப்படும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்கும் உறுப்பினர் அவரது மூல வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, மதியுரைச் சபை அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

*மதியுரைச் சபையில் வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக ஏதேனும் செயல் செல்லுபடியற்றதாக ஆக்கப்பட மாட்டாது*

**81.** மதியுரைச் சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

பாகம் X

## சமகால கட்புல-செவிப்புல இணைப்பின் ஊடாக சாட்சியமளித்தல்

*சமகால கட்புல-செவிப்புல இணைப்பு*

**82.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் ஏதேனும் புலனாய்வு, விசாரணை அல்லது எவையேனும் வழக்குநடவடிக்கைகள் தொடர்பில், விடயத்துக்கேற்ப,-

(அ) சான்றளிப்பதற்கு;

(ஆ) சான்றைப் பெற்றுக்கொள்வதற்கு; அல்லது

(இ) கூற்றொன்றை அளிப்பதற்கு,

விரும்புகின்ற எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவர், சாட்சி அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரி, இலங்கையி னுள் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள தொலைவிட மொன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக அத்தகைய சான்றைக் கொடுப்பதற்கு அல்லது பெறுவதற்கு, அல்லது அத்தகைய கூற்றை அளிப்பதற்கு அத்தகைய நீதிமன்றத் துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு, நீதியின் மிகச்சிறந்த நலன்களுக்காகவும் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு வழங்கப்படவுள்ள பாதுகாப்பு வழிமுறையொன்றாகவும் அத்துடன் 84 ஆம் மற்றும் 85 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமையவும், அத்தகைய நீதிமன்றம் அல்லது ஆணைக்குழுவுக்கும் மற்றும் தோதானதெனக் கருதப்படுகின்றவாறானதும் (இச்சட்டத்தில் ஒரு "தொலைவிடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையினுள்

அல்லது இலங்கைக்கு வெளியே இருப்பதுமான குறித்துரைக்கப்பட்ட வொரு தொலைவிடத்துக்கும் இடையேயான சமகால கட்புல-செவிப்புல இணைப்பைப் பயன்படுத்தி, விடயத்துக்கேற்ப, அத்தகைய சான்றைக் கொடுப்பதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு, அல்லது அத்தகைய கூற்றை அளிப்பதற்கு அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு, சாட்சிக்கு அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு அனுமதியளிக்கலாம்.

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, தொலைவிடமொன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 124 ஆம் பிரிவின்கீழான அடையாள அணிவகுப்பொன்றை நடாத்துவதற்கு அல்லது நடாத்த அதிகாரமளிப்பதற்கு நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு தகைமைவாய்ந்ததாதல் வேண்டும்.

(3) நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளை அடிப்படையாகக்கொண்ட அதன் சொந்தப் பிரேரணையின் மீது, 84 ஆம் மற்றும் 85 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றம் அல்லது ஆணைக்குழுவுக்கும் மற்றும் அத்தகைய நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய தொலைவிடத்துக்கும் இடையேயான சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக, எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஏதேனும் சான்றை அல்லது கூற்றைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பதிவுசெய்யலாம்.

(4) நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு, விடயத்துக்கேற்ப, (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் சான்றைக் கொடுப்பதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு அல்லது ஏதேனும் கூற்றை அளிப்பதற்கு அனுமதி வழங்குகின்றவிடத்து அல்லது ஏதேனும் சான்றை அல்லது கூற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் பதிவுசெய்வதற்கும் முடிவுசெய்கின்றவிடத்து, அதிகாரசபையானது, அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் கோரிக்கையின்மீது, சாத்தியமான சிறந்தளவுக்கு, அதனது

வளங்களின் கிடைக்கத்தகுதன்மைக்கு அமைவாக, பயனுறுதியுள்ள இணைப்பொன்றைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் அவசியமாகக் கூடியவாறான நிதி மற்றும் வேறு வளங்கள் என்பன வழங்கப்படு வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

விண்ணப்பம் ஒன்றை ஆதாரப் படுத்தலும் விண்ணப்பம் ஒன்றுபற்றி அறிவித்தல் கொடுத்தலும்

**83.** (1) (அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் அல்லது சாட்சியொருவர் -

(i) இலங்கையினுள் உள்ள தொலைவிடமொன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக சான்றைக் கொடுப்பதற்கு அல்லது கூற்றொன்றை அளிப்பதற்கு 82 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்ப மொன்றைச் செய்ய உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பமானது அத்தகைய சான்று அல்லது கூற்று, விடயத்துக்கேற்ப, கொடுக்கப்பட வேண்டுமென அல்லது அளிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் படுவதற்கு ஆகக்குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் நீதிமன்றத்தின்முன் அல்லது ஆணைக்குழுவின்முன் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்;

(ii) இலங்கைக்கு வெளியேயுள்ள தொலைவிடமொன்றி லிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக சான்றைக் கொடுப்பதற்கு அல்லது கூற்றொன்றை அளிப்பதற்கு 82 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைச் செய்ய உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பமானது அத்தகைய சான்று அல்லது கூற்று, விடயத்துக்கேற்ப, கொடுக்கப்பட வேண்டுமென அல்லது அளிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுவதற்கு ஆகக்குறைந்தது அறுபது நாட்களுக்கு முன்னர் நீதிமன்றத்தின்முன் அல்லது ஆணைக்குழுவின்முன் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) சட்ட வலுவுறுத்தல் அதிகாரியொருவர் 82 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைச் செய்ய உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய சட்ட வலுவுறுத்தல் அதிகாரி இயைபான நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு விண் ணப்பத்தைச் செய்யமுன்னர், அத்தகைய நோக்கத்துக்கான அனுமதிக்காக நியாயாதிக்கமுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர், சாட்சி அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரி 82 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைச் செய்ய உட்கருதுகின்ற விடத்து, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர், சாட்சி அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யமுன்னர் அத்தகைய விண்ணப்பம் பற்றிய நியாயமான முன்னறிவித்தலை சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும் மற்றும் அத்தகைய புலனாய்வுக்கான, விசாரணைக்கான அல்லது வழக்குநடவடிக்கைகளுக்கான இயைபான எல்லாத் திறத்தவர் களுக்கும் கொடுத்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XI ஆம் அத்தியாயத்தின் நியதிகளின் படி நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின்போது, குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் இன்னமும் அடையாளம் காணப்படாதிருப்பின் அல்லது பெயர்குறிப்பிடப்படாதிருப்பின், அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரைக் கண்டுபிடிக்க முடியாதிருப்பின் அல்லது அவர் தலைமறைவாகியிருப்பின் அல்லது புலனாய்வின் இரகசியத் தன்மையைப் பேணுவதற்கு அது அவசியமாகவிருப்பின், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் கூற்றொன்று, எவரேனும் திறத்தவருக்கு அறிவித்தல் கொடுக்காமல், நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழு வின் அனுமதியுடன் எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியினால் பதிவுசெய்யப்படலாம். குற்றஞ்சாட்டப்பட்டவர் அடையாளம் காணப்படுமிடத்து, பெயர்குறிப்பிடப்படுமிடத்து, கண்டுபிடிக்கப் படுமிடத்து அல்லது கைதுசெய்யப்படுமிடத்து, அத்தகைய சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அத்தகைய கூற்றின் கிடைக்கக்கூடிய

தன்மையை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் விளக்கம் தொடங்கப்பட முன்னர் அத்தகைய கூற்றின் எழுத்துப்பிரதியொன்றை அல்லது அத்தகைய கூற்று உள்ளடங்கியுள்ள தரவுக் களஞ்சியப்படுத்துகை சாதனமொன்றை அவருக்கு வழங்குதலும் வேண்டும்.

*(3)* இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பமொன்றுபற்றிய அறிவித்தலைப் பெறுகின்ற சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது எவரேனும் திறத்தவர், அத்தகைய விண்ணப்பம்பற்றிய அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து பதினைந்து வேலைநாட்களுக்குள், எந்த நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முன்னர் புலனாய்வு, விசாரணை அல்லது வழக்குநடவடிக்கை நடாத்தப்படவுள்ளதோ அந்த நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு அவரது முறையீடுகளைச் செய்யலாம் என்பதுடன் அத்தகைய நீதிமன்றம் அல்லது ஆணைக்குழுவானது அத்தகைய முறையீடுகள் பெறப்பட்டதிலிருந்து பதினைந்து வேலைநாட்களுக்குள் அத்தகைய முறையீடுகள் பற்றிய அதனது முடிபை அதற்கான காரணங்களுடன் சேர்த்துச் செய்தலும் மற்றும் அறிவித்தலும் வேண்டும்.

*(4)* எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர், சாட்சி அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு தொலைவிடமொன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக, விடயத்துக்கேற்ப, அத்தகைய சான்றை அல்லது கூற்றைக் கொடுப்பதற்கு, பெற்றுக்கொள்வதற்கு அல்லது அளிப்பதற்கு இனிமேலும் தேவை ஏற்படாதவிடத்து, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர், சாட்சி அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அத்தகைய நிகழ்வை, விடயத்துக்கேற்ப, சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அல்லது ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

*நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு தொழில்நுட்ப மற்றும் வேறு தேவைப் பாடுகளுடன் திருப்திப்படுதல்*

**84**. நீதிமன்றமொன்று அல்லது ஆணைக்குழுவொன்று, கீழே குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அது திருப்தியுற்றால் மாத்திரம், தொலைவிடமொன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக ஏதேனும் சான்றைக் கொடுப்பதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு, அல்லது ஏதேனும் கூற்றை அளிப்பதற்கு,

அல்லது ஏதேனும் சான்றை அல்லது கூற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பதிவுசெய்வதற்கும் அனுமதிக்கலாம்:-

(அ) எந்த வளவுகளில் நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு அமர்கின்றதோ அந்த வளவுகளும் தொலைவிடமும் -

(i) வழக்குநடவடிக்கைகளுக்கு நேரடியாக இயைபாகவுள்ளவரும் அத்தகைய தொலைவிடத்தில் சமுகமளித்துள்ளவருமான ஆட்களைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் வழக்குநடவடிக்கைகளுக்கு நேரடியாக இயைபாகவுள்ளவரும் அத்தகைய வளவுகளில் சமுகமளித்துள்ளவருமான ஆட்களை இயலச் செய்விக்கின்ற; அத்துடன்

(ii) வழக்குநடவடிக்கைகளுக்கு நேரடியாக இயைபாகவுள்ளவரும் அத்தகைய வளவுகளில் சமுகமளித்துள்ளவருமான ஆட்களைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் வழக்குநடவடிக்கைகளுக்கு நேரடியாக இயைபாகவுள்ளவரும் அத்தகைய தொலைவிடத்தில் சமுகமளித்துள்ளவருமான ஆட்களை இயலச் செய்விக்கின்ற,

போதிய வசதிகளுடன் அமைந்தவையாக இருத்தல்;

(ஆ) பின்வருவனவற்றுக்காக அல்லது அவை தொடர்பாக நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் தேவைப்பாடு -

(i) கட்புல-செவிப்புல இணைப்பின் வடிவம்;

(ii) இணைப்பைத் தாபிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணம் அல்லது உபகரண வர்க்கம்;

(iii) ஒளிப்படக்கருவிகளின் தளவமைப்பு;

(iv) ஒளிபரப்புகையின் நியமம் அல்லது வேகம்;

(v) தொடர்பாடலின் தரம்; அத்துடன்

(vi) இணைப்புடன் தொடர்புபட்ட வேறேதேனும் கருமம்;

(இ) தலைமைதாங்கும் நீதிபதி, நீதிவான் அல்லது ஆணைக்குழு அவசியமானதெனக் கருதக்கூடிய வேறேதேனும் தேவைப்பாடு:

ஆயின் எவ்வாறாயினும், இப்பந்தியின் கீழ் தலைமை தாங்கும் நீதிபதியினால், நீதிவானால் அல்லது ஆணைக் குழுவால் விதிக்கப்படக்கூடிய தேவைப்பாடுகள் இப்பிரிவில் அடங்கியுள்ள ஏதேனும் ஏற்பாட்டுக்கு ஒவ்வாதனவாக இருத்தலாகாது.

*நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு இணைப்பு முதலியவற்றின் துல்லியத்தன்மை பற்றி தன்னளவில் திருப்திப்படுதல்*

**85.** *(1)* ஒரு நீதிமன்றம் அல்லது ஓர் ஆணைக்குழு, ஏதேனும் தொலைவிடத்திலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக் கூடாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவரின் அல்லது சட்சியொருவரின் சான்றை அல்லது கூற்றைப் பதிவு செய்யத் தொடங்கமுன்னர், அந்நோக்கத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியிலும் நேரத்திலும் -

(அ) அத்தகைய சமகால கட்புல-செவிப்புல இணைப்பானது தொழில்நுட்பரீதியில் துல்லியமாகவும் மற்றும் நம்பத் தகுந்ததாகவும் உள்ளதென்று தன்னளவில் திருப்தியுறுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் பெயர்குறிக்கப்படவேண்டிய நீதித்துறை அலுவலரொருவர் அல்லது பகிரங்க அலுவலரொருவர் அத்தகைய தொலைவிடத்தில் சமூகமளித்துள்ளாரென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட நீதித்துறை அலுவலரை அல்லது பகிரங்க அலுவலரை -

(அ) கூற்றைப் பதிவுசெய்யமுன்னர் அல்லது அதன்பின்னர், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரையும் அல்லது சாட்சியையும் மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்கு நேரடியாக இயைபாகவுள்ளவரும் அத்தகைய தொலை விடத்தில் சமூகமளித்துள்ளவருமான வேறு எவரேனு மாளையும் நேர்காணல் செய்யும்படியும்; அத்துடன்

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி தன்னிச்சையாகவும் மற்றும் ஏதேனும் வலுக்கட்டாயம், நிர்ப்பந்தப்படுத்துகை அல்லது செல்வாக்குச் செலுத்துகை இல்லாமலும், அல்லது ஏதேனும் வெகுமதியின் அல்லது அவாநிறைவேற்றுகையின் விளைவொன்றாக அல்லா மலும் கூற்றை அளிக்கின்றாரா அல்லது அளித்தாரா என்பதைக் குறிப்பிட்டு அத்தகைய நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு, அவரது அவதானிப்புக் களுடன் சேர்த்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும்படி யும்,

தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "பகிரங்க அலுவலர்" என்பது இலங்கை வெளிநாட்டுச் சேவையில் சேவையாற்றுகின்ற அலுவலரொருவரையும் உள்ளடக்குகின்றது.

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்குள்ள நியாயமான விளக்கத்துக்கான உரிமை

**86.** ஒரு நீதிமன்றம் அல்லது ஓர் ஆணைக்குழு, இச்சட்டத்தின்கீழ் தொலைவிடமொன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக, விடயத்துக்கேற்ப, சான்றைக் கொடுப்பதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு அல்லது கூற்றொன்றை அளிப்பதற்கு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு, சாட்சிக்கு அல்லது சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு அனுமதி

வழங்கமுன்னர், அத்தகைய தொலைவிடத்திலிருந்து அத்தகைய முறைகளுக்கூடாக அத்தகைய சான்றை அல்லது கூற்றைப் பெற்றுக் கொள்வதும் மற்றும் பதிவுசெய்வதும் -

(அ) நீதியின் மிகச்சிறந்த நலன்களைப் பாதுகாக்கின்றனவா என்றும்; அத்துடன்

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்குள்ள நியாயமான விளக்கமொன்றுக்கான உரிமைக்குக் கேடுவிளைவிக்க மாட்டாதா என்றும்,

தீர்மானித்தல் வேண்டும்.

இலங்கையின் இராசதந்திரத் தூதரகம் இலங்கைக்கு வெளியேயுள்ள தொலைவிடமாக இருத்தல்

**87**. இச்சட்டத்தின்கீழ் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் தொலைவிடத்திலிருந்து எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஏதேனும் சான்று அல்லது கூற்று கொடுக்கப்படவேண்டி அல்லது பெற்றுக்கொள்ளப் படவேண்டி அல்லது அளிக்கப்படவேண்டி இருக்கின்றவிடத்து, எந்த நாட்டிலிருந்து அத்தகைய சான்று அல்லது கூற்று கொடுக்கப்படவேண்டி, பெற்றுக்கொள்ளப்படவேண்டிய அல்லது அளிக்கப்படவேண்டி உள்ளதோ அந்த நாட்டிலுள்ள இலங்கையின் இராசதந்திரத் தூதரகத்திலிருந்தான சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக அவ்வாறு அது கொடுக்கப்படுதல், பெற்றுக் கொள்ளப்படுதல் அல்லது அளிக்கப்படுதல் வேண்டும்.

கட்புல-செவிப்புல இணைப்புக்கான அனுமதியை வேறுபடுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான கட்டளை

**88**. நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு, நீதியின் மிகச்சிறந்த நலனுக்காகவும் மற்றும் பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும், எவையேனும் வழக்குநடவடிக்கைகளுக்கான இயைபான திறத்தவர்களுக்குரிய அறிவித்தலுடன், தொலைவிடம் ஒன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக அத்தகைய வழக்குநடவடிக்கைகள் தொடர்பிலான சான்றை அல்லது கூற்றைப் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியொன்றை வேறுபடுத்தி அல்லது இல்லாதொழித்து கட்டளையொன்றை ஆக்கலாம்.

*சாட்சியொருவர் நீதிமன்றத்தின் சாட்சியொரு வராகக் கருதப்படுதல்*

**89**. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தொலைவிடம் ஒன்றிலிருந்து சமகால கட்புல-செவிப்புல இணைப்புக்கூடாக சான்று கொடுக்கின்ற அல்லது கூற்றொன்றை அளிக்கின்ற குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் அல்லது சாட்சியொருவர், எல்லா நோக்கங்களுக்காகவும், நீதிமன்றத்தின் முன்னர் சான்று கொடுக்கின்ற அல்லது கூற்றொன்றை அளிக்கின்ற குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவராக அல்லது சாட்சியொருவராக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக “நீதிமன்றம்” என்பது, எந்த நீதிமன்றமொன்றின் முன்னர் எவையேனும் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் நடாத்தப்பட்டு வருகின்றனவோ அந்தவொரு நீதிமன்றம் எனப் பொருள்படும்.

## பாகம் XI

### *நிதி*

*அதிகாரசபையின் நிதியம்*

**90**. (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நிதியத்துக்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) அதிகாரசபையின் பாவனைக்கெனப் பாராளுமன்றத்தால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இலங்கைக்குள்ளேயுள்ள அல்லது இலங்கைக்கு வெளியே யுள்ள ஏதேனும் மூலத்திலிருந்து கொடைகள், நன்கொடை கள், உதவுதொகைகள், விருப்பாவணக் கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை அதன் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் மற்றும் நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*பாதுகாப்பு நிதியம்*

**91.** (1) (இச்சட்டத்தில், "பாதுகாப்பு நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய நிதியம் எனவழைக்கப்படுகின்ற நிதியமொன்று இருத்தல் வேண்டும்.

(2) பாதுகாப்பு நிதியம், அதிகாரசபையினால் நிருவகிக்கப்படுதலும் முகாமைசெய்யப்படுதலும் வேண்டும்.

(3) பாதுகாப்பு நிதியத்தினுள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) அத்தகைய பாதுகாப்பு நிதியத்துக்காக பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இலங்கைக்குள்ளேயுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் மூலத்திருந்து கொடைகள், நன்கொடைகள், உதவுதொகைகள், விருப்பாவணக் கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பாதுகாப்பு நிதியத்துக்கு அனுப்பப்படுவதற்காக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) பிரிவு 65 இன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றமொன்றினால் அனுப்பப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(4) பின்வரும் கொடுப்பனவுக்காக அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் பாதுகாப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் ஊறுக்காக அவர்களுக்கான நட்டஈடு;

(ஆ) பிரிவு 70 இன்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோருக்கு வழங்கப்பட்ட இடைக்கால பணவளிப்புக்கள்; அத்துடன்

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவராக இருப்பதன் விளைவாக இறந்துள்ள அல்லது உடல்ரீதியாக அல்லது உளரீதியாக தகுதியற்றவராக ஆக்கப்பட்ட குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரில் தங்கியிருக்கின்ற குடும்ப உறுப்பினர்களுக்கும், தங்கியிருக்கின்ற கிட்டிய இரத்த உறவினர்களுக்கும் மற்றும் தங்கியிருக்கின்ற வேறு எவரேனும் ஆளுக்குமான நட்டஈடு.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, பாதுகாப்பு நிதியத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் பாதுகாப்பு நிதியத்தின் வருமானமும் செலவினமும் மற்றும் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தலும் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்*

**92.** (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வேறெல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் நிதியத்தினதும், பாதுகாப்பு நிதியத்தினதும் கணக்குகளின் கணக்காய்வுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் நிதியத்தினதும் பாதுகாப்பு நிதியத்தினதும் நிதிசார்ந்த கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் XII

## **பொதுவானவை**

ஆண்டறிக்கை

**93.** (1) அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள், அந்த நிதியாண்டின் போது அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், பின்வரும் ஆவணங்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்று அவ்வறிக்கையுடன் இணைக்கப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்:-

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து, அவ்வாண்டுக்கான அதிகாரசபையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்; அத்துடன்

(ஆ) அவசியமான கொள்கை மற்றும் சட்ட மறுசீரமைப்புக்களுக்கான முன்மொழிவுகள் உட்பட, அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எந்த ஆண்டுடன் தொடர்புபட்டனவோ அந்த ஆண்டை உடனடுத்துப் பின்தொடர்கின்ற ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் பற்றிய ஓர் அறிக்கை.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகளை அவை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின்முன் இடுதல் வேண்டும்.

தத்துவங்கள் முதலியவற்றைப் பிரயோகிப்பதில் தலையீடு

**94**. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கையில், புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் சட்டபூர்வமான அதிகாரமின்றி ஏதேனும் நீதிமன்றத்தில், ஆணைக்குழுவில், அதிகாரசபையில், சபையில், பாதுகாப்புப் பிரிவில், மதியுரைச் சபையில் அல்லது எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியுடன் அல்லது பகிரங்க அல்லது நீதித்துறை அலுவலருடன் தலையிடுகின்ற அல்லது அதனை அல்லது அவரைத் தடுக்கின்ற அல்லது தலையிட அல்லது தடுக்க எத்தனிக்கின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

ஆட்களின் குழுவொன்றினால் புரியப்படும் தவறுகள்

**95**. இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்களின் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது, அந்த ஆட்களின் குழுவானது-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அப்போது, தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளராக, முகாமையாளராக, அலுவலராக அல்லது சேவையாளராக இருந்த ஒவ்வோராளும்;

(ஆ) குழுமமொன்றாக இருப்பின், அப்போது, தவறு புரியப்பட்ட நேரத்தில் அந்தக் குழுமத்தின் பங்காளர் ஒருவராகவும் அதன் பிரதம நிறைவேற்று அலுவலர் ஒருவராகவும் இருந்த ஒவ்வோராளும்;

(இ) குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருப்பின், அப்போது, தவறு புரியப்பட்ட நேரத்தில், அத்தகைய குழுவின் உறுப்பினரொருவராக இருந்த ஒவ்வொரு தனியாளும் மற்றும் அத்தகைய குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவிருந்த ஒவ்வோர் அலுவலரும்; அல்லது

(ஈ) உள்ளூர் அதிகாரசபையொன்றாக இருப்பின் அல்லது அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் சார்பில் செயற்படுவதற்கு உள்ளூர் அதிகாரசபை தொடர்பிலான ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையாக இருப்பின், அப்போது, தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய அதிகாரசபையின் தவிசாளராக இருந்த ஆள்,

விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆள், தனியாள், அலுவலர் அல்லது தவிசாளர், தவறானது அவரது அறிவுக்கெட்டாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான உரிய விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் அத்தகைய ஆள் பிரயோகித்தாரென்று நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் எண்பித்தாலொழிய, அவர் அத்தவறைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

இரகசியம் பேணுதல்

**96.** *(1)* இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்கு அவசியமானதாக வந்தாலன்றி, ஆளெவரும், எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர் இச்சட்டத்தின்கீழ் உதவியையோ அல்லது பாதுகாப்பையோ பெறுகின்றாரா அல்லது பெற்றுள்ளாரா எனத் தெரிவிப்பதற்குக் கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

*(2)* ஆளெவரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் நோக்கத்துக்காகத் தவிர வேறுவகையாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது

சாட்சியொருவர் இச்சட்டத்தின் கீழ் உதவியையோ அல்லது பாதுகாப்பையோ பெறுகின்றாரா அல்லது பெற்றுள்ளாரா என்பதனை எவரேனும் வேறு ஆளுக்கு வெளிவிடுதலாகாது.

*சாட்சியம் ஒன்றின் நம்பகத் தன்மையை மதிப்பீடு செய்தல்*

**97.** ஏதேனும், நீதிமன்றத்தில் அல்லது ஆணைக்குழுவில், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரினால் அல்லது சாட்சியொருவரினால் வழங்கப்பட்ட சாட்சியமொன்றின் நம்பகத் தன்மையை மதிப்பீடு செய்தலில் குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர் இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் உதவியை அல்லது பாதுகாப்பைப் பெறுகின்றாரா அல்லது பெற்றுள்ளாரா என்ற நிகழ்வு இயைபானதாக இருத்த லாகாது.

*அதிகாரசபையின் அலுவலர்களும் வேறு ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்*

**98.** சபையின் உறுப்பினர்கள், பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் அத்துடன் அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் மதியுரைஞர்கள் என்போர் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினதும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் கருத்தெல்லைக்குட்படவும் அத்துடன் அவற்றின் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் அலுவலர்கள் சமாதான அலுவலர்களாக இருத்தல் வேண்டும்*

**99.** அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் பதவிவரிசை யிலுள்ள மற்றும் அப்பதவிவரிசைக்கு மேலுள்ள ஒவ்வோர் அலுவலரும், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக சமாதான அலுவலரொருவராக இருத்தல் வேண்டும்.

*அதிகாரசபை யானது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன் றாகக் கருதப்படுதல்*

**100.** அதிகாரசபையானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

விதிகள்

**101.** (1) அதிகாரசபை, பின்வரும் கருமங்களுட்பட, எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:-

(அ) பிரிவு 52 இன்கீழான தொழில் பற்றிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள், அதிகாரசபையின் அலுவலர்களினதும் வேறு ஊழியர்களினதும் ஊதியம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்குமான நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்; அத்துடன்

(ஆ) பிரிவு 54 இன்கீழ், பாதுகாப்புப் பிரிவின் அலுவல்கள் பற்றிய அந்தரங்கத்தன்மையினதும் மற்றும் பாதுகாப்புப் பிரிவின் பொலிசு அலுவலர்களின் வகைகூறலினதும் உறுதிப்படுத்துகை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், செயல்முறைக்குகந்தவகையில் விரைவாக, வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**102.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பாக அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) (அ) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களுக்குள், அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னரே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**103.** (1) இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. நீக்குகையும் பேணல்களும்

(2) (இப்பிரிவில், ''நீக்கப்பட்ட சட்டம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் நீக்குகை எவ்வாறிருப்பினும்-

(அ) நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் முகாமைச் சபையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், நியமனத் தேதியிலிருந்து பயனுறும் வகையில், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் முகாமைச் சபையின் உறுப்பினரொருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்

முன்கூட்டியே பதவிவிலகினால், இறந்தால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் எப்பதவிக்காலத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளாரோ அவரது அப்பதவிக்காலம் முடிவுறும்வரை அத்தகைய உறுப்பினரொருவராகத் தொடர்ந்து பதவிவகித்தலும் வேண்டும்;

(ஆ) நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் தொழிலில் இருந்த எல்லா ஊழியர்களும், நியமனத் தேதியிலிருந்து பயனுறும் வகையில், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் அத்துடன் நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், குற்றவழக்குகளும், வழக்குகளும், வழக்குநடவடிக்கைகளும், கருமங்களும் அல்லது காரியங்களும், நியமனத் தேதியிலிருந்து பயனுறும் வகையில், இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டுள்ள துடர்ச்சிகளாக, குற்றவழக்குகளாக, வழக்குகளாக, வழக்குநடவடிக்கைகளாக, கருமங்களாக அல்லது காரியங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் வழக்கில், கருமத்தில், வழக்குநடவடிக்கையில் அல்லது காரியத்தில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் அல்லது வேறு குழுவினால் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபைக்குச் சார்பாக

அல்லது அதற்கெதிராகச் செய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு, நியமனத் தேதியிலிருந்து பயனுறும்வகையில், இச்சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபைக்குச் சார்பாக அல்லது அதற்கெதிராக செய்யப்பட்ட அல்லது ஆக்கப் பட்ட தீர்வையொன்றாக, கட்டளையொன்றாக அல்லது அளிப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்கவும் வலுவுறுத்தவும்படலாம்;

(உ) நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக் கான தேசிய அதிகாரசபைக்குச் சொந்தமாகவிருக்கின்ற அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும், நியமனத் தேதியிலிருந்து பயனுறும் வகையில், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபைக்கு உரித்தாதல் வேண்டும் என்பதுடன் அவ்வதிகாரசபை யின் ஆதனமாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(ஊ) நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியத்தின் வரவுக்குள்ள எல்லா பணங்களும், நியமனத் தேதியிலிருந்து பயனுறும் வகையில், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பாதுகாப்பு நிதியத்துக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டும்;

(எ) நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக் கான தேசிய அதிகாரசபையின் நிதியத்தின் வரவுக் குள்ள எல்லா பணங்களும், நியமனத் தேதியிலிருந்து பயனுறும் வகையில், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் நிதியத்துக்குக் கைமாற்றப்பட்டன வாதல் வேண்டும்;

(ஏ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையினால் மற்றும் அவ்வதிகாரசபையுடன் செய்யப்பட்டவையும், அத்துடன் நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயுள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையினால் மற்றும் அவ்வதிகாரசபையுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஐ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையினாதாயுள்ளவையும், அத்துடன் நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயுள்ளவையுமான எல்லாத் தனிசுகளும், கடப்பாடுகளும் மற்றும் பொறுப்புக்களும், நியமனத் தேதியிலிருந்து பயனுறும்வகையில், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் தனிசுகளாகவும், கடப்பாடுகளாகவும் மற்றும் பொறுப்புக்களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

பொருள் கோடல்

**104**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

''குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவர்'' மற்றும் ''சிறுவர் சாட்சி'' என்பன முறையே பதினெட்டு வயதிற்குக் குறைவான வயதினையுடைய ஆளொருவராகவும் மற்றும் ஒன்றில் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியொருவராகவோ இருக்கின்றவருமான ஆளொருவர் என்று பொருள்படும்;

''குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்'' என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் எனப் பொருள்படும்.

ஆணைக்குழு என்பது -

(அ) (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்று;

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று;

(இ) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு;

(ஈ) 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு; அத்துடன்

(உ) விசாரணைகளை நடாத்துவதற்கு சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட வேறேதேனும் ஆணைக்குழு,

என்பவற்றை உள்ளடக்குகின்றது;

"கு.அ.உ.ச.உ. சட்டம்" என்பது 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் எனப் பொருள்படும்;

"ஊறு" என்பது, ஆளொருவரின் உடலுக்கு, உள்ளத்திற்கு, புகழுக்கு அல்லது ஆதனத்திற்கு எத்தகையதுமான சட்டவிரோதமாக ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் தீங்கு எனப்

பொருள்படும் என்பதுடன், சார்த்தப்பட்ட பின்வரும் விடயங்களாக அமைகின்ற செயலொன்றின் அல்லது செய்யாமையொன்றின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் பாதிப்பு அல்லது இயலாமை, உணர்ச்சிரீதியான துன்புறுகை, பொருளாதார அல்லது வேறு இழப்பு என்பவற்றையும் உள்ளடக்குகின்றது –

(அ) ஏதேனும் சட்டத்தின்கீழான தவறு;

(ஆ) அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரையின்கீழ் அல்லது 13 ஆம் உறுப்புரையின் (1) ஆம் அல்லது (2) ஆம் பந்தியின்கீழ் உத்தரவாத மளிக்கப்பட்ட ஏதேனும் அடிப்படை உரிமை யின் மீறுகை; அல்லது

(இ) கு.அ.உ.ச.உ. சட்டத்தின்கீழ் உத்தரவாதமளிக் கப்பட்ட ஏதேனும் உரிமையின் மீறல்;

''சட்ட வலுவுறுத்தல் அதிகாரி'' என்பது, தவறொன்று புரிதலையிட்டு புலனாய்வு செய்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவர் அல்லது எவரேனும் வேறு ஆள் எனப் பொருள்படும்;

''அமைச்சர்'' என்பது, நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்;

''ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழு'' என்பது, குற்றத்தைப் புரிவதற்கெனத் தம்மை ஒழுங்கமைத்துள்ள ஆட்களின் குழுவொன்றெனப் பொருள்படும்;

''பகிரங்க அதிகாரசபை'' என்பது, மானியக்கொடை, கடன் என்றவகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தி னால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட

நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபை, கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும்;

"இயைபான அதிகாரி" என்பது, ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலைகளைப் பொறுத்து குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருடன் அல்லது சாட்சியுடன் சட்டமுறையாக ஊடாடுகின்ற ஒரு சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அல்லது பகிரங்க அதிகாரசபை எனப் பொருள்படும்;

"மீட்டளிக்கும் நீதி" என்பது, நீதியின் இலக்குகளை எய்தும் நோக்கத்துக்காக, பிணக்கொன்றுக்கான எல்லாத் திறத்தவர்களும் எந்த நடவடிக்கைமுறைக்கூடாக இணக்கமுறையான செயல்முறையொன்றில் ஈடுபடக் கூடுமோ, அந்தவொரு நடவடிக்கைமுறையின் படிமுறை வளர்ச்சி எனப் பொருள்படும்;

"குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்" என்பது, ஏதேனும் ஊறினால் துன்புற்றுள்ள ஆளொருவர் எனப் பொருள் படும் என்பதுடன், தோதானவிடத்து, பின்வருவோரை யும் உள்ளடக்கும் :-

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினரொருவர் அல்லது குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரில் தங்கி யிருக்கும் ஒருவர்;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவ ருக்கு குறிப்பிடத்தக்களவு முக்கியமான ஆளொ ருவர்;

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு உதவுவதற்காக இடையீடு செய்வதிலான ஊறினால் துன்புறுகின்ற ஆளொருவர்;

(ஈ) பலியாக்கப்படுவதிலிருந்து வேறோர் ஆளைத் தடுப்பதிலான ஊறினால் துன்புறுகின்ற ஆளொருவர்; அத்துடன்

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவர் ஒருவர்; அத்துடன்

"சாட்சி" என்பது -

(அ) சார்த்தப்பட்ட தவறொன்றின் புரிகை அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையின் மீறுகை அல்லது கு.அ.உ.ச.உ. சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமையின் மீறல் தொடர்பில் எந்த ஆளினால் எவரேனும் சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு ஏதேனும் தகவல் வழங்கப்பட்டு அல்லது அவரிடம் முறைப்பாடொன்று செய்யப்பட்டு, அத்தகைய தகவலின் அல்லது முறைப்பாட்டின் அடிப்படையின் மீது புலனாய்வொன்று அல்லது விசாரணையொன்று தொடங்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளதோ அல்லது தொடங்கப்பட்டுள்ளதோ, அந்த எவரேனும் ஆள்;

(ஆ) சார்த்தப்பட்ட தவறொன்றின் புரிகை அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையின் மீறுகை அல்லது கு.அ.உ.ச.உ. சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமையின் மீறல்பற்றி சட்டவலுவுறுத்தல் அதிகாரியொருவரினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின் அல்லது

விசாரணையொன்றின்போது ஏதேனும் தகவலை வழங்கியுள்ள அல்லது கூற்றொன்றை அளித்துள்ள எவரேனும் ஆள்;

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரினால் செய்யப்பட்ட முறைப்பாடொன்று தொடர்பில் அல்லது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரினால் அல்லது அவர் சார்பில் தொடுக்கப்பட்ட ஏதேனும் சட்ட வழக்கில் கூற்றொன்றை அளித்துள்ள, சத்தியக் கடதாசியொன்றைச் சமர்ப்பித்துள்ள அல்லது சான்றளித்துள்ள எவரேனும் ஆள்;

(ஈ) ஆணைக்குழுவொன்றுக்கு ஏதேனும் தகவலை அல்லது தொடர்பாடலை வழங்கியுள்ள அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னர் சான்று கொடுத்துள்ள எவரேனும் ஆள்;

(உ) ஒரு சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு, நீதிமன்றத்துக்கு அல்லது ஓர் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தகவலின் அல்லது அளிக்கப்பட்ட கூற்றொன்றின் அடிப்படையில், அல்லது அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வாக்குமூலத்தின் அல்லது ஒரு சத்தியக்கடதாசியின் அடிப்படையில், வேறு எவரேனும் ஆளுக்கெதிரான ஏதேனும் வழக்குநடவடிக்கையில், புலனாய்வில் அல்லது விசாரணையில் ஏதேனும் முறையில் பங்குபற்றுமாறு ஒரு நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் தான் அழைப்பாணை விட்டழைக்கப்படலாமென்று நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள எவரேனும் ஆள்;

(ஊ) நீதிமன்றமொன்றின் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் கூற்றொன்றை அளிப்பதற்கு, சத்தியக்கடதாசி ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு, ஏதேனும் ஆவணம், அறிக்கை அல்லது விடயப்பொருள் பற்றிச் சான்றளிப்பதற்கு அல்லது அதனைக் காண்பிப்பதற்கு அத்தகைய நீதிமன்றத்திடமிருந்து அல்லது ஆணைக்குழுவிடமிருந்து அழைப்பாணைகளைப் பெற்றுள்ள எவரேனும் ஆள்; அல்லது

(எ) பகிரங்க அலுவலர் ஒருவராகவிருந்து, சார்த்தப்பட்ட தவறொன்றின் புரிகை அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையின் மீறுகை அல்லது கு.அ.உ.ச.உ. சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமையின் மீறல்தொடர்பில் நீதியை நிருவகிப்பதில் ஏதேனும் முறையில் சம்பந்தப்பட்டுள்ள ஆள்;

எனப்பொருள்படும் என்பதுடன் பின்வருவோரையும் உள்ளடக்கும்:-

(i) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர்;

(ii) சிறுவர் சாட்சி ஒருவர்;

(iii) சிறுவர் சாட்சியொருவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்;

(iv) அத்தகைய சாட்சியின் குடும்ப உறுப்பினர் ஒருவர் அல்லது அத்தகைய சாட்சியில் தங்கியுள்ள ஒருவர்;

(v) எவரேனும் சாட்சிக்கு குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவமுள்ள வேறு எவரேனும் ஆள்;

(vi) நிபுணத்துவச் சாட்சி ஒருவர்; அத்துடன்

(vii) சார்த்தப்பட்ட தவறொன்றின் புரிகை அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையின் மீறுகை அல்லது கு.அ.உ.ச.உ. சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமையின் மீறல்பற்றி சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் சார்பில் ஒரு நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முன்னர் சான்றளிப்பதற்கு அழைப்பாணை விட்டழைக்கப் பட்டுள்ள எவரேனும் ஆள்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**105.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

**முதலாம் அட்டவணை** (பிரிவு 10)

**உரிமைகளின் அல்லது உரித்துடைமைகளின் மீறல் அல்லது மறுப்பு மீதான முறைப்பாடுகள் பற்றிய புலனாய்வுக்கும் விசாரணைக்கும் ஏற்புடையற் பாலதான நடவடிக்கைமுறை**

**1.** (1) இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் பெறப்பட்ட முறைப்பாடு ஒவ்வொன்றும் பின்வருமாறு வகுதிப்படுத்தப்படல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையினால் கையாளப்படவேண்டியவையும், இச்சட்டத்தின்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் மீறல் அல்லது மறுப்பு, அல்லது உடனிகழவுள்ள மீறல் அல்லது மறுப்பு தொடர்பானவையுமான முறைப்பாடுகள்;

(ஆ) பாதுகாப்புப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டியவையும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் புரிகை தொடர்பானவையுமான முறைப்பாடுகள்;

(இ) இச்சட்டத்தின் நியதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படாத கருமங்கள்.

(2) உட்பந்தி (1) (இ) இன்கீழான முடிபெதுவும், அதிகாரசபையினால் நியமிக்கப்படவேண்டிய, (இவ்வட்டவணையில் ''பணிப்பாளர் (சட்டம்)'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) அதிகாரசபையின் பணிப்பாளர் (சட்டம்) என்பவரின் அங்கீகாரத்துடன் எடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான நடவடிக்கைமுறையொன்றை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நடவடிக்கைமுறை வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

**2**. இவ்வட்டவணையின் 1(1) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாடு பற்றிய ஒரு புலனாய்வு அல்லது விசாரணையானது, பணிப்பாளர் (சட்டம்) என்பவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய அதிகாரசபையின் அலுவலரொருவரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**3**. இவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர் இச்சட்டத்தின் **41** ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**4**. (1) புலனாய்வை அல்லது விசாரணையை நிறைவேற்றுகின்ற அலுவலர், அப்புலனாய்வு அல்லது அவ்விசாரணை பற்றிய குறிப்புக்களை எழுத்தில் எடுக்கவேண்டுமென்பதுடன், நான்கு வாரங்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் -

(அ) சான்றானது, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் ஒரு மீறலை அல்லது மறுப்பை அல்லது உடனிகழவுள்ள மீறலை அல்லது மறுப்பை வெளிப்படுத்துகின்றதா; அல்லது

(ஆ) சான்றானது, முறைப்பாட்டை ஆதாரப்படுத்துவதற்குப் போதுமானதாக உள்ளதா,

என்பதுபற்றிய முடிவெடுப்பொன்றைச் செய்தலும் வேண்டும்.

(2) நான்கு வாரங்களைக்கொண்டவொரு காலப்பகுதியினுள் புலனாய்வை அல்லது விசாரணையை நிறைவுசெய்ய முடியாதிருக்கின்றவிடத்து, அத்தகைய அலுவலர், பணிப்பாளர் (சட்டம்) என்பவரிடமிருந்து காலநீடிப்பொன்றுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**5**. (1) புலனாய்வை அல்லது விசாரணையை நிறைவேற்றுகின்ற அலுவலர், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின்மீதான மீறலொன்று அல்லது மறுப்பொன்று, அல்லது உடனிகழக்கூடிய மீறலொன்று அல்லது மறுப்பொன்று இருந்துள்ளதென்ற முடிவெடுப்பொன்றைச் செய்கின்றவிடத்து, அவர், புலனாய்வின் அல்லது விசாரணையின்போது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பொருளுடனும் மற்றும் சான்று பற்றிய குறிப்புக்களுடனும் சேர்த்து

அவரது விதப்புரைகளுடனான அறிக்கையொன்றை பணிப்பாளர் (சட்டம்) என்பவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய அலுவலர், புலனாய்வை அல்லது விசாரணையை முன்கொண்டு நடாத்துவதற்கான சான்று போதியளவில் காணப்படவில்லையென்ற முடிவெடுப்பொன்றைச் செய்கின்றவிடத்து, அவர், பணிப்பாளர் (சட்டம்) மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதி ஆகியோரின் அங்கீகாரத்துடன் புலனாய்வை அல்லது விசாரணையை நிறுத்துதல் வேண்டும்.

**6**. பணிப்பாளர் (சட்டம்), இவ்வட்டவணையின் 5 ஆம் பந்தியின்கீழ் அவரினால் பெறப்பட்ட புலனாய்வு அல்லது விசாரனை பற்றிய அறிக்கையைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், முறைப்பாடு செய்யப்பட்ட உரிமையின் அல்லது உரித்துடைமையின் மீறலை அல்லது மறுப்பை, அல்லது உடனிகழவுள்ள மீறலை அல்லது மறுப்பை பரிகரிக்கும்படி அல்லது நிவர்த்தி செய்யும்படி இயைபான ஆட்களைப் பணித்தலும் வேண்டும்; அத்தகைய இயைபான ஆட்கள், பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**7**. (1) பணிப்புக்கள் என்றவகையாக இயைபான கருமத்தைத் தீர்த்துவைக்க முடியாதிருக்கின்றவிடத்து அல்லது பணிப்புக்களுக்கு இணங்கியொழுகப்படாதிருக்கின்றவிடத்து, பணிப்பாளர் (சட்டம்), பணிப்பாளர் தலைமையதிபதியுடன் கலந்தாலோசித்து, அத்தகைய நிகழ்வை சபைக்கு அறிக்கையிட்டு அக்கருமம் பற்றிய புலனாய்வொன்றை அல்லது விசாரணையொன்றை நடாத்துவதற்கான குழாமொன்றை நியமிக்கும்படி சபையைக் கோருதல் வேண்டும்.

(2) அத்தகைய கோரிக்கையொன்றைப் பெற்றதன்மேல், சபையானது, கருத்தொருமிப்புடன் சபையின் மூன்று உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழாமொன்றை நியமித்தல் வேண்டும் என்பதுடன், அக்குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவரை அதன் தவிசாளராகப் பெயர்குறித்து நியமித்தலும் வேண்டும்.

(3) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் சார்த்தப்பட்ட மீறலொன்று அல்லது மறுப்பொன்று, அல்லது உடனிகழவுள்ள மீறலொன்று அல்லது மறுப்பொன்று பற்றிய ஒரு புலனாய்வை அல்லது விசாரணையை நடாத்துகின்ற குழாம், இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) குழாத்தினால் புலனாய்வு அல்லது விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏதேனும் கருமம் தொடர்பில் அதன் உறுப்பினர்களுக்கிடையேயான அபிப்பிராய வேறுபாடொன்றின் விடயத்தில், பெரும்பான்மையான உறுப்பினர்களின் அபிப்பிராயம் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

(5) இப்பந்தியின் கீழான புலனாய்வு அல்லது விசாரணை நிறைவுசெய்யப்படும்போது, குழாமானது அதன் விதப்புரைகளுடன் சேர்த்து அது பற்றிய அறிக்கையொன்றைச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) குழாத்தின் அறிக்கையைப் பெற்றதன்மேல், சபையானது, தகுதியானதும் தோதானதும் என அது கருதவேண்டியவாறாக அக்கருமத்தின்மீது அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை**

(பிரிவுகள் 29,30,31 மற்றும் 73)

**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான பாதுகாப்பு எத்தவறுகள் தொடர்பாக அதிகாரசபையினால் அல்லது பாதுகாப்புப் பிரிவினால் வழங்கப்படவேண்டுமோ அத்தவறுகள்**

| | சட்டம் | பிரிவு | தவறு |
|---|---|---|---|
| 1. | தண்டனைச் சட்டக்கோவை (அத்தியாயம் 19) | 296 | கொலை |
| 2. | | 297 | கொலையாகாத குற்றத்துக்கிடமான மனித உயிர்போக்கல் |
| 3. | | 300 | கொலைபுரிய எத்தனம் |
| 4. | | 316 | தன்னிச்சையாகக் கடுங்காயம் விளைத்தல் |
| 5. | | 354 | ஆட்கவர்தல் |
| 6. | | 355 | கொலை புரிவதற்காக ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல் |
| 7. | | 356 | ஆளொருவரை இரகசியமாகவும் முறைகேடாகவும் அடைத்துவைக்கும் உளக்கருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல் |
| 8. | | 357 | ஒரு பெண்ணை அவளின் திருமணம் முதலியவற்றைக் கட்டாயப்படுத்துவதற்கென ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல் |
| 9. | | 358 | கடுங்காயம், அடிமைத்தொழில் முதலியவற்றுக்கு ஆளொருவரை உட்படுத்துவதற்கென ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல் |

| | சட்டம் | பிரிவு | தவறு |
|---|---|---|---|
| 10. | | 360 | பிள்ளையொன்றை, அத்தகைய பிள்ளையொன்றின் உடம்பிலிருந்து அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தைக் களவாடும் உளக்கருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல் |
| 11. | | 360அ | கூட்டிவிடுதல் |
| 12. | | 360ஆ | சிறுவர் பாலியல் சுரண்டல் |
| 13. | | 360இ | விலைப்படுத்துதல் |
| 14. | | 362அ | ஆணொருவர் முறையாகத் திருமணம் செய்துள்ளாரென்ற நம்பிக்கையை வஞ்சனையால் தூண்டுவதன் மூலம் உண்டாகும் மனை வாழ்க்கை |
| 15. | | 362ஆ | இருதாரமணம் |
| 16. | | 362இ | முன்னைய திருமணம் பற்றி மறைத்துப்புரியும் இருதாரமணம் |
| 17. | | 362ஈ | சட்டமுறையான திருமணமின்றி மோசடியான உளக்கருத்துடன் திருமணச் சடங்கு மேற்கொள்ளப்படல் |
| 18. | | 364 | கற்பழிப்பு |
| 19. | | 364அ | முறையில்லாப் புணர்ச்சி |
| 20. | | 365ஆ | பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் |
| 21. | | 373 | அச்சுறுத்திப் பெறுதல் |
| 22. | | 374 | அச்சுறுத்திப் பெறுதற்காக ஆள் ஒருவரைக் காயம் ஏற்படும் என்ற பயத்திற்குட்படுத்தல் அல்லது எத்தனித்தல் |
| 23. | | 375 | ஆள் ஒருவரை மரணம் அல்லது கடுங்காயம் ஏற்படும் என்ற பயத்திற்குட்படுத்தி அச்சுறுத்திப் பெறுதல் |

| | சட்டம் | பிரிவு | தவறு |
|---|---|---|---|
| 24. | | 376 | அச்சுறுத்திப் பெறுதற்காக ஆளொருவரை மரணம் அல்லது கடுங்காயம் ஏற்படும் என்ற பயத்திற்குட்படுத்தல் |
| 25. | | 377 | மரணதண்டனையினால் அல்லது பத்தாண்டு மறியற்தண்டனையினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்று முதலியவற்றை சாட்டிப் பயமுறுத்தி அச்சுறுத்திப் பெறுதல் |
| 26. | | 378 | அச்சுறுத்திப் பெறுதற்காக மரண தண்டனையால் அல்லது பத்தாண்டு மறியற்றண்டனையினால் தண்டிக் கப்படக்கூடிய தவறு பற்றிச் சாட்டி ஆளொருவரைப் பயத்திற்குட்படுத்தல் |
| 27. | | 380 | கொள்ளை |
| 28. | | 381 | கொள்ளை புரிய எத்தனித்தல் |
| 29. | | 382 | கொள்ளை புரிவதில் அல்லது கொள்ளை புரிவதற்கு எத்தனித்தலில் தன்னிச்சையாகக் காயம் விளைத்தல் |
| 30. | | 383 | மரணம் அல்லது கடுங்காயம் விளைக்கும் எத்தனத்துடனான கொள்ளை |
| 31. | | 384 | மரணம் விளைவிக்கக்கூடிய ஆயுதம் தாங்கியபடி கொள்ளைபுரிய எத்தனித்தல் |
| 32. | | 385 | வழமையாக திருட்டைப் புரியும் நோக்கத்துக்காக அலைந்து திரியும் திருடர் கூட்டத்தைச் சேர்ந்திருத்தல் |
| 33. | | 418 | நூறு ரூபா தொகைக்கு அல்லது அதற்குமேல் சேதம் விளைக்கும் உளக்கருத்துடன் தீயினாலான அல்லது வெடிப்பொருளினாலான சொத்தழிவு |
| 34. | | 419 | வீடு முதலியவற்றை அழிக்கும் உளக்கருத்துடன் தீயினாலான அல்லது வெடிப்பொருளினாலான சொத்தழிவு |

| | சட்டம் | பிரிவு | தவறு |
|---|---|---|---|
| 35. | | 420 | தளமுள்ள அல்லது பத்துத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட சுமையுடைய கலமொன்றை அழிக்கும் அல்லது ஆபத்தானதாக்கும் உளக்கருத்துடனான சொத்தழிவு |
| 36. | | 421 | தீயினால் அல்லது ஏதேனும் வெடிப்பொருள் பதார்த்ததினால் புரியப்படும்போதான, 420 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சொத்தழிவு |
| 37. | | 435 | மரண தண்டனை மூலம் தண்டிக்கப்படற்பாலதான தவ றொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல் |
| 38. | | 437 | பத்து ஆண்டுகளுக்கு குறைவான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படக்கூடிய தவ றொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல் |
| 39. | | 438 | காயம், தாக்குதல் முதலியன விளைவிப்பதற்கு முன்னேற்பாடு செய்துகொண்டு வீடத்துமீறல் |
| 40. | | 440 | மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றைப் புரிவதற்காக பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது வலிந்து வீடுபுகுதல் |
| 41. | | 441 | காயம், தாக்குதல் முதலியன விளைப்பதற்கு முன்னேற்பாடு செய்தபின்னர் பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது வலிந்து வீடுபுகுதல் |
| 42. | | 444 | காயம் முதலியன விளைப்பதற்கு முன்னேற்பாடு செய்த பின்னர் இரவில் பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதல் |
| 43. | | 445 | பதுங்கியிருந்து வீடத்துமீறலை அல்லது வலிந்து வீடுபுகுதலை புரியும்பொழுது கடுங்காயம் விளைத்தல் |

| | சட்டம் | பிரிவு | தவறு |
|---|---|---|---|
| 44. | 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம் | 93 | உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றங்களின் நீதிபதிகள், நீதிமுறை அலுவலர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கள் தொடர்பிலான இலஞ்சம் |
| 45. | | 94 | பகிரங்க உத்தியோகத்தர்களை நேர்காண்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் அவாநிறைவை ஏற்றுக்கொள்ளல் |
| 46. | | 96 | பொலிசு உத்தியோகத்தர்கள், சமாதான அலுவலர்கள் மற்றும் வேறு பகிரங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான இலஞ்சம் |
| 47. | | 97 | ஒப்பந்தங்கள் தொடர்பாக உதவி வழங்குதல் அல்லது செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கான இலஞ்சம் |
| 48. | | 98 | கேள்விப்பத்திரங்களை மீளப் பெறுவதனைச் செய்விப்பதற்கான இலஞ்சம் |
| 49. | | 99 | அரசாங்க அலுவல் தொடர்பிலான இலஞ்சம் |
| 50. | | 100 | உரிமைக் கோரிக்கைகளின் கொடுப்பனவு, நியமனங்கள், தொழில்கள், மானியக்கொடைகள், குத்தகைகள் மற்றும் வேறு நன்மைகள் தொடர்பிலான இலஞ்சம் |
| 51. | | 101 | அரசாங்கத்துடன் கையாளுகை களைக் கொண்டுள்ள ஆட்களினால் பகிரங்க உத்தியோகத்தர்களுக்கான இலஞ்சம் |
| 52. | | 102 | உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத் தின் அல்லது அட்டவணைப்படுத்தப் பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினர் ஒருவர் தொடர்பிலான இலஞ்சமும் உள்ளூரதிகார சபை யொன்றின் அல்லது அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட நிறு வனத்தின் உத்தியோகத்தர் தொடர்பிலான இலஞ்சமும் |

| | சட்டம் | பிரிவு | தவறு |
|---|---|---|---|
| 53. | | 103 | உள்ளூரதிகார சபையொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவன மொன்றின் ஆளும் குழுவொன்றின் உறுப்பினரின் வாக்கின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அச்சுறுத்தல்கள் அல்லது மோசடியைப் பயன்படுத்தல் |
| 54. | | 104 | செல்வாக்குச் செலுத்துதல் |
| 55. | | 108 | விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான தவறுகள் |
| 56. | | 111 | ஊழல் |
| 57. | | 125 | நீதிக்கு முட்டுக்கட்டையிடுதல் |
| 58. | (218 ஆம் அத்தியாய மான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம் | 54அ | அபாயகரமான அவுடதங்களை உற்பத்தி செய்தல், வியாபாரஞ் செய்தல், இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் |
| 59 | | 54ஆ | 54அ என்னும் பிரிவின்கீழான தவறொன்றின் புரிகைக்கு உடந்தையளித்தல் அல்லது அத்தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் |
| 60 | 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் | 2 | குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்கு அல்லது சாட்சிக்கு இறப்பு மற்றும் முதலியவற்றையும், குற்றமுறையான அச்சுறுத்தலையும் விளைவித்தல், அரசாங்க ஆதனத்திற்கு சொத் தழிவை ஏற்படுத்துதல் முதலியனவும் |
| 61. | | 3 | இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையாயிருத்தல், சதி செய்தல், எத்தனித்தல் அல்லது தூண்டுதல் |
| 62. | | 12 | இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடையீட்டு அல்லது மட்டுப்பாட்டுக் கட்டளையை மீறு கின்றமை அல்லது மீறிச்செய லாற்றுகின்றமை |

| | சட்டம் | பிரிவு | தவறு |
|---|---|---|---|
| 63. | | 24 | இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கலம் தொடர்பில் அல்லது வானூர்தி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற செயலொன்றைப் புரிதல் |

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*